
கல்கி
KALKI 18-1-1959
30 நயா பைசா


வார முடிவில் வனபோஜனம்,
நண்பர்களின் நகைப்பு,
குளிர்ச்சி தரும் டீயைச்
சிறிது உறிஞ்சினால்,
அது உங்கள் கவலைகளை
எல்லாம் விரட்டி விடும்!
நான்தான் டீ
நான் உங்களுடைய நண்பனும், உங்கள்
நண்பருடைய நண்பனுமாவேன்
TEA BOARD INDIA

PST 206



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


M.V.ராமன்
அளிக்கும்...
அதிசயப்பெண்
முதல் டெக்னிக்கலர் தமிழ் படம்...
கதை, வசனம்
ஜாவர் சீதாராமன்
சங்கீதம்
S.M.சுப்பையா நாயுடு.
டைரக்ஷன்
M.V. ராமன்
WORLD RIGHTS:- T.TARACHAND BOMBAY-4.



மலர் 18 இதழ் 25 || தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் || விளம்பி தை 5

விவசாயத்துக்கு ஆபத்து

இந்த இதழ் பொங்கல் இதழ். பொங்கல் திருநாள் முக்கியமாக உழவர் திருநாள். உழவுத் தொழிலுக்கு ஏற்றம் அளிக்கும் திருநாள். அன்னை பூமாதேவிக்கு நன்றியும் வணக்கமும் செலுத்தும் திருநாள். செங்கதிர் தேவனுக்கு வணக்கம் செலுத்தும் நன்னாள்.

நாகபுரியில் கூடிய காங்கிரஸிலே இந்தச் சமயத்தில் நாட்டு விவசாயத்தையும் விவசாயிகளையும் பாதிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

[illegible] காங்கிரஸ் கூடுகிறது என்றால் பலதரப்பட்ட யோசனைகளும் கேட்டு, பலாபலன்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து தீர்மானங்கள் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பார்கள். ஆனால் அப்படியெல்லாம் ஆராயப்படமாட்டாது என்று கருதிச் சென்ற வாரத் தலையங்கத்தில், "நாகபுரியில் பயமும் தாட்சிண்யமுமின்றி யார் பேசப் போகிறார்கள்? யாராவது பேச முற்பட்டால் பிரதம மந்திரி உடனே எழுந்து நீண்ட பிரசங்கம் செய்து, அடக்கி விடுவார்" என்று எழுதியிருந்தோம். நாம் எழுதியிருந்தபடியே நடந்து விட்டதையறிந்து வருத்தப்படுகிறோம்.

தீர்மானத்துக்கு எதிராகப் பேசியவர்கள் பேச்சைக் கேட்டு, ஜவாஹர்லால்ஜி கோபமடைந்தார். தீர்மானத்துக்கும் அவர்கள் பேச்சுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று சொல்லி விட்டார். இப்படி அவர் காட்டிய கோபத்தின் விளைவாக, "காலையில் நேருஜி பேசிய மாதிரியைப் பார்த்த பிறகு இப்பொழுது பேசவே பயமாக இருக்கிறது" என்று ஒரு அங்கத்தினர் கூறினார். இந்த வகையில் நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வைப் பாதிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு நிலச்சீர்திருத்தத் தீர்மானம் என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது!

'நிலச் சீர்திருத்தம் என்பது கோடிக்கணக்கான நிலமில்லாத ஏழை உழவர்களுக்கு நன்மை பயக்கும் திட்டமல்லவா? அதை ஓயாமல் எதிர்க்கலாமா?' என்று சிலர் எண்ணலாம்.

உண்மையில் ஒரு சில பணக்கார மிராசுதாரர்களை ஒன்றுமில்லாதவர்களாக்கி விட்டாலும், பெருவாரியான ஏழை விவசாயிகளைப் பணக்காரர்களாக்கும் திட்டமாக இருந்தால் அதை வரவேற்கலாம்.

ஆனால் இப்பொழுது கொண்டுவரும் நிலச் சீர்திருத்தமோ, மிராசுதாரர்களுடைய நிலத்தைப் பறித்துப் பஞ்சாயத்து விவசாயத்துக்குத் தரும் யோசனையாகும். இந்தப் பஞ்சாயத்து விவசாயம் நடக்கப் போவதில்லை. பஞ்சாயத்து விவசாயத்தை மேற்பார்வையிட்டு, செய்யவேண்டியதைச் செய்யச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏற்படுவார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் செய்யப்படும் விவசாயம் எப்படி முடியும் என்பது விவசாயத்தில் அனுபவம் பெற்றவர்கள் அறிவார்கள்.

பஞ்சாயத்து விவசாயம் மேற்கொண்டால் முடிவில் குடியானவர்களைப் பலாத்காரம் செய்து தீரவேண்டியதாகும். கம்யூனிஸ்ட் ஆட்சியாக முடியும்.

சோஷலிஸம் உள்ளத்தில் பிறக்க வேண்டும். தனி நபர்கள் உள்ளத்தில் எழவேண்டும். இதை உலகில் எந்த நாட்டையும்விட இந்தியாவில் மிக எளிதில் சாதிக்கலாம். ஏனெனில் நமது நாட்டில் மக்களின் உள்ளத்தில் செல்வத்துக்கும்

பற்றுதல் அவ்வளவு கிடையாது. திரை கடலோடித் திரவியம் தேடிய பல தனவந்தர்கள் தங்கள் செல்வம் முழுதும் சமுதாயத்துக்குப் பயன்படட்டும் என்று கோவிலுக்கு எழுதிவைத்துவிட்டு, கையில் ஓடு ஏந்திக் கொண்டு செல்வதைப் பார்த்திருக்கிறோம். ஆகவே, நம் நாட்டில் சோஷலிஸ சமுதாயத்தை உருப்படுத்த ருஷ்ய நாட்டு சட்டதிட்டங்களோ, பலாத்காரங்களோ வேண்டியதில்லை.

அதை உணர்ந்தே காந்தி மகான், 'தனவந்தர்கள் தங்களைச் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டிய சொத்தின் பாதுகாவலர்கள் என்று உணர வேண்டும்; தர்மகர்த்தாக்கள் என்று எண்ணவேண்டும்; தர்மகர்த்தாக்களாக இருந்து கொண்டு சமூக சேவை செய்ய வேண்டும்' என்றார். இந்த அறிவை நமது நாட்டு தனவந்தர்களுக்குப் புகுத்திவிட்டால் நாட்டில் வறுமை ஒழியும் என்று கருதினார்.

இது காந்தி மகான்மட்டுமல்ல, தெய்வப் புலமை திருவள்ளுவர்கூட,

“ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு” என்றார்.

தான் சமுதாயத்தின் பாதுகாவலன் என்ற உணர்ச்சியுள்ள தனவந்தப் பேரறிவாளனிடம் செல்வம் சேர்வது ஊர்குளத்தில் நீர் நிறைந்தாற் போலாகும் என்றார். எல்லா மக்களும் மகிழ்ச்சியோடு, அந்தக் குளத்தில் நீர் மொள்ள வருவது போல், அவன் செல்வம் பெருகுவதால் ஊர்மக்கள் தாம் பயனடையலாம் என்று மகிழ்ச்சி அடைகின்றனர் என்றார்.

இத்தகைய முறையில் நாட்டு மக்களை, பணம் படைத்தவர்களைப் பேரறிவாளர்களாக ஆக்குவது விடுத்து, அவர்களிடம் பணம் சேர எத்தனை வழிகள் உண்டோ, அத்தனையையும் அடைத்துவிடப் பார்ப்பதா சோஷலிஸ சமுதாயம் ஏற்படுத்தும் முறை? இந்த முறைகளின் காரணமாக ஊருணி வறண்டு எல்லாருமே ஆலாகப் பறக்கும் நிலைதான் ஏற்படும்.

இதைப் பற்றியெல்லாம் ராஜாஜி பல முறைகள் எடுத்துச் சொல்லி விட்டார். நம்நாட்டில் சோஷலிசப் பொம்மை செய்ய வேண்டுமென்றால் சீன தேசத்துக் களிமண்ணாலோ, ருஷ்ய தேசத்துக் களிமண்ணாலோ செய்து பிரயோசனமில்லை. நம் நாட்டு மண்ணினாலேயே செய்ய வேண்டும் என்று ராஜாஜியைவிட இடித்துச் சொல்வார் யாருண்டு? இத்தனை தடவை சொல்லியும் நேருஜி எந்த நாட்டிலும் இல்லாததும், புஸ்தகத்தில் மட்டும் படித்த சோஷலிஸத்தை இந்திய நாட்டில் செய்து பார்த்துவிட வேண்டும் என்று துடிக்கிறார். இங்கிலாந்தில் நிலம் யாரிடமிருந்தும் பறிக்கப்படவில்லை. பலாத்காரம் பிரயோகிக்கப்படவில்லை. ஆயினும் எல்லாருக்கும் தொழிலும் வேலையும் கிடைக்குமாறு நிர்வாகம் நடைபெற்று வருகிறது. எந்த நாட்டிலும் பரீட்சை செய்யாத ஒரு திட்டத்தை ஏழை இந்திய நாட்டில் விஷப்பரீட்சை செய்து பார்க்கப் போகிறார்கள்.

இன்று நேருஜிக்கு எதிரில், அவர் யோசனைக்கு மாறாக யாருக்கும் சொல்லத் தைரியமில்லை. இந்தச் சங்கடத்துக்கு விமோசனம் நேருஜியே தமது கருத்துக்குப் பலமான எதிர்ப்பிருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு இந்த யோசனைகளை விட்டுவிடுவதுதான்.

ஞாயிறு போற்றுதும்

துறைவன்

சூரியன் கீழ்த்திசை பொங்குதடி-புதுச்
சோதி நிரம்பி வழியுதடி
சீரிய வாழ்வு பிறக்குதென்றே-அது
சேதி கொணர்ந்திங்கு சொல்லுதடி!

ஊருக்கெல்லாம் பொதுப் பொங்கலடி-ஒளி
ஊற்றிப் படைத்தது தெய்வமடி
போருக்கு வந்த இருட்பகையை-கதிர்
போக்குதடி, பயம் நீக்குதடி!

நெல்லுக்குள் அன்னம் நிரப்பியதும்-நம்
நெஞ்சுக்கு ஞானம் புகட்டியதும்
புல்லுக்குப் பச்சையைத் தீட்டியதும்-இப்
பொங்கற் கதிரவன் செய்கையடி!


வேருக்கு வேராக நிற்பதெல்லாம்-நாலு
வேதத்தின் உட்பொருள் ஆவதெல்லாம்
நேருக்கு நேராகக் காண்பாயடி-இதை
நித்தமும் கும்பிட்டு வாழ்வமடி!

கண்ணை ஒளிபெறச் செய்திடுமே-வழி
காட்டி யழைத்துச் சென்றிடுமே
மண்ணில் உயிரை வளர்த்திடுமே-கதிர்
மானிடர் வாழ்வினைக் காத்திடுமே

ஞாயிறு போற்றுதும் என்று சொன்னான்-தமிழ்
நாடகம் செய்திடும் சேரமுனி
ஞாயிறு போற்றுதும் நாமும் இங்கே-இன்பம்
நல்கும் புதுப்பொங்கல் நாளினிலே



கூட்டுறவு விவசாயம் வந்தால்...?



ஹைதராபாத் அ-இ-கா. கமிட்டிக் கூட்டத்தில் நிலச் சீர்திருத்தங்களை எதிர்த்துக் கர்ஜனை செய்த திரு சி. சுப்பிரமணியம் நாகபுரியில் மேற்கண்ட தீர்மானங்களைத் தாமே முன்னின்று பிரேரேபித்தார்!



ஐயா! கடைக் காரரே! உன் பேச்சுதான் கரும்பா இருக்கு உன் கரும்பு உப்பு கரிக்கிறது!
கரும்புக் கடைக்காரர் பசங்களா! கொஞ்சம் ஈ மொய்க்க இடம் விடுங்கோடா!
பொங்கலோ பொங்கல்!
நிற்கிறதைப் பாரு! பெரிய மன்மதன்னு மனசிலே நினைப்போ?
1
அரிசி விலை 0-15-0
2
அரிசி விலை 1-0-0
3
அரிசி விலை 1-2-0
4
அரிசி விலை 1-4-0
சாமா

அருள் வாக்கு

நமது சமூகம் தற்போதுள்ள நிலைமையையும் சிறுவர்கள் கல்வி பயிலும் முறையையும் கவனித்தால் எவருக்கும் அச்சம் ஏற்படாமலிருக்காது. நமது தேசத்துச் சமயப் பண்பும் சம்பிரதாயங்களும் இப்போதே வெகு வேகமாகக் குறைந்து கொண்டு வருகின்றன. பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு நமது சமய நூல்களைப் பற்றிய அறிவு ரொம்பவும் குறைந்து கொண்டிருக்கிறது. இப்படியே போனால் அடுத்த தலைமுறையில் சிறுவர்கள் நமது சமய நெறிகளைப் பற்றியும், பண்பாட்டைப் பற்றியும் ஒன்றுமே தெரியாத அளவுக்கு இவை குன்றி விடுமோ என்றுகூடப் பயப்பட வேண்டியிருக்கிறது. நாத்திகப் பிரசாரம் அவ்வளவு தூரம் விஷத்தைப் பரப்பி வருகிறது.

குழந்தைகளின் இளம் உள்ளங்களில் பக்தி என்னும் விதையை விதைத்து விட்டால் அது எப்போதாவது ஒரு காலத்தில் முளைவிட்டுத் தளிர்த்து வளரும். உடனடியே இல்லா விட்டாலும் என்றைக்காவது இது பலனளிக்காமல் போகாது. அரசியலில் புதுக் கொள்கைகளைப் பிரசாரம் செய்கிறவர்களும் இதர கோட்பாடுகளைச் சமூகத்தில் புகுத்த ஆவல் கொண்டவர்களும் இந்தக் காரணத்தினால்தான் பள்ளிக்கூடச் சிறுவர்களைக் கவர முயற்சி செய்கிறார்கள். அவர்களிடம் இப் புதுக் கொள்கைகளைப் புகுத்தி விட்டால் ஒரு நாள் இல்லா விட்டால் ஒரு நாள் இது துளிர்த்து விடும். பள்ளிக்கூட மாணாக்கர்களும் கல்லூரி மாணவர்களும் அரசியலில் கலந்து கொள்ளக் கூடாது என்று சொல்லுவதெல்லாம் மேலுக்கு மாத்திரம். உண்மையில் மாணவர்களையே தங்கள் லட்சியமாக அரசியல்வாதிகள் கருதுகின்றனர். அவர்கள் உள்ளம் பிஞ்சு உள்ளம், எதையும் கிரகிக்கும் என்பது காரணம்.

மற்றைய மதங்களில் கடவுளைப் பற்றிச் சிந்திக்கவும் இறைவன் நாமாவை உச்சரிக்கவும் தனித்தனி சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்துமஸ் தினம் அப்படிப்பட்ட ஒரு நாள். இது ஒரு உதாரணம். இம்மாதிரி புனிதமான நாட்கள் என்று சில நாட்கள் இந்துப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இருக்க வேண்டியது அவசியம். அந்த நாட்களிலாவது கடவுளைப் பற்றிச் சிந்திக்கவும் இறைவன் திருநாமத்தை உச்சரிக்கவும் அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் நமது பிள்ளைகள் இந்து சமயத்தைப் பற்றிய அறிவு துளிகூட இல்லாமலே வளர்ந்து கொண்டிருப்பதாகத் தான் தோன்றுகிறது. ஆகையால் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போதே ஏதாவது தகுதியான ஒரு கட்டத்தில் பக்தி நூல்களில் சிலவற்றை அவர்களுக்கு அப்பியாசம் செய்துவைப்பது முக்கியம். அப்போது அவர்கள் மனத்தில் பக்தியின் விதை ஊன்றிவிடும். இதற்குத் திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சியைக் காட்டிலும் சிறந்த நூல்களைச் சிந்திப்பது கஷ்டம். இவை தாம் முதலில் யாருடைய மனத்துக்கும் தோன்றும்.

நான்காவது அல்லது ஐந்தாவது படிவத்தில் படிக்கும் ஒவ்வொரு சிறுவனுக்கும் சிறுமிக்கும் இந்த மூன்று பக்திப் பாடல்கள் அடங்கிய ஒரு சிறு புத்தகம் கொடுக்கப்பட வேண்டும். திருப்பாவையில் 30 பாடல்கள் இருக்கின்றன. திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் சேர்த்து 30 பாடல்கள் இருக்கின்றன. மார்கழி மாதம் ஆரம்பமாவதற்கு முன் இப் புத்தகம் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இந்த மூன்று பாகங்களில் ஏதாவது ஒரு பாகத்தையோ அல்லது மூன்றையுமேயோ மனனம் செய்து ஒப்புவிக்க அவர்களுக்குச் சொல்ல வேண்டும். எந்தப் பாகம் அவரவர்களுக்குப் பிடிக்கிறதோ அதை அவர்கள் மனப்பாடம் செய்யட்டும். மார்கழி மாதத்தில் அவர்கள் அதை ஒப்புவிக்க வேண்டும். தடுமாறாமலும் பிழையின்றியும் ஒப்பிப்பவர்களுக்கு அம்பாளின் உருவத்தைக் கொண்ட வெள்ளிக்காசு அல்லது பொற்காசு பரிசாக அளிக்கலாம். இசையுடன் பாடும் பையன்களுக்கும் பாடல்களுக்கு அர்த்தம் சொல்லும் திறமையுள்ளவர்களுக்கும் பிரத்தியேகமாக விசேஷப் பரிசுகள் வழங்கலாம். பாடல்களை மனப்பாடம் செய்வதற்கு இது பையன்களுக்கு ஊக்கமளிக்கும். புத்தகத்துக்கும் பரிசுகளுக்கும் ஒரு வருஷத்துக்கு என்ன செலவாகும் என்பதை அந்தந்தப் பேட்டைக்கு முன்னதாகவே கணக்கிட்டு அந்த அளவு வருமானம் அளிக்கக் கூடிய நிலங்களை மானியங்களாக சாசனம் செய்ய அந்தந்த வட்டாரங்களிலுள்ளவர்கள் முன் வர வேண்டும். இம்மாதிரி பூதானம் செய்வதற்கு இப்போதுள்ள சூழ்நிலை மிகவும் ஏற்றது. நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்க வேண்டும் என்று சட்டம் வரக் கூடுமாதலால் அதிக நிலமுள்ளவர்கள் இந்தப் புனிதப் பணிக்குத் தானம் செய்தால் நல்ல காரியம் செய்ததுடன் ஆண்டவனின் கருணைக்கும் பாத்திரமாவார்கள்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ❖ காஞ்சி காமகோடி பீடம்

ஸர் மிர்ஸாவின் மறைவு

சென்ற வாரம் ஸர் மிர்ஸா இஸ்மெயில் காலமான செய்தியைக் கேட்டுத் திடுக்கிடாதவர் இருக்க முடியாது. ஏனெனில் அவர் ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் ஆகிய எல்லா மக்களுக்கும் இனிய நண்பராக விளங்கினார். குறுகிய இன உணர்ச்சி என்பதே உள்ளத்தில் ஒரு சிறிதும் இல்லாதவர். ஒரு சமயம் ஜனாப் ஜின்னா, அவரை முஸ்லிம் லீக்கில் சேரும்படி அழைத்தபோது, "எனக்கு இந்து சமயத்தினரில் ஏராளமான நண்பர்கள் இருக்கின்றனரே. அவர்கள் மனம் புண்படும்படி நான் எப்படி நடந்து கொள்ள முடியும்?" என்று சொல்லி முஸ்லிம் லீக் கட்சியில் சேர அறவே மறுத்துவிட்டார்.



ஸர் மிர்ஸா இஸ்மெயில்

அவர் நீண்ட காலம் மைசூர் திவானாகப் பணியாற்றினார்; பின்னர் ஜெய்ப்பூர் சமஸ்தானத்தில் திவானாகப் பணியாற்றியிருக்கிறார். இரண்டும் இந்து சமஸ்தானங்கள். இந்த இரண்டு சமஸ்தான அரசர்களும் மக்களும் மிர்ஸாவின்மேல் அளவு கடந்த அன்பு செலுத்தி வந்தனர் என்பது ஒன்றே அவர் எத்தகைய மனிதர் என்பதை விளக்கி விடும். "மற்ற சமயத்தாருடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தாமல் நடந்து கொள்வது தாம் பிறந்த சமயத்துக்குப் பெருந்தொண்டாற்றியதாகும்" என்பதே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் மிர்ஸா.

அவருக்கு நந்தவனக் கலையில் அளவு கடந்த மோகம். மைசூர் பிருந்தாவனத் தோட்டம் உலக மக்களின் கவனத்தைக் கவர்கிறது என்றால் அதற்குக் காரணம், ஜனாப் மிர்ஸா. பெங்களூர், எங்கு பார்க்கினும் பசும் பூங்காக்கள் நிறைந்த அழகிய நகரமாக விளங்குகிறது என்றால் அதற்குக் காரணம் மிர்ஸா இஸ்மெயில். நாள் எல்லாம் உழைத்து வரும் ஏழை மக்கள் பணச் செலவின்றி மனமகிழ்ச்சி கொள்ள நந்தவனங்கள் போன்றவை அவசியம். இத்தகைய அழகிய பூங்காக்களை நகரத்தின் நடுவிலே அமைத்துத் தர வேண்டியது சர்க்கார் பொதுமக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்று என்றார் மிர்ஸா. சென்னையில் மவுண்ட் ரோடு சர்க்கார் மாளிகைப் பகுதியில் ஒரு அழகிய நந்தவனம் உண்டாக்கியிருக்க வேண்டும். அங்கு சட்டசபைக் கட்டடம் கட்டிப் பாழ்படுத்தி விட்டார்கள் என்பது மிர்ஸாவின் கருத்து.

1948-ம் வருஷம் ஹைதராபாத் திவான் பதவியை ஏற்றுக் கொண்டு நல்ல முறையில் பத்து மாதகாலம் பணியாற்றி வந்தார். அதற்குள் ஹைதராபாத் நைஜாம் முஸ்லிம் இனவெறியர்களான ரஸாக்கர்களின் கைப்பாவையானவுடன், இத்தகைய குறுகிய மனப்பான்மை கொண்ட வெறியர்களுடன் இருந்து வேலை செய்வது முடியாத காரியம் என்று அப்பதவியை விட்டு வெளியேறினார். எனினும், பதவியை விட்ட பிறகும் ஹைதராபாத் சின்னாபின்னப் பட்டுப்போகாமலிருக்கவும் இந்திய சர்க்காருக்கும் ஹைதராபாத் நைஜாமுக்கும் நல்ல உறவு நிலை நாட்ட வேண்டும் என்பதற்காகவும் மிர்ஸா இஸ்மெயில் தம் சொந்த முறையில் எடுத்துக் கொண்ட முயற்சி மகத்தானதாகும். "உங்கள் முயற்சி சரித்திரத்தில் மிக உயர்ந்த இடம் பெறும்" என்று கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அன்று வியந்து பாராட்டினார்.


கடைசியாக அவர் இந்நாட்டின் ஆட்சி மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கவேண்டும் என்று ராஜாஜியுடன் சேர்ந்து குரல் கொடுத்தார்.

உயர்ந்த ஒழுக்கமும், நல்ல நிர்வாகத் திறமையும், சீரிய பண்பாடும், கலையுணர்ச்சியும் கொண்ட அரிய மனிதரைப் பாரதம் இழந்து விட்டது.

வேண்டாம் இம்முயற்சி!

இந்த வருஷம் ஏப்ரல் முதல் தேதியில் என் பெயரிட்டு மாதப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பிக்கப் போவதாக சந்தா விகிதம் எல்லாம் போட்டு ஒருவர் அச்சிட்டு, கடிதம் எழுதியிருக்கிறார். இதற்கு என் சம்மதத்தைக் கேட்டதுமில்லை, நான் கொடுக்கவுமில்லை என்று இதனால் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைக் கேட்காமல் இத்தகைய காரியங்கள் என் பெயரை வைத்து யாருமே ஆரம்பிக்க வேண்டாம் என்று வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி



பொங்கல்

கைத்தறி ஆடைகளுள்ள
உங்கள் அலமாரிகளைப் பார்வை
யிட்டு, இன்னும் புதிய டிசைன்
களில் கைத்தறி ஆடைகளை வாங்கு
வதற்கு இதுவே ஏற்ற தருணம்

ஹாண்ட்லூம் ஹவுஸ்

அகில இந்திய ஹாண்ட்லூம் பேப்ரிக்ஸ் மார்க்கெட்டிங் கோ-ஆபரேடிவ் சொஸைட்டி
ஜன்மபூமி சேம்பர்ஸ், போர்ட் தெரு, பம்பாய்-1



பம்பாய்	சென்னை	கல்கத்தா
221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு	9, ரத்தன் பஜார் சென்னை – 3	2, லின்ட்ஸே தெரு கல்கத்தா – 16

சோக்ரதர் சம்வாதங்கள்

— முன்னுரை —

உலக இலக்கியங்களில் சோக்ரதர் சம்வாதங்கள் மிகவும் புகழ்பெற்றவை. அவற்றின் ஆசிரியர் பிளேட்டோ ஐரோப்பிய தத்துவ ஞானிகளில் சிறந்தவர். அவர் பிறந்தது கி. மு. 428-27 வருஷமென்று கூறப்படுகிறது. இளம்வயதில் மாபெரும் ஞான குரு சோக்ரதரின் சீடரானார். அப்பொழுது அவருடைய ஆதென்ஸ் நகரம் ஓர் குடியரசாக இருந்தது. பக்கத்திலிருந்த ஸ்பார்டா ராஜ்யத்தோடு நீண்டகாலம் போர் புரிந்து சில சமயங்களில் வெற்றி பெற்றும், மற்றக் காலங்களில் தோல்வியுற்றும் மக்களின் நிலைமை மிகவும் குழப்ப மடைந்திருந்தது. அந்தப் போரில் சோக்ரதர் தம் கடமையைத் தீரத்துடன் நிறைவேற்றிய போதிலும், அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளாமல் மக்களுக்கு ஞானோபதேசம் செய்வதிலும், அவர்களைச் சன்மார்க்க வழிக்குத் திருப்புவதிலுமே தமது வாழ்நாள் முழுவதையும் கழித்தார். அதிகாரிகளுக்குச் சிறிதும் அஞ்சாமல் அக்கிரமங்களைக் கண்டித்தார். அறிவாளிகள் என்றும், தீர்க்கதரிசிகளென்றும் பாசாங்கு செய்து பெரிய பதவிகளைப் பெற்றுச் செல்வம் சேர்த்தவர்களின் வேஷங்களையெல்லாம் கூச்சமின்றி வெளிப்படுத்தினார். அதனால் அவர் மீது வெறுப்புண்டு, தெய்வங்களை அலட்சியம் செய்ததாகவும், இளைஞர்களுக்குத் தீய வழிகள் உபதேசித்துக் கெடுத்ததாகவும் குற்றம் சாட்டினார்கள். ஆதென்ஸ் குடியரசின் விதிகளின்படி அடிமைகளில்லாத சுதந்திரப் பிரஜைகளின் பொதுக்கூட்டத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது. தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்து, சோக்ரதர் தம் வாழ்வின் நோக்கங்களை எடுத்து விளக்கினார். ஆனால் வழக்கம்போல் சம்பிரதாயத்தை யொட்டிக் கூடியிருக்கும் பொது மக்களைப் போற்றவில்லை. அவர்களின் தயவையும் வேண்டவில்லை. தம் மீது புகார் செய்தவர்கள் மூடர்களென்றும், துவேஷத்தாலும், ஆத்திரத்தினாலும் வழக்குத் தொடர்ந்தனர் என்றும் நிரூபித்தார். ஞானத்தையும், தர்மத்தையும் தேடித் திரிந்து, அவையின்றிப் பாசாங்கு செய்வோரைக் கண்டித்து, ஆதென்ஸ் மக்களைப் புனிதப் படுத்துவது தமக்குத் தெய்வம் இட்ட கட்டளை என்றும் கம்பீரமாகக் கர்ஜித்தார்.

பொதுக்கூட்டம் துவேஷக்காரர்களை ஆதரித்துத் தீர்ப்பளித்தது. சோக்ரதருக்கு விஷ பானம் வாயிலாக மரண தண்டனை விதிக்கப்பட்டது. சிறையின் காவலாளர்களைச் சரிப்படுத்தி, சோக்ரதரை வேறு ராஜ்யத்துக்குக் கடத்திச் செல்ல அவர் சம்மதிக்கவேண்டுமென்று சோக்ரதரின் நெருங்கிய நண்பர்கள் வற்புறுத்தினர். ஆனால் சோக்ரதர் சம்மதிக்கவில்லை. தீர்ப்பு தவறானாலும், அநியாயமானாலும், சட்டப்படி செய்யப்பட்டதால் அதற்குக் கீழ்ப்படிவதே தமது கடமையென்று முடிவு கூறினார். தவிர, தமது அறியாமையின் காரணமாக மனிதன் தானாகத் தனது உயிரைமாய்க்கலாகாது என்ற விதி ஏற்கப்பட வேண்டுமே யொழிய, மரணம் ஓர் தீமையென்று எண்ணுவது முற்றிலும் தவறு என்று உபதேசித்தார். ஆத்மா அழிவில்லாததென்றும், நல்லவனுக்கு எவ்விதக் கெடுதியும் நேராதென்றும் கடைசி நிமிஷம் வரையில் உபதேசித்து விட்டு முகமலர்ச்சியுடன் விஷத்தைக் குடித்து இறந்தார். அச்சமயம் அவர் வயது எழுபது. குற்றச்சாட்டுக்கு அவருடைய மறுப்புப் பிரசங்கமும், மரணத்துக்கு முன் செய்த உபதேசங்களும் மானிட வர்க்கத்துக்கு ஒப்பற்ற சம்பத்துக்கள். அவர் கொல்லப்பட்டது கி.மு. 399. அப்பொழுது பிளேடோவுக்கு 28 அல்லது 29 வயது. சுமார் பத்து வருஷங்கள் சோக்ரதரின் சீடராக இருந்தார். சோக்ரதர் இறந்தபின் அவரது உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டு தத்துவ ஞானத்தை ஆராய்ந்து தமது அகாடெமி என்ற குருகுலத்தில் பிறருக்கு உபதேசித்து, நூல்கள் மூலம் அவற்றை உலகுக்கு அளிப்பதே தம் வாழ்க்கைப் பணியாகக் கொண்டார். அந்த நூல்கள் சம்வாத வடிவமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. இருபத்திநான்கு சம்வாதங்கள் இப்பொழுது காலவெள்ளத்தில் மிதந்து வந்து இக்காலத்தாருக்குக் கிடைத்திருக்கின்றன. அதில் ஒன்றைத் தவிர இதர சம்வாதங்களில், சோக்ரதர் முக்கிய சொற்பொழிவாளராக விளங்குகிறார்.

கவிதையின் சொற்சுவையும் கற்பனையின் குதூகலமும், ஆராய்ச்சியின் ஆழ்ந்த கருத்துக்களும், நாடகத்தின் விசித்திர வாக்குவாதமும், தர்க்கத்தின் சாதுர்யமும் ஒன்று கூடிய இந்தச் சம்வாதங்கள் இணையற்ற இலக்கியங்களாக எல்லா அறிஞர்களாலும் போற்றப்படுகின்றன.

இந்தச் சம்வாதங்களில் சோக்ரதர் வாயிலாகக் கூறப்படும் கருத்துக்களும்

க. சந்தானம்



உபதேசங்களும் உண்மையில் குரு சோக்ரதரைச் சேர்ந்தனவா, அல்லது உத்தம சீடர் பிளேடோவால் பக்தியுடன் குருவின் பாதங்களில் அர்ப்பணம் செய்யப்பட்ட காணிக்கைகளா என்று நிர்ணயிப்பது சாத்தியமல்ல. இருவரும் சேர்ந்து உலகுக்கு அளித்த ஞான தீபங்கள் என்பதே பொருந்தும்.

சோக்ரதர் சம்வாதங்களின் சாரமான பாகங்களைத் தமிழர் பிளேடோவின் சொற்கள் மூலம் அறிவதால் நல்ல பயன் உண்டு. அவைகளை முழுதும் மொழிபெயர்ப்பது எளிதல்ல; அதற்குப் பிரயோசனமுமில்லை. ஆங்கில மொழிபெயர்ப்பில் கூட, எல்லாச் சம்வாதங்களையும் ஆதியோடந்தமாகப் படித்து இன்புறக்கூடியவர்கள் வெகு சிலரே. பல இடங்களில் கிரேக்க புராணங்களின் சம்பவங்களை எடுத்து, அவற்றில் காணப்படும் கிரேக்க தேவதைகளின் சொற்கள் ஆராயப்படுகின்றன. சில இடங்களில் தர்க்க சூக்ஷ்மங்கள் எளிதில் விளங்கக்கூடாதனவாக இருக்கின்றன. கிரேக்கப் பதங்களின் விசேஷப் பிரயோகங்களைக் கொண்டு பரிகசித்தும், சாதுர்யமாக வாதித்தும் பிளேடோவின் கவியுள்ளம் குதூகலிக்கின்றது. அந்தக் கட்டங்களை இதர மொழிகளில் மொழிபெயர்க்கும்பொழுது சாரமற்ற விதண்டாவாதமாகத் தோன்றும். ஆதலால், மிகவும் உயர்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கும் சில பாகங்களை எளிய நடையில் தமிழாக்கி வாசகர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற அவா எனக்கு நெடுநாட்களாக இருந்து வந்திருக்கிறது. அதைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய அவகாசம் இப்பொழுதுதான் கிடைத்தது.

முக்கிய கருத்துக்கள்

சோக்ரதர் சம்வாதங்களில், பிளேடோ எந்த சித்தாந்தத்தையும் ஸ்தாபிக்கவில்லை. அப்படி ஸ்தாபிப்பது சாத்தியமில்லை என்றுகூட ஆங்காங்கு மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். தமக்குக் கிடைத்திருக்கும் மதியையும், அதன் உத்தம பாகமான பகுத்தறிவையும் கொண்டு ஓய்வின்றி மானஸ உலகில் சஞ்சாரம் செய்து ஞானத்தைத் தேடுவதே மனித வாழ்க்கையின் உயர்ந்த லட்சியம் என்பது அவற்றின் முக்கிய உபதேசம். அந்தச் சஞ்சாரம் செய்வதற்குத் தூய வாழ்வும், நல்லொழுக்கமும், தெள்ளிய அறிவும், விடாமுயற்சியும் வேண்டும். அப்பொழுதும் ஞான சூரியனை நித்தியமாக, நிரந்தரமாகத் தரிசிக்க முடியாது. அவ்வப்போது சிற்சில கிரணங்களையே உடலில் சிறைப்பட்டிருக்கும் ஆத்மா காண முடியும்.

இப் பிரபஞ்சத்துக்கு இரண்டு சொரூபங்கள் உள. ஒன்று நமது புலன்களாலும் மதியாலும் அறியக் கூடிய திரவியமயமான பிரபஞ்சம். அது ஓயாமல் மாறிக் கொண்டு இருப்பது. அநித்தியமானது. அதற்கு மூலகாரணமாக இருப்பது ஞானமயமான பிரபஞ்சம். அதனை நமது பகுத்தறிவைக் கொண்டு சிறிதளவு அறியக் கூடும். எந்தப் பொருளுக்கும் ஞானப் பிரபஞ்சத்தில் ஓர் மாசில்லாத பிரதிரூபம் இருக்கிறது. ஞானப் பிரபஞ்சத்திலுள்ள ஆதர்ச குதிரை வடிவமாகவே உலகிலுள்ள எல்லாக் குதிரைகளும் உருவெடுக்கின்றன. அப்படியே எல்லா உருவங்களுக்கும், எண்ணங்களுக்கும் தத்துவங்களுக்கும் ஞானப் பிரபஞ்சமே ஆதாரமாயிருக்கிறது.

ஆத்மா அழிவற்றது. அதன் உண்மையான நிலையில் பூர்ண ஞானம் பெற்றது. உடலில் அகப்பட்டு, அதன் புலன்கள் வாயிலாகப் பொருள்களை அறியுங்கால் அதன் அறிவு குன்றிப் போகின்றது. அறிவு வளரும் போது, ஆத்மாவுக்குப் புதிய ஞானம் கிடைப்பதில்லை. தன்னைச் சூழ்ந்திருக்கும் மாசு குறைந்து போய்ப் பழைய ஞானம் சிறிது சிறிதாகத் துலங்குவதே அறிவின் வளர்ச்சியாகத் தோன்றுகிறது.

பூர்ண ஞானமே ஆத்மாவின் முழுநலமாகும். அறமும், அழகும், ஆனந்தமும் அதன் அம்சங்களே. ஞானத்துக்கு விரோதமான எதனையும் வெளித் தோற்றங்களால் மயங்கி அறிவென்றோ, அறமென்றோ, அழகென்றோ, சுகமென்றோ எண்ணலாகாது.


சமூகமும் ராஜ்யமும் தனி மனிதர்களின் சுபாவங்களை ஒத்திருக்கும். ஆசைகளை அடக்கி, அறிவையே நாடி நிற்கும் உத்தம ஞானிகளைத் தலைவர்களாகக் கொண்ட ஆட்சியே ஆதர்ச ராஜ்யத்தைத் தோற்றுவிக்கும். ராஜஸகுணம் மேலிட்டவர்களைக் கொண்டு அரசு புரியும் ராஜ்யம் படிப்படியாகப் பணக்காரர் ஆட்சியாகவும், பொது மக்கள் ஆட்சியாகவும் முடிவில் கொடியவர் ஆட்சியாகவும் திரிந்து சமூகம் சீர்குலைந்து விடும். ஆதர்ச ராஜ்யத்தின் தலைவர்களை எவ்விதம் தேர்ந்தெடுக்க வேண்டும், அவர்களுக்கு என்ன பயிற்சி அளிக்க வேண்டும், அவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைப் பற்றி விவரமாகக் 'குடியரசு' என்ற சம்வாதத்தில் ஆராயப்படுகிறது. நடுவில் பல தத்துவ விசாரங்களும் செய்யப்படுகின்றன. இந்தச் சம்வாதமே பிளேடோவின் நூல்களில் தலைசிறந்து விளங்குகிறது. ஆதலால், அதிலிருந்தே இந்தக் கட்டுரைகளும் ஆரம்பிக்கப்படுகின்றன.

இந்தச் சம்வாதத்தில் ஆராயப்படாத இதர தத்துவங்களைப் பற்றிய பாகங்களே மற்ற சம்வாதங்களிலிருந்து எடுத்து வழங்கப்படும். சோக்ரதரின் குற்ற மறுப்புப் பிரசங்கமும், விஷ பானத்துக்கு முன் செய்த உபதேசங்களும் கடைசி அத்தியாயங்களில் அடங்கியிருப்பன.

பிளேடோவின் கருத்துக்களில் பல நமது வேதாந்தத்தின் உபதேசங்களை ஒத்திருக்கின்றன. திரவியமயமான பிரபஞ்சத்

துக்கு மூலமான ஞானமயமான பிரபஞ்சம் பிரம்மத்தைப் போன்றது. ஞானமயமான பிரபஞ்சத்திலிருந்து திரவியமயமான பிரபஞ்சம் எப்படி உற்பத்தியாகிறது என்று பிளேட்டோ ஆராயவில்லை. ஆனால் சிற்சில இடங்களில், அது ஓர்வித மாயை என்று ஊகிக்கப்படுகிறது. பரம கதியை அடைவதற்கு ஞானமே முடிவான சாதனம் என்பது பிளேட்டோவுக்கும், சங்கராச்சாரியாருக்கும் பொதுவான கருத்துக்கள். ஆத்மாவைப் பொறுத்த வரையில், பிளேட்டோவின் சிந்தனைகள் ராமானுஜாச்சாரியாரின் விசிஷ்டாத்வைதத்தை * ஒத்திருக்கின்றன. ஆத்மா ஞான சொரூபமானது, நித்தியமானது, ஆனால் கடவுளிலிருந்து வேறான பொருள் என்பது இருவரின் அபிப்பிராயங்கள். ஆயினும் ஓர் முக்கிய விஷயத்தில் பிளேட்டோவுக்கும் நமது வேதாந்த குருக்களுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. பிரம்ம ஞானத்துக்கு முக்கிய ஆதாரம் வேதமும், அதை விளக்கும் இதிகாசங்களும் என்பது நமது ஆசாரியார்களின் மூலக் கொள்கை. தனது பகுத்தறிவே எதற்கும் முக்கிய பிரமாணம் என்பது பிளேட்டோவின் உபதேசம். இதனால் எல்லாத் தத்துவங்களும் தர்க்கத்தினால் தீர்மானம் செய்யப்பட வேண்டும் என்று அவர் கருதவில்லை. பிறப்பிலேயே கூரிய மதியுடையோர், நல்லொழுக்கத்துடன், ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டால் தர்க்கத்துக்கு எட்டாத பல தத்துவங்கள் அந்தத் தூய புத்திக்குத் தெளிவாகத் துலங்கும் என்று பிளேட்டோ அடிக்கடி வற்புறுத்தியிருக்கிறார்.

நல்லொழுக்கத்தையும், எளிய வாழ்க்கையையும் பிளேட்டோ ஆதரித்த போதிலும், நமது ஆசாரியர்களைப் போல் துறவறம், பிரம்மசரியம், புலனடக்கம், தியானம், பக்தி முதலியவற்றுக்கு அவர் அதிக மகத்துவம் கொடுக்கவில்லை. இவற்றை வற்புறுத்திய கிறிஸ்துவ மதம், தனது தத்துவ ஞானத்தில் பிளேட்டோவை விட மிகவும் தாழ்மையாக இருந்தும் ஐரோப்பிய மக்களின் மனத்தைக் கவர்ந்தது குறிப்பிடத் தக்கது. பிற்காலங்களில் கிறிஸ்தவ மதமும், பிளேட்டோவின் ஞானோபதேசங்களைத் தனது கொள்கைகளுக்குள் ஏற்றுக் கொண்டது.



பிளேட்டோ

சோக்ரதர் புத்தருக்குச் சுமார் நூறு வருஷங்கள் பின்னர் வசித்தார். புத்தர் அரச குடும்பத்தில் பிறந்து துறவியானவர். மக்களை வசீகரம் செய்யும் அழகுடையவர். காடுகளில் வசித்துக் கிராமங்களில் சுற்றித் தர்மோபதேசம் செய்தார். சோக்ரதரோ சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; குரூபி; குடும்பவாழ்க்கை நடத்தியவர். ஆனால் ஞானத்தை நாடி நிற்பதிலும், தர்மத்திலிருந்து சிறிதும் பிறழாத ஒழுக்கத்திலும், மனத் தூய்மையிலும் சமூக சேவை செய்யும் ஆர்வத்திலும் இருவரும் சமானமானவர்கள். இந்து மதத்தைக் கண்டித்து ஒரு தனி மதம் ஸ்தாபித்த போதிலும், புத்தர் தம் பூர்ண ஆயுளும் பெருமையுடன் வாழ்ந்து, பொது மக்களின் பேராதரவு பெற்று இயற்கை மரணமடைந்தார். சோக்ரதரோ எழுபதாவது வயதில் தாம் அரும் பாடுபட்டுச் சேவை செய்து வந்த ஆதென்ஸ் நகரவாசிகளால் கொல்லப்பட்டார். இது அம்மக்களின் மூடத்தனமானாலும், மனித அறிவை வளர்த்தால் அதிலிருந்து மற்ற நலங்கள் தானே கூடிவிடும் என்ற கொள்கை மனித வளர்ச்சிக்குப் போதுமானதல்ல என்று புலப்படுகிறது. மூந்நூறு வருஷங்களுக்கு முன் கிறிஸ்துவ மதப் பற்றுக் குறைந்து பிளேட்டோ அரிஸ்டாட்டில் முதலியோரின் நூல்கள், மீண்டும் முக்கியத்துவம் பெற்றதே ஐரோப்பிய விஞ்ஞானத்தின் அதிசய வளர்ச்சிக்கு ஆதாரமாயிற்று என்று பல அறிஞர்கள் கூறுகின்றனர். வேதாந்த ஞானத்தையும், இக்காலத்திய விஞ்ஞானத்தையும் சமரசப்படுத்துவதற்கு பிளேட்டோவுடைய சோக்ரதரின் சம்வாதங்கள் பயன்படக்கூடும் என்று எண்ணுகிறேன்.

* த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்று மூன்று சமயக் கொள்கைகள். த்வைதமாவது இருமை; அத்வைதமாவது இருமையற்றது; விசிஷ்டாத்வைதமாவது இருமையும் ஒருமையுமாய்க் கலந்து பரிணமிப்பது.

கண்ணம்மா—என் காதலி

"நீயாகவே செய்து பழகு. படித்துப் பட்டம்பெற்ற பெண் எவளையாவது கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவன் இப்போதே பழகவேண்டாமா? இதோ, இந்தக் காலத்துப் பெண்களுக்குத்தான் விரல் அசைகிறதா பார்!" என்று முணுமுணுத்தாள் பாட்டி. என் கிழிசல் சட்டையை இன்று நானே — அதுவும் வெளியே போகும் அவசரத்தில் — தைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்; வீட்டுப் பெண்மணிகளுக்கெல்லாம் கைக்காரியம், அதாவது, கைக்கு மருதாணி அரைத்து இட்டுக்கொள்ளும் காரியம்!

"ஊசியால் குத்திக்கொண்டு விட்டாற்போலிருக்கிறதே உங்கண்ணா. இரத்தம் வருகிறது மீனு!" என்றாள் என் அத்தை மகள் கண்ணம்மா. தனது பி.ஏ. பரீட்சையை முடித்துக்கொண்டு சென்னையிலிருந்து இன்று காலைதான் வந்து சேர்ந்திருக்கிறாள் அவள்.

"கை வெந்துவிட்டதாமே மருதாணி இடாமலேயே!" என்றாள் மீனு; உடனே கலீரென்று சிரிப்பொலி; எனக்கோ கைவலி.

"கட்டுப் போடுங்களேன் விரலுக்கு. கந்தலுக்கா பஞ்சம் இந்த வீட்டில்"

"இருக்கவே இருக்கிறது மீனுவின் பழம்புடவை!" மீண்டும் கும்மாளம்!

இதைத் தொடர்ந்து புடவைகளைப்பற்றிய பேச்சு: இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஜோடியாக எடுத்த ஒரே மாதிரியான புடவைகளில் மீனுவுக்கு ஒன்றும் கண்ணம்மாவுக்கு ஒன்றுமாகக் கொடுத்தார்களாம்; மீனுவின் புடவை மட்டும் சில மாதகாலத்தில் கட்டுப் போடுவதற்கும் குடுகுடுப்பாண்டிக்கும் போய்விட, கண்ணம்மாவின் புடவை மட்டும் இன்னும் அவள் உடம்போடு இருந்து வருவதைக் கண்டு வியந்தனர்.

"நீயும் மருதாணி இட்டுக்கொள், கண்ணம்மா" என்று உபசரித்தாள் மீனு. "இல்லை, மீனு, அப்புறம் . . ." என்று தயங்கினாள் கண்ணம்மா.

நறுக்கென்று இடைவெட்டினாள் பாட்டி. "பி.ஏ. படிக்கிறவன்கிட்டே என்னடி உபசாரம் உன் பழங்காலத்து மருதாணியை?"



K. 262A-50 TM



உடனே கண்ணம்மா சொன்னாள்: ''மருதாணி எனக்கும் பிடிக்கும், பாட்டி. ஆனால்... இப்போதே இட்டுக் கொண்டுவிட்டால்... வந்து...''

''இட்டுக்கொண்டால் என்ன...''

''ஒன்றுமில்லை... அழுக்குத் துணிகளை இன்றைக்கே துவைத்துக்கொள்ள முடியாமல் போய்விடுமோ என்று யோசித்தேன்.''


கண்ணம்மா துணி துவைப்பதாகக் கூறியது எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது. ''வேடிக்கைதான், சலவை செய்வதற்கு நாங்களே வெளியே அனுப்புகிறோம் துணிகளை... இதைக் கேளுங்கள்... இவள் சொல்கிறாள்...'' என்று என்னைக் கூப்பிட்டாள் மீனு. வெளியே கிளம்பும் அவசரத்தில் இவர்கள் வம்புப் பேச்சைக் கேட்க எனக்கேது நேரம்?

அப்புறம் விளக்கு வைக்கும்போதுதான் வீடு திரும்பினேன். வந்தவுடனே அந்தத் தையல்காரன் 'பில்'லைத் தேடும்படி நேரிட்டது. ''அந்த சட்டைப் பையிலே வைத்திருந்தேன், எங்கே அந்தப் பழைய சட்டை? அழுக்குத் துணிகளோடு அனுப்பிவிட்டீர்களா? அடாடாடா!'' என்று கூச்சலிட்டேன். அந்த 'பில்'லை கண்ணம்மாவே கொணர்ந்து கொடுத்ததும் எனக்குப் புரிபடவில்லை.


''எங்கே ஓடிவிடப்போகிறது உன் சட்டை, பார் இதோ'' என்று அம்மா, மேஜைமீது அடுக்கி வைத்திருந்த துணிவரிசையைக் காண்பித்தாள். வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறித்த அவற்றைப் பார்த்து பிரமித்து விட்டேன்.

''தன் கையினாலேயே கண்ணம்மா இவ்வளவையும் துவைத்திருக்கிறாள். படித்தும் கர்வமில்லாத பெண்!'' என்றாள் அம்மா. தும்பைப் பூவைப்போல பளிச்சிட்ட அந்தச் சட்டையை உடுத்தியதும் புதியதோர் பொலிவை உணரலானேன்; அதே சமயம் அத் துணிகளையெல்லாம் துவைத்தவள் மீது பச்சாத்தாபமும் உண்டாயிற்று. ''இவ்வளவு துணிகளையுமா துவைக்கும்படி விட்டீர்கள், சிரமப்பட்டிருப்பாளே, பாவம்!'' என்றேன்.

இதைக் கேட்டுவிட்ட கண்ணம்மா சொன்னாள்: ''இதில் சிரமம் என்ன அத்தான். ஸன்லைட் சோப் உபயோகித்தால் இலகுவாயிற்றே! ஏன் தெரியுமா?'' சுத்தம் வாய்ந்த சோப்பாதலால் ஸன்லைட், சக்தி வாய்ந்த நுரை கொழிக்கிறதென்றும், அடித்துத் துவைக்காமலேயே அந்த நுரை, அழுக்கை அறவே அகற்றிவிடக் கூடியது என்றும் விளக்கினாள் கண்ணம்மா.




''அவள் சொல்வதும் சரிதானே. அடித்துத் துவைத்துக் கிழிக்கவும் வேண்டாம்; அப்புறம் கிழிசல் தைக்கிறேன் என்று ஊசியால் குத்திக்கொள்ளவும் வேண்டாம்!'' என்றாள் பாட்டி குத்தலாக.



''முன்னமே தெரியாமல் போச்சு, கிழியாமல் பளிச்சென்று வெகுகாலம் வைத்துக் கொண்டிருக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டாள் மீனு.

பாட்டிக்கோ பரம சந்தோஷம்; தன் பேத்தியின் கரங்களைப் பற்றியபடி வாழ்த்துகிறாள்: ''என் கண்ணம்மாவின் கைக்கு மருதாணிதான் இடவேண்டும். இவளைக் கொத்திக்கொண்டு போகிறவன் கொடுத்து வைத்தவன்!'' அப்போது பார்க்க வேண்டும் கண்ணம்மாவின் கன்னத்தில் ஏறிய சிவப்பை!



65

சமணம், பௌத்தம், கிறிஸ்துவ மதம் இந்தச் சமயங்களில் சிறப்பாக வற்புறுத்தும் தருமம், வெறுப்பவர்களையும் அன்பு செய்தல்—பகைவரையும் பொறுத்து, தீமைக்குப் பதில் நன்மை செய்தல். இதுவே குறள் 'இன்னா செய்யாமை' அதிகாரத்தில் வற்புறுத்தும் தருமம்.

நன்மைக்கும் தீமைக்கும் போர் நடக்கிறது, உலகத்தில். தீமைக்குப் பதில் தீமை செய்யலாம் என்கிற கொள்கையை மக்கள் அனுசரித்தால் உலகத்தில் தீமை வளர்ந்து கொண்டே போகும். நெருப்பைத் தணிப்பது நீர். நெருப்பை நெருப்பு தணிக்காது. அப்பிரதிகாரம் — அதாவது தீய செயலுக்குப் பிரதி செய்யாமல் ஒழித்தலே உலகத்தில் மறம் நீக்கி அறம் வளர்க்கும் நெறி.

பௌத்தம் முதலிய மதங்களில் சொல்லப்படுவது போலவே ஹிந்து மதத்திலும் இந்தக் கொள்கை சொல்லப்படுகிறது. ஆயினும் ஹிந்து மதத்தில் இதற்குத் தந்திருக்கும் இடத்தை விடப் பௌத்தம், சமணம் முதலிய மதங்களில் சிறந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஒப்புக் கொள்வது பிழையாகாது.

உனக்கு யாரேனும் தீங்கு செய்தால் அவனைத் தண்டிக்கும் வழி அவனுக்கு உபகாரம் செய்து அவமானப் படுத்துவது. அதுவே நல்ல தண்டனை.

இன்னாசெய் தாரை
ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

இதுவென்ன வெறும் வேதாந்தம் என்று தோன்றும். அப்படியல்ல, செய்து பார்த்தால் இந்த உபதேசத்தில் உண்மையும் பலமும் இருப்பதைக் காணலாம். இந்த உபதேசம் யுக்தி சாமர்த்தியங்களிலும் ஒன்றாகும், தீமை செய்தாருக்கு உபகாரம் செய்து அவர்களை நாணும்படி செய் என்கிறார் முனிவர். தீமை இழைத்தவன் பேரில் கோபம் கொண்டு நீ அவனுக்குச் செய்யக் கூடிய காரியத்தினால் அவன் அடையும் துன்பத்தைக் காட்டிலும் நீ அவனுக்கு இந்தக் குறளில் சொல்லியபடி ஒரு உபகாரத்தைச் செய்தால் அதனால் அவன் வெட்கப்பட்டு மனத்தில் அடையும் துன்பம் அதிகம்.

பழிக்குப் பழி வாங்கும் ஆசை இருந்தாலும் தீமை செய்தவனை நாணச் செய் என்கிறார் முனிவர். அவனைத் துன்பப்படுத்தும் காரியங்களுள் இது மிகத் துன்பப்படுத்தும் என்கிறார். இப்படிச் செய்யப்படும் துன்பம் நன்னெறியேயாகும்.

* * *

யாருக்கும் என்ன லாபத்துக்காகவும் இன்னா செய்ய வேண்டாம். பிற உயிரின் நோயை உனக்கு உண்டாகும் நோயாகவே உணர்ந்து நடந்து கொண்டாலொழிய நீ அடைந்த அறிவு பயனற்ற அறிவு ஆகும். கல்வி கேள்விகளின் பயன் பிற உயிருடைய உணர்ச்சியைத் தன் உயிரின் உணர்ச்சிக்குச் சமானப்படுத்தும் அறிவை அடைதல்.

அதை அடையாவிட்டால் படிப்பினால் ஒரு பயனுமில்லை.

அறிவினான் ஆகுவது
உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக்
கடை.

'பிறிதின்' என்று அஃறிணையில் சொன்னார். எல்லா உயிர்களும் உட்படச் சொல்ல இவ்வாறு சொன்னார். பிற உயிரின் நோயைப் பார்த்து உடம்பு கூசாதவன் பாமரன், படித்தவன் அல்ல என்கிறார்.

போற்றுதல்—காத்தல்.

* * *

ஆச்சரியப்படுகிறார் முனிவர். தனக்கு ஒரு நோய் உண்டாகி அதை அனுபவித்த ஒரு மனிதன் பிற உயிரை நோய்படச் செய்வானா? எப்படி மனம் வரும்? ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று வியந்து முனிவர் சொல்லுகிறார்.

தன் உயிர்க்கு இன்னாமை
தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா
செயல்.

தனக்கு உற்ற இன்னாவைத் தான் அனுபவித்து அறிந்தபின், பிற உயிருக்கு நோய் உண்டாக்க எப்படி மனம் வரும்?

அறிவு இருந்தும் அந்த அறிவை அழிப்பது கோபம், காமம் முதலிய ராஜஸ குணங்கள். இவை ஒருவன் பெற்ற அறிவை யெல்லாம் அழித்து விடுகின்றன. கோபமோ, காமமோ எழுந்த சமயத்தில் அறிவெல்லாம் மறந்து போகிறது.

'என் கொலோ' என்று வியந்தும் பரிதபித்தும் சொல்லுகிறார்.

* * *

பிறர்க்கு இன்னா முற்பகல்
செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே
வரும்.

'தாமே வரும்'—மற்றொருவன் செய்யாமலே தாமே வரும். முற்பகலில் நீ செய்த தீமை பிற்பகலில் தானாகவே வந்து உன்னைத் தாக்கும். அதிகத் தாமதம் இராது.

வாக்கியத்தின் முற்பகுதியில் செயப்படு பொருளாக வந்த 'இன்னா' பிற்பகுதியில் எழுவாயாகிறது. இது தமிழ் இலக்கணத்தில் ஓர் தனி அழகு.


கோலாட்டம் போட்டாலும் கும்மி அடித்தாலும்
பரதநாட்டியம் ஆடினாலும், முதலில் கூந்தல்
அலங்காரம்தான் பெண்களுக்கு முக்கியம்
கேசவர்த்தினி உபயோகித்துக் கைக்கு
அடங்காதபடி கேசத்தை பெருக்கிக்கொள்ளுங்கள்
வியர்வை நாற்றத்தையும் அழுக்குகளையும் நீக்கித்
தலையை மணமுள்ளதாகவும் சுத்தமாகவும்
வைத்துக்கொள்ள கேசவர்த்தினி ஷாம்பூ
கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், கோயமுத்தூர்
கேசவர்த்தினி

GP

பாகவதமாகிய

பக்திவயல்

பௌராணிகர்

20. சித்திரகேதுவின் கதை

விருத்ரன் இறந்ததுமே மூவுலகத்தோரும் கவலை நீங்கி மகிழ்ச்சி கொண்டனர். ஆனால் இந்திரனுக்கு மட்டும் அமைதி ஏற்படவில்லை. அந்தணன் மகனைக் கொன்றதால் வருந்தினான். "விச்வரூபனைக் கொன்ற பாபத்தைப் பங்கிட்டுக் கொடுத்தேன். விருத்ரனைக் கொன்ற பாபத்துக்கு என்ன செய்வேன்?" என்று முன்னமேயே முனிவரைக் கேட்டிருந்தான்.

அசுவமேத யாகத்தைச் செய்து பாபத்தை அகற்றலாம் என்று முனிவர்கள் இந்திரனுக்கு உபதேசம் செய்திருந்தனர். ஆயினும் விருத்ரனைக் கொன்ற பாபம் இந்திரனைச் சென்ற விடமெல்லாம் இழிகுலத்துக் கிழவி வேடத்தில் துரத்திச் சென்றது. புவி மீது புகலிடமின்றி இந்திரன் வடதிசை சென்று மானஸம் என்ற தடாகத்தில் மூழ்கினான். ஆயிரம் ஆண்டுகள் நீருக்குள்ளிருக்கும் தாமரைத் தண்டில் ஒளிந்திருந்தான். ஹரியைத் துதித்துத் தவறை அழித்துத் திரும்பவும் இந்திரன் தன் பதவியை அடைந்தான்.

இக் கதையைக் கேட்ட பரீக்ஷித்துக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. "அசுரனாய்ப் பிறந்த விருத்ரனுக்கு நாராயணனிடம் இத்தகைய பக்தி தோன்றியது எப்படி? தேவருக்கும் முனிவருக்குமே பக்தி வருவது அரிது. மாந்தரோ எண்ணற்றவர். அவருள் பக்தி செய்பவர் சிலரே. பக்தருள் பற்றை விட்டுப் பரமன் தாளைத் தேடுவோர் ஆயிரத்தில் ஒருவர். போரிலும் பரமனை மறவாத பக்தன் பெரியவன். விருத்ரனிடம் அம் மனப்பான்மை தோன்றியது அதிசயம். இந்தச்சந்தேகத்தைப்போக்கவேண்டும்". என்று பரீக்ஷித்து சுகரைக் கேட்டார்.

அதற்குச் சுகர் பின்வரும் வரலாற்றை எடுத்துரைத்தார்.

சூரசேனர்களுக்கு அரசனாகச் சித்ரகேது என்பவன் தன் நாட்டை ஆண்டு வந்தான். அவனுக்கு எண்ணற்ற மனைவிமார் இருந்தும் மக்கட்பேறின்றி வருந்தினான். அழகிருந்தும் ஆட்சி செய்தும் மற்றெல்லாச் சிறப்பும் அடைந்திருந்தும் மலடியருக்கு மணாளனாகி வாழ்கிறோம் என்ற எண்ணம் அவனைத் துன்புறுத்தியது. ஒரு சமயம் அங்கிரா என்ற முனிவர் அவன் தலைநகரை அடைந்தார். அரசனைக் கண்டு நன்மையை வினவினார். முகம் வாடியிருப்பதன் காரணத்தையும் கேட்டார்.

சித்ரகேது பணிவுடன் அவருக்குப் பதில் உரைத்தான். "தவத்தால் தீமையை அகற்றிய முனிவருக்கு எது தான் தெரியாது? இருப்பினும் கேள்விக்கு மறுமொழி கூறுகிறேன். பசியால் வருந்துபவனுக்கு ஆகாரம் ஒன்றுதான் வேண்டும். அது போலவே மகனின்றி மனம் கலங்கிய எனக்கு, நரகத்தில் விழாது வாழப் புத்திரனைத் தந்தருள்வீர்" என்றான்.

முனிவர், த்வஷ்டா என்ற தேவனுக்குத் தனிஆஹுதியொன்றைச்செய்தார். ஓமம் செய்து மிகுந்ததை கிருதத்யுதி என்று பெயர் பூண்ட அரசிக்கு அளித்தார். "அரசே! இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணமாக ஒரு புதல்வன் உனக்குப் பிறப்பான்" என்று சொல்லிவிட்டுச் சென்றார். வளர்பிறையில் மதியென கிருதத்யுதியின் கருவும் வளர்ந்தது. அரசனுக்குப் புத்திரனும் பிறந்தான். மகிழ்ச்சியால் மன்னவன் மெய் மறந்தான். நீருண்ட கார்மேகம் பெய்த மழையெனப் பரிசுகளை அனைவருக்கும் வழங்கினான். துயருண்டு திரட்டிய திரவியத்தில் ஏழைக்கு வளரும் விருப்பத்தைப் போல், வேந்தனுக்கு மகனிடம் அன்பு ஓங்கி வந்தது. தாயோ, மகனிடம் உயிரையே வைத்தாள். ஆனால் அரசனுடைய மற்ற மனைவியருக்குப் பொறாமை பொங்கியது. மகனைப் பெற்ற மனையாளிடம் மன்னனும் அளவிலா அன்பு கொண்டான். அரசனுக்கு நம்மிடம் ஆசையும் இல்லை, அன்பு காட்டக் குழந்தையும் இல்லை என்ற நிலையில் வேறு மனைவிமார் மனம் கொதித்தனர். வெறுப்பால் மதி இழந்து, அவர்கள்

ஒன்று கூடிப் பாலகனுக்கு நஞ்சைக் கொடுத்து விட்டார்கள்.

மகன் உறங்குவதாக எண்ணித் தாய் தன் வேலைகளைக் கவனித்திருந்தாள். வெகு நேரமாகியும் குழந்தை எழாததால் செவிலித்தாயிடம் மகனைத் தூக்கி வரச் சொன்னாள். இறந்து போன சிசுவைக்கண்ட பணிவிடைப் பெண் 'ஐயோ' என்று அலறிக் கொண்டு கீழே விழுந்து விட்டாள்.

அழுகுரலைக் கேட்டு அந்தப்புரத்துக்கு அரசி ஓடினாள். மடிந்த மகனைக் கண்டாள். நினைவற்று நிலத்தில் வீழ்ந்தாள். கூட்டம் கூடிவிட்டது. அனைவருக்கும் துயரம் மேலிட்டது. நஞ்சைக் கொடுத்த நங்கையரும் பாசாங்கு செய்து கண்ணீர் வடித்தார்கள். கண் இழந்தவன் போல் ஆனான் அரசன். அரசியோ மலர் சிதறி, முடி விரிந்து, மை கலந்த கண்ணீர் பெருக, இராஜாளிப் பறவையெனப் பலவாறு புலம்பினாள். மூத்தோர் உயிர் வாழச் சிறியோரை மாய்த்து வரும் பிரமனைப் பித்தன் என்று ஏசினாள். மடிந்தான் என்பதையும் மறந்து மைந்தனோடு பேசினாள். "வெகு நேரம் துயிலுற்றுப் பசியால் வருந்துவாய். எழுந்திரு. உன் தோழர் காத்திருக்கின்றனர்" என்று கூறினாள்.



அச்சமயம் மகனைக் கொடுத்த அங்கிரா முனிவரும் நாரதரும் அங்கு வந்தார்கள். அரசனுக்கு ஆறுதல் கூறினார்கள்.

"அரசே! இறந்துபோன மைந்தன் உமக்கு முன் பிறவியில் என்ன சுற்றம்? வரப் போகும் பிறவியில் என்ன சுற்றம்? வெள்ளத்தின் வேகத்தால் மணல் குவியல் சேருகிறது; பின்னர் பிரிகிறது. அது போலவே உடல் எய்திய உயிர்களும் கூடிப் பிரிகின்றன. இதெல்லாம் காலத்தின் கூத்தின்றி வேறில்லை. தந்தை என்று ஓர் தேகம். தாயென்றோர் தேகம். இருவரும் சேர்ந்து மைந்தன் என்றோர் தேகம். ஆனால் எல்லா உடல்களுக்கும் உள்ளிருப்பது ஒரே ஆத்மா. கடவுளைப் போல் அழிவற்றது. வேற்றுமையும் பிரிவும் அறிவின்மையால் தோன்றுகின்றன" என்று சமாதானம் கூறினார்கள்.

அரசனும் ஒருவாறு தெளிந்தான். அவர்கள் யார் என்று அவனுக்கு விளங்கவில்லை. ஆனால் பெரியோரெனத் தெரிந்து, விலங்கைப் போல் வாழ்ந்து வரும் தன் உள்ளிருளை அகற்றவே எழுந்தருளிய விளக்கென்று புகழ்ந்தான். அங்கிரா தம்மை, மகன் வேண்டுமென்ற போது வந்த முனியெனத் தெரிவித்துக் கொண்டார். நாரதரையும் அறிமுகப் படுத்தினார். மேலும் உபதேசம் செய்தார். "விஷ்ணுவின் பக்தனான நீ துயரக் கடலில் மூழ்கி மடியாது காப்பாற்றவே வந்துள்ளோம். திருமாலின் தொண்டர்கள் துயருறலாகாது. மகன் வேண்டுமென்றாய், கொடுத்தேன். மகன் இறந்து வருத்தப்படுகிறாய். வீடும் புகழும் சுற்றமும் செல்வமும் இவ்வாறே அழியும். இவை எல்லாம் துயருக்குக் காரணங்கள். துன்பம் தருவது உடலே. தான் என்ற ஆத்மாவுக்கு எப்பொழுதும் அமைதி உண்டு. ஆகவே, ஈமச் சடங்குகளைச் செய்துவிட்டு வா. நாராயணனை அடைய மந்திரத்தை உபதேசம் செய்கிறேன். அதை ஓதி ஏழிரவில் ஸங்கர்ஷண ரூபத்தைக் காண்பாய். மன்னாதி மன்னரும், சிவனுமே இம் மந்திரத்தால் பெரும் பேற்றைப் பெற்றிருக்கின்றனர். நீயும் அப் பதவியை அடைவாய்" என்றார்.

பிறகு நாரதர், தம்முடைய யோக சக்தியினால், இறந்துபோன குழந்தையின் ஜீவன் ஆகாயத்தில் பறந்து போவதை, வருந்தி நிற்கும் அரசனுக்கும் மற்றவருக்கும் காண்பித்தார். "ஜீவாத்மாவே! உன் தாயையும், தந்தையையும் பார். நீ பிரிந்ததால் வருந்துகின்றனர். திரும்பிவந்து உன்னுடைய உடலில் புகுந்து கொள். இன்பங்களை அனுபவித்து அரசாளுவாய்" என்று ஜீவனிடம் நாரதர் கூறினார்.

அதற்கு ஜீவன் பின்வருமாறு பதில் அளித்தது: "தேவனென்றும், மனிதனென்றும், விலங்கென்றும் பல பிறப்பை அடைந்து வரும் எனக்கு எப்பிறவியில் இவர்கள் தாய் தந்தையர்கள்? நானடைவில் நோக்கினால் எப்பிறவியிலாவது அனைவருமே ஒருவருக்கொருவர் சுற்றமும், நண்பரும், எதிரியும், அறிந்தவரும், அறியாதவரும் ஆகின்றனர். ஏதோ ஒரு பிறப்பில் வந்த உடற் பற்றினால் ஜீவனுக்கு எந்நாளும், ஒருவரிடம் உறவென்பதில்லை. அழியாத ஜீவனுக்கு அனைவரும் ஒன்றே."

இவ்விதம் பேசிவிட்டு ஜீவன் மறைந்தது. அழுது கொண்டிருந்தவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். துயரை அகற்றி அன்பென்ற பாசத்தைக் களைந்தனர்.

ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் சால், குலைக்கட்டி வியாதிகளுக்கு

மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும், சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அப்பொழுது அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.

ஆலோசனை நேரம் : **காலை 9 முதல் 11 மணி வரை – மாலை 3 முதல் 5 மணி வரை**

இடம்	தேதி	விலாசம்
தஞ்சாவூர்	17 காலை & மாலை	ராஜா சத்திரம் (ராஜா ரெஸ்ட் ஹவுஸ்)
பட்டுக்கோட்டை	18 காலை	விசாரிக்கவும் : முருகன் மெடிகல் ஹால் பட்டுக்கோட்டை டிரக் ஹவுஸ்
திருத்துறைப்பூண்டி	18 மாலை	டி. வி. சந்திரசேகரம் பிள்ளை மெடிகல் ஷாப்
மன்னார்குடி	19 காலை	மீனு கிளினிக், காந்தி ரோடு
திருவாரூர்	19 மாலை	விசாரிக்கவும்: சுப்பய்யா மெடிகல் ஸ்டோர்ஸ் நியூ மெடிகல் ஸ்டோர்ஸ், சகுந்தலா பார்மஸி
நாகப்பட்டினம்	20 காலை	எஸ். டி. சௌந்தரராஜ பிள்ளை & சன் கெமிஸ்ட்ஸ்
நன்னிலம்	20 மாலை	ஜி. எஸ். ராஜன் & ஆர். ஆர். சாமி ஜெனரல் மெர்ச்சண்ட்ஸ்
மாயவரம் டவுன்	21 காலை & மாலை	ராமகிருஷ்ண வைத்தியசாலை நெ. 1. கிருஷ்ணராயர் சந்து
சீர்காழி	22 காலை	எஸ். நடராஜன், வாய்க்காங்கரைத் தெரு
விருத்தாசலம்	22 மாலை	ஸ்ரீ நடராஜா மெடிகல் ஹால்
சிதம்பரம்	23 காலை & மாலை	ஸ்ரீ நடராஜா டிஸ்பென்ஸரி, கெமிஸ்ட்ஸ்
கடலூர் என். டி.	24 காலை & மாலை	கமலா & கோ., கெமிஸ்ட்ஸ், புதுப்பாளையம்
பாண்டிச்சேரி	25 காலை	ஆனந்தா எம்போரியம், டுப்ளே தெரு
திண்டிவனம்	25 மாலை	விஜயா மெடிகல் ஸ்டோர்ஸ்
விழுப்புரம்	26 காலை & மாலை	வாசவி விஹார், கிளை, போர்டிங் & லாட்ஜிங் பாண்டி ரோடு
காஞ்சிபுரம்	28 காலை & மாலை	86, சாலைத் தெரு, பெரிய காஞ்சிபுரம்
வேலூர்	29 காலை & மாலை	வி.பி.சிவம் & கோ., கெமிஸ்ட்ஸ், லாங் பஜார்
ஜாம்ஷெட்பூர்	15 காலை 9 to 11 மாலை 4 to 6	ஸிடி கெமிஸ்ட்ஸ், சாக்சி.
கரக்பூர்	4 காலை 9 to 11 மாலை 3 to 5	யுனைடெட் மெடிகல் ஸ்டோர்ஸ் கெமிஸ்ட்ஸ் அண்டு ட்ரக்கிஸ்ட்ஸ் என். டி. ச. 155, ரயில்வே மார்க்கெட்
ஜபல்பூர்	15 காலை 8 to 12 மாலை 3 to 5 16 காலை 8 to 12	மாடர்ன் ஓட்டல் (அப்துல்லாபாய் & சன்ஸ் எதிரில்), ஆந்தேரிதேல். போன் : 346

ஜம்மி வெங்கடரமணய்யா அண்டு சன்ஸ்

சென்னை – திருச்சிராப்பள்ளி – கும்பகோணம்

முனிவர் உபதேசத்தால் தன்னைத் தெரிந்து கொண்ட அரசன் ஸம்சாரம் என்ற பாழுங்கிணற்றினின்று, சேற்றிலிருந்து எழுந்த யானையைப் போல், தெளிந்து மாசின்மை எய்தினான்.

நாரதரும் முன் கூறியவாறு நாராயணன் மீது துதியையும் மந்திரத்தையும் அவனுக்கு உபதேசம்செய்தார். முனிவர்கள் மறைந்ததும் அரசன் ஏழு நாட்கள், இடைவிடாமல், நீரை மட்டும் அருந்திக் கொண்டு, மந்திரத்தை ஜபித்தான். எட்டாவது நாள் தொட்டு வித்யாதரருக்கு வேந்தனென்ற பதவியைப் பெற்றான். சில நாட்களுக்கெல்லாம் மந்திரத்தின் மகிமையினால் மாசற்ற மனத்துடன் ஆதிசேஷனிடம் சென்று அவன் தாள்களைப் பற்றிக் கொண்டு பலவாறு துதி செய்தான். அனந்தனும் அரசனுக்கு வைராக்கியத்தையும் மெய்யறிவையும் உபதேசம் செய்தார் :



"நாரதரும் அங்கிராவும் உனக்குச் செய்த உபதேசத்தைப் பயின்றதாலும், என்னை நேரிலே கண்டதாலும் நீ நற்கதியை அடைந்திருக்கிறாய். உயிர்களைப் படைப்பதும் நான்; உயிருக்குள் உயிராய் இருப்பதும் நான். மறையும் மறை கூறும் பரப்பிரும்மமும் அழியா, என் உடலின்றி வேறில்லை. வெளியுலகெல்லாம் பரவி நிற்கும் ஆன்மா ஒன்றே. அது தன்னுள் இருப்பதாகவும் மனிதன் அறிய வேண்டும். அவ்விரண்டும் நானே. தான் உறங்குவதாக ஒருவன் சொப்பனம் காண்கிறான். சொப்பனத்தில் காணும் உறக்கத்தில் வேறொரு சொப்பனம் காணுவதாக எண்ணுகிறான். அதில் மலையும் காடும் தெரிகின்றன. அவ்வுறக்கம் தெளிந்தாற்போல் தோன்றுகிறது. அப்பொழுது சொப்பனத்தில் கண்ட சொப்பனம் நீங்கியதே ஒழிய, அவன் உண்மையில் துயில் எழவில்லை. அவ்வாறே விழிப்பு என்ற மனப்பான்மையும் உள்ளும் புறமும் ஒருங்கே நிலைத்திருக்கும் பரம்பொருளின் மாயை. உறக்கத்திலும் உறங்குவதாயும் விழிப்பில் விழிப்பதாயும் துலங்கும் மெய்யறிவே நான் என்று தெளிவாய். இவ்வறிவுருவான என்னைவிட வேறென்ற வேற்றுமை புத்திதான் ஜீவனுக்குச் சம்சாரம் என்ற பிறப்புக்கும், இறப்புக்கும் காரணம். மானிடனாய்ப் பிறந்தும் இவ்வுண்மையை அறியாத பாமரனுக்கு எங்குமே அமைதி இல்லை. மனிதர் முயற்சியோடு செயல்களைச் சாதிக்கிறார்கள். செய்வதில் சிரமம், பயன் விபரீதம். துணிவதை விட்டுச் சும்மா இருப்பதே அறிந்தவனுக்கு அழகு. கணவனும், மனைவியும் மகிழ்ச்சி வளர்ந்து துன்பம் குன்ற வேண்டுமென்று பாடுபடுகின்றனர். அவர்களுக்குத் துயரே மிஞ்சி நிற்கிறது. அறிஞன் என்று அகம்பாவம் அடைந்து வருந்துவோரைப் பார்த்தும், விழிப்புக்கும் சொப்பனத்துக்கும், துயிலுக்கும் மேலிருக்கும் ஆன்மாவின் சூக்ஷ்ம நிலையை அறிந்தும், மண்ணுலகிலும், விண்ணுலகிலும் புலன்களால் வரும் சுகங்களை விவேகத்தினால் விலக்கியும், அறிவிலே அமைதியுற்று, என்னிடம் பக்தியைப் பெருக்க வேண்டும். பரமனே அந்தராத்மாவென்பதை அறிந்தால், சித்தியை அடைவாய்."

இவ்விதம் உபதேசம்செய்து மறைந்த ஆதிசேஷனை வணங்கி விட்டுச் சித்திரகேது ஆகாயத்தில் உலாவி வந்தான். சுமேருமலையின் சாரலில் பல்லாண்டுகள் வாழ்ந்து இன்பங்களை அனுபவித்தான். ஒரு நாள், தன் விமானத்தில் உலாவி வருகையில் சிவனைக் கண்டான். சிவபெருமான் சித்தரும் சாரணரும் சூழ, தவமுனிவர் பலர் இருக்கும் சபை நடுவே தன்னுடலில் பாதியாம் பார்வதியை மடிமீதிருத்தி அணைத்திருந்தார். இதைப் பார்த்துச் சித்திரகேது உரக்கச் சிரித்



தியாகராயநகர் பண்பாட்டுக் கழகத்தினர் ராஜாஜியின் பிறந்தநாள் விழாவை நமது கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடினர். இவ்விழாவில் டாக்டர் சுப்பராயன் எம். பி., திரு வி. ஆர். பட்டாபிராமன், எம். பி., வேங்கடேசுவரா சர்வகலாசாலை துணை வேந்தர் திரு கோவிந்தராஜுலு நாயுடு, திரு டி. செங்கல்வராயன் முதலியவர்கள் பங்கெடுத்துக்கொண்டு ராஜாஜியின் சேவைகளை வியந்து பாராட்டிப் பேசினார்கள். நின்று பேசுபவர்தான் கழகத்தின் காரியதரிசி திரு ஜகந்நாதன்.

தான். அம்மை செவியுறும் குரலில் அவர்களை ஏளனம் செய்தான்.

"பூமிக்குப் பதியான சிவபிரானைப் பாருங்கள்! சபாபதி! உடல் படைத்தோருக்கு உபதேசம் செய்யும் மூக்கியர். நடுச்சபையில் நங்கையைத் தன்னோடு அணைத்து அமர்ந்துளார்! தரிப்பது சடை. பயில்வது தவம்! மறை அறிவோர்க்கு மன்னவர்! பாமரனைப் போல் பத்தினியை பக்கத்திலிருத்தி அணைத்துக் கொள்ளுகிறார்!" என்று உரைத்தான்.

சிவன் புன்னகை செய்துவிட்டுச் சும்மா இருந்தார். சபையோரும் வாய் திறக்கவில்லை. ஆனால் அன்னைக்கு அடங்காச் சினம் பொங்கியது.

"எம்மைப் போல் வெட்கமற்ற வெறியரைத் திருத்தவே இவன் கொற்றவனென்று வந்துளனோ? பிரமனும், நாரதரும், பிருகுவும், கபிலரும், மனுவும் தருமத்தை அறியாத அறிவிலிகள் போலும்! மங்களத்துக்கே மங்களமாம், மூவுலகுக்கும் ஆசிரியனாய், முனிவர் வணங்கிய தாளோன் எம்மானைப் பழித்த இப்பாவியைத் தண்டித்தே தீருவேன். நல்லோர் நாடும் நாராயணன் தாளை இம் மதம் கொண்ட மதியீனன் அணுகுவதற்குத் தகுந்தவன் அல்ல. ஆகவே இவன் அசுரனாய்ப் பிறக்கட்டும்" என்று சபித்தாள் பார்வதி.

சாபத்தைச் செவியுற்ற சித்திரகேதுவுக்கு அப்பொழுது புத்தி வந்தது. விமானத்தை விட்டு இறங்கினான். அன்னையை வணங்கினான்.

"தாயே! தாங்கள் தந்த சாபத்தை ஏற்றுக் கொள்கிறேன். தேவர் தரும் சாபம் மானிடரின் விதிப்பயனே. என்னை மன்னித்தருள்வாய்" என்று வேண்டிக் கொண்டான்.


இந்தச் சித்திரகேதுவே பார்வதியின் சாபத்தால் அசுரனாய்த் தோன்றிய விருத்திரன்.



இந்த மனோரம்யமான
பிரகாசமான பெயிண்டை
ஒரு முறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்!
ஷாலிமார் ஸுபர்லாக் ஸின்தடிக் எனமல்— உட்புறமோ, வெளிப்புறமோ, எந்தப் புறமானாலும் பூசலாம் அதி சீக்கிரத்தில் உலர்ந்து, அதிக நாள் மிகப் பளபளப்புடன் இருக்கக் கூடியது. வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், ப்ரஷ்ஷினாலாவது, ஸ்பிரேயினாலாவது அல்லது டிப்பிங் முறையிலாவது, எல்லாவித இடத்திலும் பூசலாம்.
38 வித கலர்களில் இவை பைன்ட், காலன் டின்களிலும், 5 காலன் டிரம்களிலும் கிடைக்கின்றன. கலர்கள் ஒன்றோடொன்று கலக்கலாம்.
ஷாலிமார்
ஸுபர்லாக்
ஸின்தடிக் எனமல்
SHALIMAR PAINT
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD.
Calcutta - Bombay - Madras - New Delhi - Kanpur
be Bright - Call Madras 55965

ரிக்ஷாக்காரன் நல்லி

ராஜாஜி



புதுச்சட்டம் வந்து சென்னையில் ஆள் இழுக்கும் ரிக்ஷாக்கள் ஒழிந்து போயின. எல்லாம் மோட்டார் ரிக்ஷாக்களாகி விட்டன.

"இந்த மோட்டார் ரிக்ஷா சப்தம் சகிக்க முடியவில்லை" என்றார் ஒரு கிழவர். "பழையநாள் ரிக்ஷாக்கள் எவ்வளவு சவுகரியமாக இருந்தது."

"இதுவென்ன நீங்கள் சொல்லுவது விரோதமாக இருக்கிறது? மாட்டைப் போல் மனிதன் வண்டியை இழுப்பது மனிதத் தன்மைக்கும் நாகரிகத்துக்கும் முற்றிலும் முரண் அல்லவா?"

"முரண்தான், முரண்தான். சாமியார் நல்லியைப் பற்றி நீர் கேள்விப் பட்டிருக்கிறீரா?" என்றார் கிழவர்.

"இல்லை. சொல்லுங்கள், கேட்கிறேன்" என்றார் ராமநாதன் செட்டியார். அவர் இளம் காரியதரிசி.

* * *

ஆள் இழுக்கும் ரிக்ஷாக்கள் சென்னையிலிருந்த காலம்.

ரிக்ஷாக்காரன் நல்லியை அவனுடைய சகாக்கள் எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்தார்கள். திருட்டுச் சாராயம் குடிக்கமாட்டேன் என்றான். முரட்டுப் பிடிவாதமாக, "அந்த வேலையில் நான் சேரமாட்டேன்" என்று சொல்லி விட்டான்.

"அடே! இவன் சாமியாராய்ப் போய் விட்டாண்டா" என்றும் இன்னும் பலவிதமாகவும் பரிகசித்தார்கள். அவன் எதற்கும் அசையவில்லை.

ரிக்ஷா நிறுத்துமிடத்தில் ஒரு பழைய வேப்பமரம். அதன் வேர் முடிச்சு ஒன்றை ஆஞ்சநேயப்பித்தன் வரதன் ஒரு அழகிய அனுமாராகக் காவி தீட்டி வைத்திருந்தான். இந்த வரதன் பல இடங்களில் அனுமார் படம் வரைந்து வரைந்து அதுவே ஒரு விரதமாக வைத்துக் கொண்டிருந்தான். சுமார் ஒரு லட்சம் அனுமார் படங்கள் பல ஊர்களில் இப்படி எழுதி விட்டு முடிவில் கும்பகோணத்தில் ஒரு அனுமார் கோயில் கட்டி அங்கேயே இருந்து வந்தான்.

இந்த வேப்பமர அனுமானை நல்லி தினமும் காலையில் வணங்கி விட்டுத் தொழில் ஆரம்பிப்பான். அவனைப் பார்த்து மற்ற ரிக்ஷாக்காரர்களும் தொழுது வந்தார்கள். ஆயினும் நல்லி தொழுவது ஒரு தனிக்காட்சியாக இருக்கும். கண்ணை மூடிக்கொண்டு ஒரு நிமிஷம் சமாதியில் இருப்பது போல் காண்பான்.

'சாமியார் நல்லி' என்று அவன் பெயர் ஊர்ஜிதமாய் விட்டது.

* * *

சாமியார் நல்லி நாள் ஒன்றுக்கு மூன்று ரூபாய் சம்பாதிப்பான். ரிக்ஷா வண்டி முதலாளிக்கு இதில் அரை ரூபாய் கொடுத்து விடுவான். மீதி இரண்டரை ரூபாயையும் ஒவ்வொரு மாலையும் தன் தாயிடம் கொடுத்து விடுவான். மற்றவர்களைப் போல் பீடி குடிக்க மாட்டான். வேறு எந்தச் செலவும் செய்யாமல் தாயாரிடம் பணத்தைக் கொடுத்து விடுவான். ஒரு பள்ளத்தாக்கில் சிறு குடிசையில் இவர்கள் குடித்தனம். குடிசைக்காக ஒரு கங்காணி வந்து மாதம் ஒன்றுக்கு நான்கு ரூபாய் வாங்கிப் போய் விடுவான். ஆயினும் நல்லி சம்பாதிப்பது தாய்க்கும் மகனுக்கும் சோற்றுக்குப் போதுமாயிருந்தது.

"அப்பனே! என்ன பாவம் செய்து எனக்கு மகனாகப் பிறந்தாய்? எல்லாரும் படித்து உத்தியோகம் செய்கிறார்கள். நீ இப்படி மாடுமாதிரி வண்டி இழுத்து நாம் ஜீவனம் செய்ய வேண்டியிருக்கிறதே" என்பாள் கிழவி.

"நமக்கு ஒரு குறையுமில்லை, அம்மா!" என்பான் நல்லி. "வண்டி இழுப்பதில் என்ன அவமானம்? நடக்க முடியாதவர்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்வதில் என்ன பிசகு? தருமமான தொழில், அம்மா! நீ விசனப்பட வேண்டாம். ஆண்டவன் நம்மைக் காப்பாற்றி வருகிறான்."

இப்படி நல்லி சொல்லும் போது கிழவிக்குத் திருப்தியாகி விடும். இருவரும் சந்தோஷமாய் இருந்து வந்தார்கள்.

ஒருநாள் நல்லி வண்டி இழுத்துச் சென்று கூலி

வாங்கித் திரும்பும் போது, ஒரு அம்மை வழியில் சாலைமரத்தின் கீழ் "அப்பா! அப்பா!" என்று நோயில் வருந்திய குரலில் கதறிக் கொண்டிருந்தாள். "ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும், அப்பனே! என் கையில் காசு இல்லை. என்ன செய்வேன்" என்றாள்.



பிரசவ ஆஸ்பத்திரிக்கு அவளைத் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு போனான்.

"அப்பா! உனக்குக் கூலி கொடுக்க வேண்டுமே? என்னசெய்வேன்?" என்று அவள் வருந்தினாள்.

"கூலி வேண்டாம். போதிய கூலி இன்று மத்தியானமே சம்பாதித்து விட்டேன். உன்னை ஆஸ்பத்திரியில் இறக்கின சந்தோஷமே என் கூலி. குழந்தை பெற்றுச் சுகமாக ஊர் திரும்புவாயாக" என்று சொல்லிவிட்டு நல்லி வந்து விட்டான்.

"நீ முருகக் கடவுளே தான், தம்பி!" என்று அந்த அம்மை ஆஸ்பத்திரிக்குள் புகுந்தாள்.

* * *

அன்று முதற்கொண்டு நல்லி ஒரு திட்டம் செய்துகொண்டான். மூன்று ரூபாய் சம்பாதித்ததும் நோயாளிகளைக் கூலியில்லாமல் இழுத்துச் செல்வது என்று விரதம் செய்துகொண்டு அப்படியே செய்து வந்தான்.

"அடே! இவன் பெரிய சாமியாராகி விட்டான். இவனை என்ன செய்வது? இம்மாதிரி ஆட்களிடம் தானே நாம் நல்ல கூலி கேட்டுப் பெறலாம்? இவன் இவர்களைச் சும்மா இழுத்துச் சென்று நம் தொழிலைக் கெடுக்கிறான்" என்று ரிக்ஷாக்காரர்கள் கோபமாகக் கூட்டம் கூடிப் பேசினார்கள்.

"அவனை ஒன்றும் செய்யாதேங்கோ" என்றான் ஒரு குடிகார ரிக்ஷாக்காரன்.

"அவனைத் தொந்தரவு செய்தால் சாமி நம்மை தண்டித்து விடுவார்" என்று அந்தக் கிழ ரிக்ஷாக்காரன் வேப்பமரத்து அனுமாருக்கு ஒரு கும்பிடு போட்டான்.

கிழவன் சொல்வதே சரி என்று எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்.


* * *

நல்லிச் சாமியாரைப் பற்றிய செய்தி ஊரெல்லாம் பரவியது. குறிப்பிட்ட தொகை வந்ததும் கூலியில்லாமல் இழுக்கும் ஒரு ரிக்ஷாக்காரன் சென்னையில் இருக்கிறான் என்று வெள்ளைக்காரர்களெல்லாம் இவனைத் தேடிப் பார்த்துவிட்டுப் போவார்கள். அவர்கள் சில சமயம் இவனுக்குப் பரிசு தருவதாக ஐந்து ரூபாய் நோட்டைக் காட்டி, "இதை எடுத்துக் கொள், செலவு செய். நீ ரொம்ப நல்லவன்" என்பார்கள்.

"வேண்டாம், சாமி! வேண்டுமானால் வண்டியில் ஏறுங்கள். வெறுமனே பிச்சை வாங்க மாட்டேன்!" என்பான்.

* * *

நல்லியின் தாயாரும் மகனைப் பற்றிப் பெருமைப்பட்டு ஆனந்தத்தில் மூழ்குவாள்.



"நீ கடவுளேதான், நல்லி!" என்பான்

"நாம் எல்லாரும் தெய்வமேயல்லவா, அம்மா?" என்பான் நல்லி

"நீ எங்கே படித்தாய், குழந்தாய், இந்தச் சாஸ்திரமெல்லாம்!" என்று இடுவி மகனைக் கட்டிக்கொண்டு உச்சிமோந்து சந்தோஷப்படுவாள்.

*   *   *

புதுச் சட்டம் வந்து சென்னையில் ஆள் இழுக்கும் ரிக்ஷாக்கள் ஒழிந்ததும், 'நல்லிச் சாமியார் எங்கே?' என்று பலர் விசாரித்தார்கள். செய்தி சொல்வார் யாருமில்லை

போரூரில் அவன் மாமன் பண்ணையில் வேலைசெய்து வருகிறான் என்று சிலர் சொன்னார்கள் "ஆனால் அது நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்பார்கள் வேறு சிலர்.

*   *   *

"**நீ**ங்கள் சொல்லும் கதையை நான் நம்பவில்லை" என்றார் இளப்காரியதரிசி

"நீர் நம்பாமல் போனால் எனக்கு ஒரு ஆட்சேபணையுமில்லை. நான் அறிந்ததைச் சொன்னேன்."

"கோபிக்க வேண்டாம், சாமி! நல்லியைப் போல் எந்த ரிக்ஷாக்காரனும் உண்மையில் நடந்து கொண்டிருக்க மாட்டான். அது இயற்கைக்கு விரோதமாகத் தோன்றுகிறது. அதனால் சொன்னேன்" என்றார் ராமநாதஞ் செட்டியார்

"இன்று பத்திரிகையில் ஒரு கைவண்டிக்காரனைப் பற்றி வந்த செய்தியைப் படித்தீரா?" என்று கேட்டார் இறவர்

கேட்டுவிட்டுப் பத்திரிகையை எடுத்துக் கொடுத்தார்.

ராமநாதஞ் செட்டியார் படித்துவிட்டு, "ஆமாம். இது அமெரிக்காவில் நடந்திருக்கலாம். நம்முடைய நாட்டில் இந்த மாதிரியான உணர்ச்சி ஏது? எல்லாம் கபாகல மயம்" என்றார் காரியதரிசி

"அப்படியில்லை, ராமநாதஞ் செட்டியாரே! நம்ம தேசத்திலும் நல்லவர்கள் இல்லாமல் இல்லை" என்றார் இறவர்.


பொங்கல்
வாழ்த்துக்கள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
வனப்புக்கும் உழைப்புக்கும்
உறுதிக்கும் கோ - ஆப்டெக்ஸ்
ஆடைகளையே வாங்குங்கள்
★ புடவைகள் ★ வேஷ்டிகள்
★ வீடு அலங்காரத்திற்கான
துணிகள் முதலியன
சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
பாலசுந்தரம் மாளிகை
34/A-1, பாந்தியன் சாலை
சென்னை - 8



அத்தியாயம் 18

"யாரோ ஒரு இளைஞன்"

தன் தந்தையினிடமிருந்து நாராயணன் சேந்தன் கொண்டு வந்த அந்தரங்கத் திருமுகத்தைப் படித்த மறுநாள் காலையிலேயே குழல்மொழி திருமுகத்தில் கண்ட கட்டளையை நிறைவேற்றுவதற்குப் புறப்பட்டுவிட்டாள். நாராயணன் சேந்தனும் அவளோடு துணையாகச் சென்றான். தாங்கள் புறப்பட்டுச் செல்லும் செய்தி இடையாற்றுமங்கலம் மாளிகையை விட்டு வெளியே பரவி விடாமல் எச்சரிக்கையும், ஏற்பாடும் செய்து விட்டுத்தான் புறப்பட்டிருந்தார்கள் அவர்கள். 'மகாமண்டலேசுவரருடைய ஏற்பாட்டின்படி தாங்கள் இருவரும் குமார பாண்டியனைத் தேடிக் கொண்டு செல்வது' எவருக்கும் தெரிந்துவிடக் கூடாதென்று கருதியதனால்தான் அவர்கள் அதில் அவ்வளவு கண்டிப்பாக இருக்கும்படி நேர்ந்தது.

விழிஞம் துறைமுகத்துக்குப் போய் அங்கிருந்து தனியாக ஒரு கப்பல் ஏற்பாடு செய்துகொண்ட பின் பயணத்தை மேலே தொடர வேண்டுமென்பது அவர்கள் திட்டம். நாராயணன் சேந்தன் வைகறையில் சற்று முன்னதாகவே இடையாற்றுமங்கலத்திலிருந்து குதிரையில் புறப்பட்டு விழிஞத்துக்குப் போய் விட்டான். அவன் சென்றபின்பு குழல்மொழி சிவிகை மூலமாகப் பயணம் செய்தாள். இடையாற்றுமங்கலத்துக்கும், விழிஞத்துக்கும் இடையில் பரந்து கிடந்த தொலைவைக் கடந்து வழிப் பயணம் செய்வதில்தான் எவ்வளவு இன்பம். கடல் அருகில் இருந்ததனால் சுகமான காற்று வீசியது. ஓவியன் அளவு பார்த்து, அழகு பார்த்து, இடப் பொருத்தம் பார்த்து, அள்ளிச் சிதறிய வர்ணங்களைப் போல் அவள் பயணம் செய்த அந்த நெடுவழியில் பல நிறங்களில், பல விதங்களில், பல அடிப்படைகளில், உயிர் வாழ்க்கை என்ற பேரியக்கம் பரவிக் கிடந்தது. பசுமை நிறம் போர்த்த காடுகளும், கூட்டம் கூட்டமாகப் பசுக்களை மேய்க்கும் ஆயர்களும் சூழ்ந்த முல்லை நிலம். குன்றமும், அருவியும், தினைப்புனமும், வேடர்களும் நிறைந்த குறிஞ்சி நிலம். நிலம் என்னும் நல்லாள் நெடும் பசுமைச் சூல் கொண்டு தோன்றும் வயல் வெளிகளும், தாமரைப் பொய்கைகளும், சிற்றூர்களும், செறிந்த மருத நிலம். தாழம் புதரும், மீனவர் குடியிருக்கும் பரதவப் பாக்கமும் மலிந்த நெய்தல் நிலம். இத்தகைய நானிலங்களின் அழகையும், நானாவிதமான வாழ்க்கை முறைகளையும் சிவிகையின் இரு புறமும் பார்த்துக் கொண்டே போனாள் குழல்மொழி. மண்ணில் உள்ள மேடு பள்ளங்களைப் போல் மனித வாழ்க்கையிலுள்ள மேடுபள்ளங்களையும் அவள் பார்த்தாள். குறிஞ்சி நில வாழ்வின் செழிப்பு மருத நிலத்தில் இல்லை, மருத நில வாழ்வின் வளம் முல்லை நிலத்தில் இல்லை. முல்லை நில வாழ்வின் ஊட்டம் நெய்தல் நிலத்தில் இல்லை. ஆனால் மொத்தமாக வாழ்க்கை என்ற ஒன்று எல்லா இடத்திலும் ஓடிக் கொண்டிருந்தது. நிற்காமல் ஓடிக் கொண்டும், ஓடாமல் நின்று கொண்டும், நிலத்துக்கேற்ப, வளத்துக்கேற்ப இன்பத் துன்பங்

நா. பார்த்தசாரதி

களின் மிகுதிக்கேற்ப, உயிரியக்கம் புடைபெயர்ந்து கொண்டிருந்தது.

வேகமாகச் செல்லும் சிவிகையில் பட்டு மெத்தை மேல் அமர்ந்து கொண்டு மழை பெய்வதை வேடிக்கை பார்க்கும் சிறுபிள்ளையின் ஆசையோடு அந்த நெடுஞ்சாலையின் இரு புறங்களிலும் பரவிக் கிடக்கும் வளமுறைகளையும் வாழ்க்கையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு போனாள் மகா மண்டலேசுவரரின் செல்வப் பெண்.

இடையிடையே எதை நினைத்துக் கொண்டோ பெருமூச்சு விட்டாள் அவள். நீண்டு பிறழ்ந்து குறுகுறுத்து நெஞ்சின் களினமெல்லாம் சிமிலாடும் அவள் நயனங்களில் பெருமூச்சு விடும்போதெல்லாம் ஏக்கம் படர்ந்தது. விழிகள் ஏங்கும்போதெல்லாம் வதனம் வாடியது. வதனம் வாடும்போதெல்லாம் வட்டப் பிறை நெற்றி சுருங்கியது. நெற்றி சுருங்கும்போதெல்லாம் நெற்றிக்குக் கீழே நாசிக்கு மேலே புருவ நுனிகளின் கூடுவாயில் எதிரெதிரே இரண்டு நெளிகோடுகள் இடுங்கித் தோன்றின. நாகலிங்க மலருக்கு மடிப்பு மடிப்பான இதழ்கள் எப்படி அழகோ, அப்படி அவள் நெற்றிக்கு இது ஒரு தனி அழகு.

அவள் நினைத்தாள்: "நான் மறுபடியும் இந்தச் சாலை வழியே திரும்பும்போது குமாரபாண்டியரோடு திரும்புவேனானால் தான் என் உள்ளத்தில் நிறைவு இருக்கும். என்னை அனுப்பிய என் தந்தையின் உள்ளம் பெருமை கொள்ளும். அவரைத் தேடிச் செல்லும் முயற்சியில் நான் வெற்றி பெற வேணும்! தெய்வமே! என்னை ஏமாற்றிவிடாதே. எனக்கு



வெற்றியைக் கொடு. என் மனத்துக்குப் பூரிப்பைக் கொடு. நான் யாரைத் தேடிச் செல்கிறேனோ, அவரை நாங்கள் அதிகம் அலைந்து திரிய நேரிடாமல் எங்கள் கண்களுக்கு முன்னால் காட்டிவிடு. கடலைக் கடந்து சென்றும் என் உள்ளத்தைக் கடந்து செல்லாமல் உறைந்து, பதிந்துபோனவரை ஒளிக்காதே" என்று நெஞ்சுருக வேண்டிக் கொண்டாள் குழல்மொழி. விழிஞத்துக்குப் போய்ச் சேருகிறவரை அவளுக்கு அதே எண்ணம்தான்.

போது கண்பகலை எட்டிக் கொண்டிருக்கும் பொழுது அவளுடைய சிவிகை விழிஞத்தை அடைந்தது. முன்பே அங்கு வந்திருந்த சேந்தன் அவளை எதிர்பார்த்துத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தான். மேற்றிசைத் தேயங்களிலிருந்து குதிரைகளும், மதுவகைகளும் கொண்டு வந்து இறக்குமதி செய்யும் கப்பல்கள் இரண்டு மூன்று சேர்ந்தாற் போல் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்திருந்ததனால் அன்றைக்கு அதிகமான கலகலப்பு இருந்தது.



கீழ்த் திசைத் தீவுகளிலிருந்து கற்பூரம், கண்ணாடிப் பொருள் முதலியவற்றை ஏற்றிக்கொண்டு வந்த கப்பல்களும் சில அன்றைக்குத் துறையை அடைந்திருந்தன. சுங்க வரி தண்டுவோராகிய அரசாங்கச் சுங்கக் காவலர்கள் வரும் பொருள்களுக்கும், போகும் பொருள்களுக்கும், மகர மீன் முத்திரை குத்தி வரி வாங்கிக் கொண்டிருந்தனர்

அவ்வளவு பெரிய கூட்டத்தில் அத்தனை கலகலப்புக்கிடையிலும் நாராயணன் சேந்தனுடைய திருவுருவம் தனியாகத் தெரிந்தது. குழல்மொழியின் பல்லக்கு வருவதைப் பார்த்துவிட்டு முன்னால் ஓடி வந்து வரவேற்பதற்காகக் கூட்டத்தில் முண்டி இடித்துக் கொண்டு வந்தான் சேந்தன். சுங்க வரி செலுத்தாமல் பொருள்களைக் கள்ளத்தனமாகக் கடத்திக் கொண்டு போகிறவர்கள் யாரேனும் இருந்தால் அவர்களைக் கண்டு பிடிப்பதற்காக மாறு வேடத்தோடு பல காவலர்கள் கூட்டத்துக்கிடையே உலாவிக் கொண்டிருப்பார்கள் அவசரமாக இடித்து முந்திக் கொண்டு விரைந்து வந்த சேந்தன் அத்தகைய சுங்கக் காவலன் ஒருவன் மேல் மோதிக் கொண்டான் அந்தக் காவலன் சேந்தனுடைய இரண்டு கைகளையும் சேர்த்து இறுக்கிப் பிடித்துக் கொண்டு அவனையே உற்றுப் பார்த்தான் மார்புக்குக் கீழ் இடுப்புக்கு மேல் சரிந்து முன் தள்ளிய சேந்தனின் தாழிப் பெரு வயிற்றில் அவனுடைய பார்வை நிலைத்தது. அவனுடைய பார்வையைக் கண்டதும் நாராயணன் சேந்தனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?" சிரிப்பை அடக்கிக் கொண்டு கேட்டான் நாராயணன் சேந்தன்

"மரியாதையாக வெளியில் எடுத்துவிடு! சுங்கம் கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக எந்தப் பொருளை இப்படி இடுப்பில் மறைத்து வைத்துக் கட்டிக் கொண்டு போகிறாய்?" அவன் அரட்டினான்

இரண்டு விலாப்புறமும் வெடித்துவிடும் போல் பெரிதான சிரிப்பை அடக்கிக் கொள்ளச் சிரமமாயிருந்தது சேந்தனுக்கு. "உலகத்திலுள்ள அத்தனை காவல்காரர்களும் தங்கள் கண்முன் நடமாடுகிற எல்லோரையும் திருடர்களென்று சந்தேகப்படுகிறார்கள் அதேபோல் உலகத்திலுள்ள அத்தனை திருடர்களும் தங்களை உற்றுப் பார்க்கிற எல்லோரையும் காவற்காரர்களென்று பயப்படுகிறார்கள்" என்று சேந்தன் தன் மனத்தில் நினைத்துக் கொண்டான்.

"உண்மையைச் சொல்லப் போகிறாயா? உதைக்கட்டுமா?" காவற்காரனுடைய குரலில் கடுமை ஏறியது. கண்களை உருட்டிக் கோபம் தோன்ற விழித்தான் அவன்.

ஆகா! என்ன அற்புதமான கேள்வி கேட்டாய் அப்பா நீ? உன் கண் பார்வையின் கூர்மையே கூர்மை. உலகத்தில் இதுவரையில் எந்த மன்னருடைய அரசாட்சியிலும் நான் இடுப்பில் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கும் இந்தப் பொருளுக்குச் சுங்கம் கேட்டதில்லை. இதோ நன்றாகப் பார்த்துக் கொள்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே தன் மேல்அங்கியை விலக்கிக் காட்டினான் சேந்தன்


தொந்தி முன் தள்ளிய அவன் வயிற்றைப் பார்த்து அந்தக் காவலன் விழுந்து விழுந்து சிரித்தான்.

'பூ! வயிறுதானா இவ்வளவு பெரிதாக முன்னால் துருத்திக் கொண்டிருக்கிறது? நான் எதையோ ஒளித்துக் கொண்டு போகிறாய் என்றல்லவா நினைத்தேன்?"

'நினைப்பாய் அப்பா! நன்றாக நினைப்பாய்! நீ ஏன் நினைக்க மாட்டாய்? சுய நினைவோடுதான் பேசுகிறாயா; அல்லது அதோ கப்பலிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும் யவனத்து மதுத் தாழியைப் பதம் பார்த்து விட்டுப் பேசுகிறாயா?"

காவலன் சிறிது நாணமுற்றுத் தலை குனிந்து நின்றான். சேந்தன் விலா விறச் சிரித்தான். அந்தச் சிரிப்பால் காவற்காரன் பொறுமையிழந்தான்.

'ஏன், ஐயா! சும்மா விழுந்து விழுந்து சிரிக்கிறாய்? ஆனாலும் மனிதன் உன்னைப்போல் இப்படிப் பருமனாக இருக்கக் கூடாது. உனக்கு ஒரு விஷயம் எச்சரிக்கை செய்து வைக்கிறேன். கேட்டுக் கொண்டு பேசாமல் போய்ச் சேர். குதிரை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக யவன வணிகர்கள் சேர நாட்டு யானைக்குட்டிகளை ஏற்றுமதி செய்து கொண்டு போக வேண்டுமென்று நெடுநாட்களாக ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'யானைக் குட்டி பருமனாகக் குட்டையாக இருக்கும்' என்பதைத் தவிர அவர்களுக்கு அதைப் பற்றி வேறு விவரம் தெரியாது. நீ எங்கேயாவது தப்பித் தவறி யவனக் கப்பல்களுக்குப் பக்கமாகப் போய் நின்று தொலைக்காதே. யானைக்



மேனகை
கடுந்தவ முனிவரான விசுவாமித்திரர் கூட
மேனகையின் மோகக் கணைகளுக்குப் பலி
யானார். அவளது அழகான கூந்தல் அவளது
வசீகரத்துக்குத் துணைப்பலமாக நின்றது.
நீங்கள் மேனகையைப் பார்த்துப்
பொருமைப்பட வேண்டிய அவசியமில்லை.
பிரஸிடெண்ட்
டாய்லெட்ஸ்
உபயோகியுங்கள்
உங்கள் அழகான தோற்றத்தை இவைகள்
மேலும் பிரகாசிக்கச் செய்கின்றன
Manufacturers
RATHOD TRADING COMPANY
Madras.1
எஸ்.மேனன்



குட்டி பார்க்காத யவனர்கள், "இது தான் யானைக் குட்டி" என்று உன் முதுகில் மகர முத்திரை குத்தச்சொல்லிக் கப்பலில் தூக்கிப் போட்டுக் கொண்டு போய் விடப் போகிறார்கள்" என்று சுடச் சுடச் சேந்தனைப் பதிலுக்குக் கேலி செய்து தன்னுடைய ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டான் அந்தக் காவலன்.

இந்தச் சமயத்தில் பல்லக்கிலிருந்து இறங்கிய குழல்மொழி சேந்தனைக் கைதட்டிக் கூப்பிடவே, நாராயணன் சேந்தன் அந்தக் காவலனோடு வம்பளப்பதை நிறுத்திக் கொண்டு விரைந்து நடந்தான்.

"அம்மணி! வாருங்கள். நேரமாக்கி விட்டீர்களே? நான் அப்போதிருந்து உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன். சிவிகையை இன்னும் விரைவாகக் கொண்டு வரச்சொல்லி ஆட்களை விரைவுபடுத்தி வந்திருக்கலாம் நீங்கள்" என்று குழல்மொழியின் அருகில் சென்று சேந்தன் அடக்க ஒடுக்கமாகக் கூறினான்.

"சுமப்பவர்களும் மனிதர்கள் தானே? அவர்களை அடித்தா துரத்த முடியும்?......சரி! நீங்கள் முன்னால் வந்து கப்பலுக்கு ஏற்பாடு செய்து விட்டீர்களோ, இல்லையோ?" என்று அவள் கேட்டாள்.

"ஓ! அந்த ஏற்பாடெல்லாம் வந்தவுடனேயே முடித்து விட்டேன். அதோ கப்பல் தயாராக நிற்கிறது. நாம் புறப்பட வேண்டியதுதான்" என்றான் சேந்தன்.

சிவிகையையும், அதைத் தூக்கிக் கொண்டு வந்தவர்களையும் திருப்பி அனுப்பிவிட்டுக் கப்பல் நின்றுகொண்டிருந்த இடத்தை நோக்கி நடந்தார்கள் சேந்தனும், குழல்மொழியும். சிறிதானாலும் உயர்ந்த வசதிகள் நிறைந்த அழகான கப்பல் அது. தாங்கள் போகிற காரியத்தின் இரகசியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்தக் கப்பலைத் தனியாகத் தங்களுக்கென்று மட்டும் ஏற்பாடு செய்திருந்தான் சேந்தன். குழல்மொழியையும், அவனையும் தவிர மாலுமியும், இரண்டொரு கப்பல் ஊழியர்களும் மட்டுமே அதில் இருந்தனர்.

கப்பல் புறப்படுவதற்குமுன் சேந்தனும், குழல்மொழியும் கரையில் நின்று சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது சிரிப்பு மலர்ந்த முகத்தோடு கவர்ச்சி நிறைய உடையணிந்து கொண்டிருந்த ஒரு இளைஞன் அவர்களுக்கு அருகில் வந்தான். பெண்மைச் சாயல் கொண்ட அந்த இளைஞனின் நீண்ட முகம் பார்க்கிற எவரையும் ஒரு கணம் மயக்காமல் போகாது. ஆடவர் பெண்மையை அவாவும் தோற்றம் அது. பெண்ணுக்கு இருக்க வேண்டிய ஒளிவு மறைவு உட்பொருளுள்ள சிரிப்பும் இதழ்களின் சிவப்பும், அந்த வாலிபனுக்கு இருப்பதைச் சேந்தன் வியப்போடு பார்த்தான்.

"ஐயா! இந்தக் கப்பலில் உங்களோடு பிரயாணம் செய்ய என்னையும் அனுமதிப்பீர்களா?"

'அடேடே! குரல் கூட இனிமை சொட்டுகிறது. இந்தப் பயல் மட்டும் பெண்பிள்ளையாகப் பிறந்திருந்தால் உலகத்திலுள்ள அத்தனை அரச குமாரர்களும் இவளை யார் மணந்து கொள்வதென்ற போட்டியில் அடித்துக் கொண்டு இடப்பார்கள்' என்று மனத்துக்குள் எண்ணியவனாய், "தம்பி! இந்தக் கப்பலில் வேறு யாரையும் ஏற்றிக் கொள்வதற்கில்லை. நீ போய் வேறு கப்பலைப் பார்" என்று பதில் சொன்னான் சேந்தன். அந்த இளைஞன் சேந்தன் கூறியதைக் கேட்டுக் கொண்ட பின்னும் அங்கிருந்து போகாமல் நின்றான்.

"சகோதரி! நீங்களாவது மனம் இரங்குங்கள். நான் பயந்த சுபாவம் உள்ளவன். உங்களைப் போல் துணையோடு பயணம் செய்தால் எனக்கும் நல்லது" என்று குழல்மொழிக்கு அருகில் போய் நின்றுகொண்டு கெஞ்சினான். பெண்மையின் எழிலும் ஆண்மையின் மிடுக்கும் ஒன்றுபட்டுத் தோற்றிய அந்த விடலைப் பிள்ளையை நிமிர்ந்து நன்றாகப் பார்த்தாள் குழல்மொழி. அவள் கண்களைக் கூச

வைத்தன அவன் பார்த்த பார்வையும், சிரித்த சிரிப்பும். சினத்தோடு முகத்தைச் சுளித்துப் பார்வையைக் கடுமையாக்கினாள் குழல்மொழி. அதன் பின்பே இளைஞன் சிரிப்பதை நிறுத்தினான்.

"தம்பீ! நீ பயந்த சுபாவம் உள்ளவன் என்கிறாய்! ஆனால் இடையில் பெரிதாக உறையிட்ட வாள் தொங்குகிறது. பொய்யும் புரட்டும் பேசுவதற்குக் கொஞ்சம் வயதான பின்னர் கிளம்பியிருக்கலாமே நீ! உன் முகத்தைப் பார்த்தால் பால் வடிகிறது. பேச்சையும், சிரிப்பையும் பார்த்தால் சூது இருக்கிறதே! மீசைகூட இன்னும் அரும்பவில்லை. அதற்குள் இதெல்லாம் எங்கேயப்பா கற்றுக் கொண்டாய் நீ?" என்று சேந்தன் கடுமையான குரலில் இரைந்தான்.

"ஐயா! கோபித்துக் கொள்ளாதீர்கள். உங்களைப் பார்த்தால் நல்லவர் மாதிரித் தெரிந்தது. உதவி செய்வீர்கள் என்று நம்பிக் கேட்டேன்."

"போ! போ! அதெல்லாம் முடியாது. இந்தக் கப்பலில் இடம் கிடையாது."

"மனத்தில் இடமிருந்தால் கப்பலில் இடம் இருக்கும். கொஞ்சம் தயவு செய்யுங்கள்."

"பேசாமல் போகிறாயா? கப்பல் ஊழியனைக் கூப்பிட்டுப் பூசைக்காப்பு முதுகில் போடச் சொல்லட்டுமா?"

சேந்தனின் ஆத்திரத்தைக் கண்டு அந்த இளைஞன் கன்னங் குழியச் சிரித்தான். குழல்மொழி தன் மனத்தை எவ்வளவுதான் அடக்கிக் கட்டுப்படுத்திப் பார்த்தாலும் அவள் விழிகள் அவளையும் மீறி அந்தச் சிரிப்பை ஆவலோடு ஓரக் கண்ணால் காண விரைந்தன. பொல்லென்று பூத்து மறையும் முல்லைப்பூ வரிசை போல் அப்படி ஒரு அழகிய சிரிப்பு அது. சிரித்துக் கொண்டே அவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி அங்கிருந்து நகர்ந்தான் அந்த இளைஞன். அவன் சிறிது தள்ளிச் சென்ற பின்பு சேந்தன் குழல்மொழியைப் பார்த்து,

"அம்மணி! இந்தமாதிரி விடலைப் பயல்களை நம்பவே கூடாது. சிரிப்பையும், பேச்சையும் முகமலர்ச்சியையுமே முதலாக வைத்துக் கொண்டு வஞ்சகம், ஏமாற்று ஆகிய பண்டங்களை விற்பனை செய்யும் அறவிலை வணிகர்கள் இப்போது உலகத்தில் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள். கவனமாக இருக்க வேண்டும். புலியையும் சிங்கத்தையும் பார்த்துப் பயந்து கொண்டிருந்தது போய் இப்போது மனிதர்களைப் பார்த்தே மனிதர்கள் பயப்படவேண்டியிருக்கிறது. புலிக்கும், சிங்கத்துக்கும், கெட்டவற்றைத் திட்டமிட்டுக் கொண்டு செய்வதற்கு 'மனம்' என்ற ஒன்று இல்லை. மனிதர்களுக்கு அது இருக்கிறது" என்று பெரிய அறநூலாசிரியனைப் போலப் பேசினான் சேந்தன்.

"இங்கே நின்று கொண்டிருந்தால், மறுபடியும் அந்த இளைஞன் வந்து ஏதாவது கேட்டுக் கெஞ்சுவான். அல்லது வல்வழக்குப் பேசி வம்பு செய்வான். வாருங்கள்! கப்பலில் போய் இருந்து கொண்டு பேசலாம்" என்று சேந்தனையும் கூப்பிட்டுக் கொண்டு கப்பலுக்குள் ஏறிச் சென்றாள் குழல்மொழி.

கப்பலுக்குள் சென்றபின் அவர்கள் பேச்சு, 'குமாரபாண்டியனை எந்தெந்தத் தீவுகளில் தேடுவது? எப்படிக் கண்டுபிடிப்பது?' என்பது பற்றி நிகழ்ந்தது. சிறிது நாழிகைக்குப் பின் கப்பல் மாலுமி வந்து, 'புறப்படலாமா?' என்று கேட்டபோது அவர்கள் சம்மதம் தெரிவித்தனர். நங்கூரக் கயிற்றை அவிழ்த்துவிட்டதும் கப்பல் மெல்ல நகர்ந்தது. கப்பலுக்கும் கரைக்கும் நடுவே கடலின் பரப்பு அதிகமாகிவிரிந்துகொண்டே வந்தது.

"வாருங்கள்! கீழ்த்தளத்தில் நீங்கள் தங்கிக் கொள்வதற்கென்று ஒரு அறையை எல்லா வசதிகளோடும் தனியே ஒழித்து வைக்கச் செய்திருக்கிறேன். அதை உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று குழல்மொழியைக் கீழ்த்தளத்துக்கு அழைத்துச் சென்றான் நாராயணன் சேந்தன். 'எந்தக் கப்பலிலும் இருக்க முடியாத அளவு அலங்கரிக்கப்பட்டு அரசகுமாரிக்கு ஒப்பான ஒரு இளம்பெண் தங்குவதற்குரிய சகல வசதிகளுடனும் இருப்பதாகச் சொல்லிக் கொண்டே அந்த அறையின் கதவைத் திறந்தான் நாராயணன் சேந்தன்.

கதவைத் திறந்ததும் கலகலவென்ற சிரிப்பொலியுடன் அந்த அறைக்குள்ளிருந்து வெளி வந்த ஆளைப் பார்த்த போது சேந்தனும் குழல்மொழியும் பேயறைபட்டவர்களைப் போல் முகம் வெளிறிப் போய்த் திகைத்து நின்றார்கள். "நானாகவே இந்தக் கப்பலில் இடம் தேடி எடுத்துக் கொண்டதற்காக என்னை மன்னிக்க வேண்டும். நான் என்ன செய்வேன்? நேர்வழி மூடியிருந்தது. குறுக்கு வழியை நானே திறந்துகொண்டேன்." பெரிய காரியத்தைச் சாதித்து விட்டவன் போலச் சிரித்துக் கொண்டே கூறினான் அந்த எழில் வாலிபன்.

அத்தியாயம் 19

பேசாதவர் பேசினார்!

ஏதோ பெரிய காரியத்தைச் சொல்லப்போகிறவர் போல் வலுவில் தன்னைக் கூப்பிட்டனுப்பித் தன் உள்ளங்கையில் கருவேல முள்ளைக் குத்திய மகாமண்டலேசுவரரின் செயலைக் கண்டு வெளியே பொறுமையாக இருப்பதுபோல் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள்ளே அடக்க முடியாத வெகுளி உண்டாயிற்று சீவல்லபமாறனுக்கு. அவன் மனம் உணர்ச்சி வசப்பட்டுக் கொதித்தது.

"சே! சே! பொம்மை செய்வதற்காகக் களிமண்ணைப் பிசைந்துவைத்த குயவன் தன்னிலை சோர்ந்து அதே களிமண்ணில் தலைகுப்புற வழுக்கி விழுவதுபோல் அறிவின் ஆற்றலால் எட்டுத் திக்கும் விட்டெறிந்து ஆள்வதாக எண்ணிக்கொண்டு பைத்தியக்காரத்தனமாக நடந்துகொண்டு விடுகிறார்கள் சிலர். அரிய பெரிய அறிவாளியின் மனமும் கைகளும், சில சமயங்களில் எளிய சிறிய காரியங்களை நினைத்தும் செயல்பட்டும் தடுமாறி விடுகின்றன. அறிவில்லாதவனிடத்தில் இருக்க முடியாத அவ்வளவு பலவீனங்களும், அறிவுள்ளவனிடத்தில் நிரம்பிக் கிடக்கின்றன. தேனைக் குடிப்பதற்குப் போன ஈ தேனுக்குள்ளேயே விழுந்து முழுகிவிடுவதுபோல் தண்ணீரில்விழுந்தவனைக் காப்பாற்றப் போனவனும் தண்ணீரில் விழ நேர்வதுபோல், காமம், குரோதம், பொறாமை, பயம் இவையெல்லாம் கூடாதென்று சொல்லிக் கொண்டே இவைகளைத் தவிர வேறு பண்பையே கடைப்பிடிக்காத அறிவாளிகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் உலகில்? இந்த உலகத்தில் சாதாரண மனிதன் கவலையில்லாமல் வயிற்றுக்குச் சோறும், உடலுக்குத் துணியும் பெற்று ஊருக்குக் கெடுதல் செய்யாத சாதாரண அறிவுடன் நிம்மதியாக வாழ வேண்டுமானால் முதல் காரியமாக அறத்தையும் கருணையையும் மறந்து, மனம் மரத்துப்போன அறிவாளிகள் அத்தனைபேரையும் கழுவில் ஏற்றிக் கொன்றுவிட வேண்டும். உலகத்துக்கு அத்தனை கெடுதல்களையும் நினைவுபடுத்திச் சொல்லிக் கொடுப்பவர்கள் இவர்கள்."

உள்ளங்கையில் குமிழிட்டு உருண்டு நின்ற ஒரு துளி இரத்தத்தைப் பார்த்துக் கொண்டே இவ்வளவு ஆவேசமான நினைவுகளையும் நினைத்தும் பார்த்துவிட்டான் சீவல்லபன். கையைப் போலவே அவன் முகமும் கோபத்தால் சிவப்பேறி விட்டது. பேசத் துடிக்கும் வாயோடும் பேசுவதற்குப் பயந்த மனத்தோடும் மகாமண்டலேசுவரருக்கு முன்பு நின்று கொண்டிருந்தான் அவன். அம்புகள் பாய்வதுபோல் ஊடுருவிப் பார்க்கும் அவருடைய இணைவிழிகளின் பார்வை அவனைக் கட்டுப்படுத்தி நிறுத்தியிருந்தது.

அமைதியாக அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே நின்ற மகா மண்டலேசுவரர் மெல்ல நகைபுரிந்தார்.

"சீவல்லபா! நீ நினைத்தது சரிதான். வரம்புக்குட்படாத அறிவின் கனம் உள்ளவர்களால் உலகத்தில் மற்றவர்களுக்கு எப்போதுமே வேதனைதான். உன்னைப் போல் உடல் வலிமையையும், உடல் உழைப்பையும் நம்பி வாழும் வீரர்கள் வாழ்க்கை வேகமாக ஓடிக் கொண்டிருக்க வேண்டும் என்று மட்டும் ஆசைப்படுகிறீர்கள். என்னைப் போல் மனத்திண்மையையும், மன உழைப்பையும் நம்பி வாழ்பவர்கள் வாழ்க்கை ஒவ்வொரு கணமும் நின்று நிதானித்துச் சிந்தனையோடு தேங்கிப் போய்க் கொண்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அறிவுக்கும், ஆண்மைக்கும் அவையிரண்டும் தோன்றிய நாளிலிருந்து நடந்து வரும் போராட்டம்தான் இது."

அவருடைய சொற்களைக் கேட்டதும் சீவல்லபமாறன் திடுக்கிட்டான். "ஏ அப்பா! இவருடைய கண்களுக்கு முன்னால் நிற்கிறவன் மனத்தில்கூட ஒன்றும் நினைக்க முடியாது போலிருக்கிறதே. என் எண்ணங்களை எனது முகத்திலிருந்தே எப்படித் தெரிந்து கொண்டார் இவர்?" என்று மலைத்தான் அவன்.

சிரித்துக் கொண்டே மெதுவாக நடந்து அவன் அருகே வந்து சுதந்திரமான உரிமையோடு அவனை முதுகில் தட்டிக் கொடுத்தார் அவர்.

"மெய்க் காவற்படைத் தலைவனே! நீ கவலைப்படாதே. என்னுடைய அறிவின் கனம் உனக்கு எந்தவிதமான கெடுதலையும் எப்போதும்



உண்டுபண்ணாது. அதை எண்ணி நீ அஞ்ச வேண்டியதே இல்லை. 'ஆயிரம் வேல்களாலும், வாள்களாலும் நாம் சாதிக்க முடியாத காரியத்தை, ஒருசொல்லால் ஒரு எழுத்தால் அறிவாளி சாதித்து விடுகிறான்' என்ற பொறுமை படைவீரனுக்கு ஏற்படுமானால் அதன்பின் உலகில் அரசர்கள் இருக்க மாட்டார்கள், அமைச்சர்கள் இருக்கமாட்டார்கள், என்னைப்போல் மகாமண்டலேசுவரர்கள் இருக்க மாட்டார்கள். தளபதி வல்லாள தேவனையும், உன்னையும் போல் ஆள்கட்டுள்ள படைத்தலைவர்கள் மக்களையும், அறிவாளிகளையும் அடக்கி ஒடுக்கிவிட்டுத் தங்களைத் தாங்களே அரசர்களாக்கிக் கொண்டு விடுவார்கள். எதிர்காலத்தில் பல நூறு தலைமுறைகளுக்குப் பின் இப்படிப்பட்ட படைவீரர் ஆட்சி உலகெங்கும் ஏற்பட்டாலும் ஏற்படும். ஆனால் இந்தத் தலைமுறையில் மகாராணி வானவன்மாதேவியும், என் போன்றோரும் உயிரோடு இருக்கிறவரை இந்த நிலை வர வேண்டாம்; வரக் கூடாது. வரவிடவும் மாட்டேன்."—இந்தச் சொற்களைக் கூறும் போது மகாமண்டலேசுவரருடைய முகத்தைப் பார்க்க வேண்டுமே? என்ன ஒளி! என்ன அழுத்தம்! எவ்வளவு உறுதி!

ஏனடா இந்த மனிதரிடம் அகப்பட்டுக் கொண்டோமென்று எண்ணி வெலவெலத்து நடுங்கிப் போனான் மெய்க் காவற்படைத் தலைவன். மகாமண்டலேசுவரருடைய மனத்தில் ஒரு விஷயம் தைத்து அதைப் பற்றி அவர் பேசத் தொடங்கி விட்டாரென்றால் பின்பு அதை எதிர்த்துப் பேசி வாதாடுவதற்கு இன்னொரு மகாமண்டலேசுவரர் பிறந்து வந்தால் தான் உண்டு.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து."

என்று சொல்வன்மையைப் பற்றிக் கூறியது அவருக்கே பொருந்தும். இடையாற்று மங்கலம் நம்பி கூறுகிற ஒரு வார்த்தையை வெற்றி கொள்ளும் மற்றோர் வார்த்தையை மற்றொரு மனிதர் கண்டு பிடித்துப் பேசுவதற்கு இல்லை. நம் சொல்லை வெல்லும் மற்றொரு சொல்லை அவரே கண்டு பிடித்துச் சொன்னால் தான் உண்டு. நினைப்பில், பேச்சில், செயலில் அப்படி ஒரு ஈடு இணையற்ற சாமர்த்தியம் அமைவது மிகவும் அபூர்வம்.

முதல் முதலாகக் கடலைப் பார்க்கும் சிறுபிள்ளையின் பிரமிப்போடு மகாமண்டலேசுவரரின் முகத்தைப் பார்த்துக்கொண்டு பேசாமல் நின்றுகொண்டிருந்தான் அவன்.

"சீவல்லபா! நீ பச்சைக் குழந்தையில்லை. உன்னைக் கூப்பிட்டு உன் கையில் ஒரு முள்ளைக் குத்தி அதை இன்னொரு முள்ளால் எடுத்துக் காட்டி இவ்வளவும் செய்த பின்புதான் உனக்கு உண்மையை விளக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. வாயாற் சொல்லி விளக்கியிருந்தாலே உனக்குப் புரிந்திருக்கலாம். ஆனால் நான் ஏன் அப்படிச் செய்தேன், தெரியுமா? ஒரு கருத்தை மனத்தில் பதிக்க வேண்டுமானால் அந்தக் கருத்தின் நினைவு பசுமையாக இருக்கும்படி எதையாவது செய்துதான் ஆக வேண்டியிருக்கிறது. குழந்தைத்தனமான காரியங்களானாலும் அவற்றைச் செய்துதான் சில மெய்களைப் புரிய வைக்க முடிகிறது. இந்தமாதிரிக் குழந்தைத்தனம் இருப்பதால்தானே சத்தியத்தையும், தருமத்தையும் காப்பாற்றுவதற்காகச் சில அறிவாளிகள் கதையும், கவியும் எழுதிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது? உன் கையில் முள்ளால் குத்தி விட்டதற்காக நீ என்மேல் வருத்தப்பட்டுக் கொள்ளாதே. வா, போகலாம். நான் கூறியபடி நீ தயார் செய்திருக்கும் வீரர்கள் ஐம்பது பேர்களையும் போய்க் காண்போம். அவர்கள் காவற்படை மாளிகையில்தானே தங்கியிருக்கிறார்கள்?" என்று அவனை உடன் அழைத்துக்கொண்டு அரண்மனைக் காவற்படை மாளிகைக்கு விரைந்தார் மகாமண்டலேசுவரர். **(தொடரும்)**


HAMAM
HAMAM
TOILET SOAP
ஹமாம்
A TATA PRODUCT





இந்தியா 1958

சுப்புடு

இந்திரப்பிரஸ்தத்திலே இப்போது நடந்து வரும் இந்தியா 1958 பொருட்காட்சியைப் பரிஷ்காரமாய்ப் பார்த்து விட்டு வரவேண்டுமானால் பத்து நாட்கள் போதாது; பார்த்து அனுபவிக்க வேண்டுமானால் பன்னெடு நாட்கள் போதாது; பத்திரிகைக் கண்ணுடன் பார்த்துப் பத்திரமும் வரைய வேண்டுமானால், ஒரு வருஷத்துக்கு 'கல்கி' பத்திரிகையைக் குத்தகை எடுக்கவேண்டி வரும் என்றால் அது எத்தகைய பிரும்மாண்டமான காட்சி என்பது ஓரளவு புலனாகும். முக்கால் மைல் முகப்புடன் நூற்றி இருபத்தி மூன்று ஏக்கராக்களை ஏப்பம் விட்டு விட்டு நிற்கிறது இந்தக் கண்காட்சி.

தும்பிக்கையான் மீது நம்பிக்கை வைத்து அம்பிகை அருளுடன் ஆரம்பித்து விட்டேன், செங்காலிபுரம் பாணியில். அதாவது மஹாபாரதக் கதை பிரவசனத்தின்போது முதல் நாள் கதைச் சுருக்கத்தைத் துவக்கத்தில் சொல்லி விடுவது போல்.

ஜூலை பதினைந்தாம் தேதி நல்ல சுப முகூர்த்தத்தில் வேலை துவக்கம் செய்து இரண்டே மாதங்களில் இவ்வளவு பிரும்மாண்ட சாதனையைச் சாத்தியமாக்கியவர்களை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். மேலும் துவக்க விழாவுக்கு முன்னர், வருண பகவான் கருணைகூர்ந்து செய்த சோதனையில் பொருட்காட்சி ஸ்தலமே திருப்பாற்கடலாய்க் காட்சி யளித்தது. ஒருவேளை அக்கிராசனர் ஸ்ரீ ரங்கநாதனின் பள்ளி சௌகர்யத்தை முன்னிட்டு அங்ஙனம் பெய்ததோ என்னவோ, அறியேன். பொருட்காட்சி அக்கிராசனர் எஸ். ரங்கநாதன் ஐ. சி. எஸ். பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு மேலே போக வேண்டும். கடும் சோதனையின் போதும், நிர்மாண வேலையின் போதும் அவர் காட்டிய உற்சாகமும், ஊக்கமுமே இந்தப் பெருத்த சாதனைக்கு அஸ்திவாரமாக அமைந்தது.

கயிறு திரிக்கிறார்கள்

வானளாவி நிற்கும் கமான் வாயிற்படியைத் தாண்டிச் சற்றே முன் வந்தால் கேரளத்தாரின் கயிறு திரிக்கும் திறனைக் காண்கிறோம். உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டிய ஒரு முழக் கயிறு முதல் உயரக் கொடி பறக்கவும், உச்சாணியில் ஏற உதவும் நீளக் கயிறு வரை திரிக்கும் கயிறு போர்டின் சாதனை நம் கண்களைக் கவர்கிறது. வாயிற்படியில் வைக்கும் ''நல்வரவு''ப் பாயும், வனப்புடன் விளங்கும் வர்ண விரிப்புகளும், விமரிசையாய்க் காட்சியளிக்கின்றன. உலக மார்க்கெட்டில் செல்வாக்குடன் விளங்கும் இந்தக் கயிற்றுத் தொழில் பிரத்தியேகமாய் ஒரு குடிசைத் தொழிலேயாம். கை இயந்திரங்களில் வர்ணக் கயிறுகள் ஊசலாடி, ஊடுருவி, பாய்களாகவும் விரிப்புகளாகவும் வெளிவருவது ரம்மியமாயிருக்கிறது.

பிரச்னைப் பிரதேசங்கள்

காஷ்மீரம், ராஜஸ்தானம், கிழக்கு வங்காளம் இம் மூன்றும் அடுத்தடுத்து இடம் பெற்றிருப்பது ஒரு வகையில் பொருத்தமாயிருக்கிறது. மூன்றும் பிரச்னைப் பிரதேசங்கள் அல்லவா? எல்லாம் பாகிஸ்தானின் எல்லைத் தொக்

தரவுகளுக்கு ஈடு கொடுத்து வருகின்றன அல்லவா? அப்படியிருந்தும் கலைத் திறனோடு கூடிய கைத்தொழில் திட்டங்களில் ஈடுபாடு கொண்டிருப்பது மிகவும் வியக்கத் தக்க அம்சம். பாருங்கள், இந்தக்குட்டிக் காஷ்மீரை! ஒரு படகு போலவே நிர்மாணித்து விட்டார்கள். தேவதாரு மரத்தினால் கட்டடம். சொக்க வைக்கும் சுகந்தம், மர வேலைப்பாடுகள், சித்திர விசித்திரம், கம்பள நூலில் கைத்திறன், இனிக்கும் தேன், தொனிக்கும் குழல் வாத்தியங்கள், ஸ்ரீ ஹரியைச் சிந்திக்க வைக்கும் மூலிகைகள், போதுமா?

ராஜஸ்தானம் பாத்திர வகைகளுக்குப் பாத்திரமாயமைந்திருக்கிறது. குடிக்கும் தண்ணீர் நிரப்பிவைக்கக் கண்ணைப் பறிக்கும் கூஜா வகைகள், கன்னிகள் புன்னகைபுரியும் கண்ணாடி வளையல்கள். இப்படி இத்தியாதி.

உழக்குக் கொட்டகையில் கிழக்கு வங்காளம் வழக்கிலுள்ள கலைத் திறனை யெல்லாம் கொட்டியிருந்தது. பெரும் பான்மையானவை வர்ணச் சித்திர வகைகள் தாம். கிழக்கு வங்காளத்தை மேற்கொண்டு இழுக்காமல் மேலே செல்லலாம், வாருங்கள்.

விஷப் பரீட்சை

*ப*ம்பாய்க்கும் பாம்புக்கும் பெயர்ப் பொருத்தமே நன்றாயிருக்கின்றது. பம்பாய் என்றதுமே நமக்குப் பெரிய பெரிய இயந்திரங்களும், பிரும்மாண்டமான நூல் ஆலைகளும்தான் நினைவுக்கு வருகின்றன. ஹாப்கின் ஆராய்ச்சிக் கழகத்தில் கருநாகத்தினின்று விஷமெடுத்து மருந்து தயாரிக்கும் விதத்தைப் பார்த்து யாரும் ஆச்சரியப்படாமல் இருக்க இயலாது. பாம்புப் பண்ணை என்னும் போதே உடலிலே ஒரு நடுக்கம், முதுகிலே ஒரு குளிர் உண்டாகிறதல்லவா? ஒரு சிறிய கழியைக் கொண்டு அந்த நாகத்தை ஊர்ந்து போக விடாமல் அனுயாசமாய்த் தூக்கிக் கழுத்தின் இருமருங்கிலும் விரல்களால் அமுக்கி விஷத்தைக் கண்ணாடிக் குப்பியில் கக்கவைப்பது பார்ப்பதற்கே பயமாயிருக்கிறது. மனித சமுதாயத்துக்கு நலம் பயக்கும் இந்த ஸ்தாபனத்தின் மகத்தான சேவை பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியது.


விவசாயமும் மின்சாரமும்

*உ*ச்ச வரம்பு என்று உச்ச ஸ்தாயியில் வரம்பு மீறிக் கதறும் இந்தச் சந்தர்ப்பத்தில் விவசாயத்துக்காக என்ன செய்யப்படுகிறது என்பதை அறிய ஆவல் உண்டாகிறதல்லவா? கேளுங்கள். விவசாயத்துக்கு என்றே ஒரு பெரிய சாலையையே நிர்மாணித்து அதற்குக் 'கிருஷி மார்க்' என்று நாமகரணம் செய்துள்ளார்கள். முகப்பில் தத்ரூபமாய்க் காட்சியளிக்கும் மாபெரும் காளைகள் இரண்டு. உட்சென்றால் அந்நியச் செலாவணி அள்ளித் தேடித் தரும் வேர்க்கடலை, விளக்கெண்ணெய், மிளகு, புகையிலை, பழங்கள் முதலியன பற்றிய புள்ளி விவரங்கள். பக்கத்திலே மின்சாரப் பகுதி. வரப்போகிற திட்டத்திலே ரூ. 200 கோடி அணைக் கட்டுத் திட்டங்களிலும் நீர்ப்பாசன வசதி

---

1. பங்களூரின் தங்க வேலைப்பாடுகள் அமைந்த அழகான மரக் குதிரைகள். 2. ராஜஸ்தானில் தயாராகிய தந்தவேலைப் பொருள்கள். 3. ஆகாசவாணி பகுதியில் ஜனாதிபதி பரிசு பெற்றவர்களின் புகைப்படங்களும், இசைக் கருவிகளும். 4. மேற்கு வங்காளப் பகுதிக்குச் செல்லும் முகப்புத் தோற்றம். 5. மரத்திலே உருவான, அருமையான தங்கவேலைப்பாடுகள் செய்துள்ள ராஜப் படகு. நகைப் பெட்டியாகவும் பயன்படும்.






1. ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர் தொழிற்சாலைகளின் பகுதிகள் மின்சார ஒளியில் பிரகாசிக்கின்றன. 2. ஹிந்துஸ்தான் இரும்புத் தொழிற்சாலைப் பகுதியின் ஒரு அழகான தோற்றம்.

களிலும் செலவழிக்கப் போகிறார்கள் அல்லவா? அதன் புள்ளி விவரங்களெல்லாம் மின்சார உதவியால் துள்ளி விளையாடுகின்றன.

போக்குவரத்துச் சாதனங்கள்

29 சதவிகிதம் ஐந்தாண்டுத் திட்டச் செலவில் போக்குவரத்துச் சாதனங்களுக்குச் செய்யப் போவதாகக் கூறப்படுகிறதல்லவா? தென் கிழக்குக் கோடியிலுள்ள இந்தப் பகுதியைப் பார்க்கும்போது நமது வருங்காலச் சந்ததிகளின் வாழ்க்கையைப் பற்றி நம்பிக்கை ஏற்படுகிறது. பஸ்ஸிலும், ரயிலிலும் நாம் தற்போது அவதிப்படுவதெல்லாம் வருங்காலத்தில் (?) பகற் கனவாகிவிடும் என்பது நிண்ணம். அவ்வளவு கவர்ச்சியாகக் காட்டியிருக்கிறார்கள் இந்தப் பகுதியை.

எஃகு

பொருட்காட்சியிலேயே மிகப் பெரியது ஹிந்துஸ்தான் எஃகுத் தொழிற்பகுதி. திட்டத்தில் பெரும் பகுதியை ஜீரணிக்கப் போகும் எஃகு தொழிற்சாலைகள் பற்றிய விவரங்கள் சாங்கோபாங்கமாய் விளக்கப்பட்டுள்ளன. பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் போன்ற பெயர்கள் நேரு பாஷையில் இனி க்ஷேத்திரப் பிரபாவம் அடையும். "ரூர்கேலா க்ஷேத்ரே, பாரத வர்ஷே, பரதக் கண்டே" என்று வைதீக மந்திரங்களும் மாறலாம். யார் கண்டார்கள்!

ரசாயனம்

உரம் தயாரிக்கும் சிந்திரி ரசாயனச் சாலை, தனது சாதனைகளை எடுத்துக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளது. மேலும் மருத்துவ ஆராய்ச்சிக்கு வேண்டிய உபகரணங்கள் தயாரிப்பில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் பறையறிவிக்கும் விவரங்கள் கண்டுள்ளன.

விஞ்ஞானம்

அஞ்ஞான சிகாமணியாகிய அடியேன் விஞ்ஞானத்தைப் பற்றி என்ன எழுத? விஞ்ஞான பாஷையில் பேசி என்னையும் உங்களையும் துன்புறுத்தாமல் சாதனைகளைக் கூற முயற்சி செய்கிறேன். பத்தொன்பது ஆராய்ச்சி நிலையங்கள் பாரதம் எங்கணும் பரவியிருக்கின்றன அல்லவா? அல்லும் பகலும் அரும்பாடுபட்டு அவை கண்ட பலனை நாமும் கற்றுத் தெரிந்து கொள்ள முயற்சி செய்வோம். ரூர்க்கி கலாசாலையில் ஆகாயப் புகைப் படங்கள் எடுப்பதில் விசேஷப் பயிற்சியளிக்கிறார்களாம். இது காறும் வெளிநாடுகளை நம்பி வந்த பார்வைக் கண்ணாடிகள் இனி நம் தேசத்திலேயே உற்பத்தியாகும். கல்கத்தாவிலுள்ள கண்ணாடி ஆராய்ச்சி நிலையத்தின் சாதனை இது. ருசியாயில்லையா? எனக்கு மாத்திரம் என்ன வாழ்ந்தது? சாப்பாட்டு விஷயத்துக்கு வாருங்கள்.

உணவு விஷயத்திலேயே பெரிய புரட்சியை உண்டுபண்ணியிருக்கிறார்கள் மைசூரிலுள்ள உணவு ஆராய்ச்சி ஸ்தாபனத்தார். Multipurpose Food (பலபயன் பலகாரம்!) என்று காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறது. புஷ்டியற்ற குழந்தை ஒன்றுக்கு ஆறு வாரத்தில் அபிவிருத்தி ஏற்பட்டுவருகிறதாம். நேருஜி தம்முடைய நிவாரண நிதியிலிருந்து ஒரு லக்ஷம் ரூபாய் இந்த விசேஷ உணவுப் பொடிக்கு ஒதுக்கியிருக்கிறார். நமது சென்னை சர்க்கார் சுமார் இருபத்தேழு லக்ஷம் ரூபாயில் ஒரு உற்பத்தி ஆலை இதற்கென்றே துவக்க உத்தேசமிட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்து இந்தச் சாதனையின் முக்கியத்துவம் ஓரளவு புலனாகும்.

எனக்கே புரியாத பாக்கி அம்சங்களை உங்களுக்குப் புரிய வைக்கும் முயற்சியில் ஈடுபட உத்தேசமில்லை. வாசகர்கள் என்னை நன்றியுடன் நோக்குவதை நான் உணர்கிறேன். ஆகவே இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்!

சென்னை

நியூகுளோப், பிராட்வே, மகாலக்ஷ்மி, திருமகள்

மற்றும் தென்னாடெங்கும்





முன்னுரை

உலகம் ஒரு கதை. அதைக் கடவுள் சொல்லியிருக்கிறார். கதை ஓர் உலகம். அதை மனிதன் படைத்திருக்கிறான். உலகத்தின் கதை, கதையின் உலகம் இவ்விரண்டுமே மனோகரமானவை, மதுரமானவை. மனிதனின் மனம் இருபுறமும் ஓடுகிறது. இரண்டுடனும் கூடி வாழ்ந்து மகிழ்வடைகிறது. இரண்டும் பிரியும் பொழுது அதன் கண்களில் துயரக் கண்ணீரும் துன்பக் கண்ணீரும் சேர்ந்து நிறைவிடுகின்றன.

உலகம் எப்பொழுது உண்டாயிற்று? எப்பொழுது இதற்கு முடிவு உண்டாகும்? இதைப் பற்றிய விவரம் யாருக்கும் தெரியாது. அதே போலக் கதை எப்பொழுது பிறந்தது, கதைக்கு எப்பொழுது முடிவு காலம் வரும் என்பதும் யாருக்கும் தெரியாது. ஆனால் நாம் ஒரே ஒரு விஷயம் மட்டும் தீர்மானமாகச் சொல்ல முடியும். அதாவது உலகம் ஆரம்பித்த காலத்திலிருந்து கதை இருக்கிறது. உலகம் உள்ள அளவும் கதையும் இருக்கும். இரண்டும் இனிமையானவை; இரண்டும் சிரஞ்சீவியானவை; இரண்டும் மூப்பு அடையாதவை. இதில் ஐயம் திரிபுக்கே இடமில்லை.

உலகம் கடவுளின் கதை. ஆனால் அதன் கதாபாத்திரங்களில் அசுரர்களும் இருக்கிறார்கள். கதை மனிதனின் உலகம். ஆனால் அதன் கதாபாத்திரங்களில் தேவர்களும் இடம் பெற்றிருக்கின்றனர். கடவுள் தம் கதாபாத்திரங்களுக்கு நன்மை தீமை இரண்டு சுதந்திரங்களும் கொடுக்கிறார். அதைப் பார்த்துத்தான் கதை எழுத்தாள

வானத்தாமரை

சுதர்சன்

னின் உலகம் உருவாகிறது. கதை எழுத்தாளன் தன் உலகத்தில் வாழும் உயிர்க் குலத்துக்குச் சொல்-செயல் ஆகிய இரண்டு சுதந்திரங்களும் பூரணமாக அளிக்கிறான். அவற்றைப் பார்த்துப் பகவானின் உலகம் படிப்பினை பெறுகிறது; தனக்கென்று இம்மை-மறுமையின் வழியை வகுத்துக் கொள்ளுகிறது.

கடவுள் தம் உலகத்தைச் சிருஷ்டிக்கும்பொழுது, அதன் ஜீவராசிகள் ஆனந்தமும் அமைதியும், ஆசையும் அன்பும், பிரேமையும் பரிசுத்தமும் நிறைந்த ராஜபாட்டையில் செல்ல வேண்டும். நான்கு நாட்களில் நசித்துப் போகக் கூடியதான இந்த இகவாழ்வில் தங்கள் மனத்தையும் மனத்தில் உதிக்கும் ஆசாபாசங்களையும் அலைய விட்டுக் கெட்டுப் போகாமல் இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனேயேதான் சிருஷ்டிக்கிறார். ஆனால் அநேகர் ஆண்டவனின் கட்டளையை மறந்து விடுகிறார்கள்; தங்களுக்கென்று குருட்டுக் கோணலான வழியை வகுத்துக் கொண்டு திண்டாடுகிறார்கள். ஆனால் ஆண்டவனின் இச்சைதான் ஈடேறுகிறது. உலகத்திலே புண்ணியத்தின் ஒளி குறைவதில்லை.

கதை எழுத்தாளனும் தன் கதையைச் சிருஷ்டிக்க உட்காரும்பொழுது அதே போலத்தான் நினைக்கிறான். தன் கதையில் இருளும், இருளில் இடிபட்டு இன்னல் உறுவதும் கூடாது என்ற நல்ல நோக்கத்துடன்தான் எழுதுகிறான். ஆனால் அவனுடைய சில கதாபாத்திரங்கள் அவன் எண்ணத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கி விடுகின்றன. அத்துடன், ஒளியில் உண்டாகி ஒரே காடாந்தகாரத்தில் மூழ்கி மறைந்து போகும் மார்க்கத்தைத் தங்களுக்கென்று தேர்ந்தெடுத்துக் கொண்டு கெட்டுத் திரிகிறார்கள். ஆயினும் இந்த எதிர்ப்பிலும் கிளர்ச்சியிலும்கூட அவனுடைய கதை உலகம் நசித்துக் குட்டிச்சுவராகப் போவதில்லை. அவன் கதையிலும் எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் மங்களகரமான ஒளி பிரகாசிக்கத்தான் செய்கிறது.

உலகத்திலே கெட்ட மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் உலகத்தின் உத்தேசம் கெட்டதல்ல. அதேபோலக் கதையில் உள்ள ஒரு கதாநாயகன் பாவச் சுமையை விலைக்கு வாங்கிக் கொள்ளக் கூடியவனாகவும், தீய நோக்கங்களையே அள்ளிப் பருகும் ஆசை கொண்டவனாகவும் இருக்கலாம். ஆனால் அதற்காகக் கதையின் நோக்கம் பாவத்தை மனோகரமானதாகவோ, மதுரமானதாகவோ ஆக்குவதற்காக ஏற்பட்டதல்ல.

அநேகம் பேர்கள் அரைகுறை அறிவு படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் உலகத்தில் தீய குணங்கள் சிலவற்றைக் கண்டு உலகத்தையே வெறுக்கத் தொடங்கிவிடுகிறார்கள். காடுகளிலோ, குகைகளிலோ போய் உட்கார்ந்து கொண்டு உலகத்தை விட்டே ஓடி வந்து விட்டதாக எண்ணி மகிழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். அவர்களுடைய உடல், அவர்களுடைய உள்ளம், அவர்களுடைய ஆத்மா, அவர்களுடைய குண விசேஷங்கள் அனைத்தும் இந்த உலகத்தின் ஒரு அம்சம்தானே; பங்குதானே? தங்களுடைய இந்த உடலையோ, உள்ளத்தையோ, ஆத்மாவையோ, குண விசேஷங்களையோ அவர்களால் துறந்து விட முடியுமா? 'இன்பம், கேளிக்கை, ஆனந்தம் என்றால் என்ன?' என்பதையே சிறிதும் அறியாத சுபாவம் படைத்த பலர், காவியம், கலை இவற்றைக் கற்பனைக் கண் கொண்டு காணத் தெரியாத மனம்படைத்த பலர், கதையில் காணும் கும்மிருட்டைக் கண்டு கதிகலங்கிப் போய்ப் புத்தகங்களை மூடி வைத்து விட்டுத் தம்முடைய வாழ்விலிருந்து - ஏன்? உலகிலிருந்தே கூடக் கதையை அப்புறப்படுத்தி விட்டதாக எண்ணி இறுமாந்து போகிறார்கள். ஆனால் இது அவர்களுடைய பெருந் தவறு ஆகும். ஏனெனில் அவர்கள் தங்கள் வாழ்க்கையும் வாழ்க்கையில் நடக்கும் அவ்வொரு சிறு நிகழ்ச்சியும் ஒவ்




வொரு கதை ஆகும் என்பதை மறந்துவிடுகிறார்கள். மனிதன் உயிர் வாழும் வரை, மூக்கு வழியே மூச்சுப் போய் வந்துகொண்டிருக்கும்வரை, அவனால் தன் உயிரைப் பிரிந்து எப்படி இருக்க முடியும்? மனிதன் தன் கடந்த கால வாழ்க்கையை நினைத்துப் பார்க்கும் வரை, வருங்கால வாழ்க்கையைப் பற்றித் திட்டம் வகுக்கும் வரை, கதையுலகத்திலிருந்து விடுபட முடியாது; வெளியேற முடியாது. முயன்றாலும் அது முடியாத காரியம்; இயலாத, இயலவே இயலாத காரியம்.

மனிதன் குழந்தையாக இருக்கும்பொழுது பெரியவர்களிடத்தில் கதை கேட்கிறான். கிழவனாகும் பொழுது குழந்தைகளுக்குக் கதை சொல்லுகிறான். காலதேவனின் கையில் சென்ற பிறகு அவனே கதையாகி விடுகிறான்.

ஆனால் அது மட்டும் அல்ல; இந்த உலகமும் கதை. கதை எழுத்தாளனும் கதை. கடவுளுமேகூடக் கதை.

“என்ன? கடவுளும்கூடக்கதையா? கடவுள்தான் கதை எழுத்தாளனைப் படைத்திருக்கிறார். கடவுள் இல்லாவிட்டால் கதை எழுத்தாளனும் இருக்க முடியாது. தெரியும் அல்லவா?” என்கிறது தர்மம்.

இதைக் கேட்டுக் கதை எழுத்தாளன் கர்வத்துடன் கழுத்தை உயர்த்தி, இலேசாக இளநகை புரிந்து, குரலைக் கனைத்துக் கொண்டு, “கடவுள் என்னைப் படைத்தான் என்று நீ சொல்லுகிறாய். ஆனால் நான் சொல்லுகிறேன், கடவுளை நான் படைத்தேன் என்று! நான் இல்லாவிட்டால் கடவுள் எங்கிருந்து வருவார்? நீயே சொல்லு!” என்கிறான். தவறில்லையே?




1. அறிவு ஒளி

காண்போர் கண்களுக்குக் குளுமையும் மனத்துக்கு மகிழ்ச்சியும் அளிக்கவல்லது காங்கடிப் பிரதேசம். அதன் பள்ளத்தாக்குகளிலே வைஜநாத் என்பது ஒரு சின்னஞ்சிறு கிராமம். வைஜநாத் என்னும் பெயர் பூண்ட அந்தக் கிராமம் ஹிந்துக்களாகப் பிறந்தோர்களுக்குப் பிரசித்தமான ஒரு புண்ணிய க்ஷேத்திரமுங்கூட. க்ஷேத்திராடனம் செய்ய வரும் ஏராளமான மக்கள் பகவானைத் தரிசிக்க இங்கேயும் வந்து போவது உண்டு.

அன்று ஒருநாள் காலையில் அவ்வூர் வாசிகள், கடைத்தெருவில் ஊருக்குப்புதிய ஒரு கிழவர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டனர். அப் பெரியவர் பெயர் சதாசுகர்.

‘சதாசுகர் என்பவர் யார்? எங்கிருந்து வந்தார்?’ என்பதெல்லாம் அந்த ஊர் வாசிகளில் யாருக்குமே தெரியாது. ஆனால் அவர் வந்த அன்றைக்கே, அவர் எப்படிப்பட்டவர் என்பது மட்டும் அவர்களுக்குத் தெரிந்து விட்டது. அவரது உடல் அமைப்பு பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது. கம்பீரமே உருவான, ஆஜானுபாகுவான அவருடைய தேகம் பார்ப்போர்களின் உள்ளத்திலே ஒரு பீதியை உண்டு பண்ணியது. ஆனால் அவருடைய உள்ள அமைப்பு உடல் அமைப்புக்கு நேர் எதிரிடையாக அமைந்திருந்தது. அவருடைய உள்ளம் என்றுமே வற்றாத இனிமை ததும்பும் ஊற்



ருக இருந்தது; மென்மையே வடிவாக அமைந்திருந்தது. சரள சுபாவம் படைத்த அவரைக் கண்டு நாலு வார்த்தை பேசியவர்களுக்கு, அவர் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்க வேண்டும், அவர் இன்மொழிகளைக் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும், அவரை விட்டு அரைக் கணங்கூடப் பிரிந்திருக்கக் கூடாது என்று தான் எண்ணத் தோன்றும்.

'தேங்காயின் மேல் ஓடு — அதாவது கொட்டாங்கச்சி கன அழுத்தமாகவும் கடினமாகவும் தானிருக்கிறது. ஆனால் அதற்குள்ளிருக்கும் இளநீருக்குத்தான் எவ்வளவு இனிமை! பருகப்பருக இன்பம் பயப்பதாக அல்லவா இருக்கிறது! கடினமே உருவான கொட்டாங்கச்சியை மேற்போர்வையாகக் கொண்டுள்ள


ஜனவரி 14 முதல்
கெயிட்டி . காமதேனு
பாரத்..
மற்றும் தென்னாடெங்கும்
MAV PICTURES SALEM
எம்.ஏ.வி. பிக்சர்ஸ்
மாதவி
கிருஷ்ண ராவ்
வெங்கட ராமானுஜம்
கா.மு.ஷெரீப்
ஸ்டூடியோ: ரத்னா. சேலம்.
BHARAT STUDIO

தேங்காய்க்குள்ளே இருக்கும் இளநீரின் இனிப்பு, சலசலவென்று சப்தித்துக் கொண்டு ஓடும் ஓடையின் தெளிய நீரில் எங்கு இருக்கிறது? வெளியே கடினமும் உள்ளே மென்மையும் கொண்ட தேங்காயின் இயல்பை ஒத்திருந்தார் சதாசுகர் என்னும் அப்பெரியவர்.

வைஜநாத்துக்கு அவர் வந்த பிறகு அந்த ஊருக்கு ஒரு புதிய சகாப்தமே ஆரம்பமாகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். சதாசுகர் நாதியற்ற அநாதைகளுக்குத் தந்தையாக விளங்கினார்; நோயாளிகளின் நோய் கொடிகளை நொடியில் தீர்த்துவைக்கும் வைத்தியநாதனாக விளங்கினார்; ஏழைகளின் பங்காளனாக விளங்கினார்; எளியோர்களின் கூட்டாளியாக விளங்கினார்; தேயிலைத் தோட்டங்களில் தம் உடலை வருத்தி வேலைசெய்யும் ஆதரவற்ற அபலைகளுக்கு ஆதரவாளராக விளங்கினார். அவர் அவ்வூரில் காலடி எடுத்துவைத்த பிறகு அந்த அநாதை அபலைகளைக் கெட்ட கண் கொண்டு பார்க்க யாருக்குமே துணிவு உண்டாகவில்லை. அப்படியே யாராவது தப்பித் தவறிக் கெட்ட நோக்கத்துடன் அவர்களைப் பார்த்தால், சதாசுகர் சும்மா இருப்பாரா? விழியைத் தோண்டி வெளியேஎடுத்து வைத்து விடமாட்டாரா?

முன்பெல்லாம் அவ்வூருக்கு வரும் யாத்திரீகர்களுக்குத் தங்குவதற்கு வசதியான இடம் கிடையாது. இப்பொழுது, சதாசுகர் அந்த ஊருக்கு வந்தபிறகு, தங்கும் இடத்துக்கு ஒரு பஞ்சம் கிடையாது. யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் இரவு–பகல் என்று பாராமல் அவர் குடிசையில் வந்து தங்கலாம். கிராமத்துக் கோலாகலங்களிலிருந்து விலகிச் சற்றுத் தொலைவில், சந்தடியற்ற சூழ்நிலையில் அமைதியே வடிவாக அமைந்திருந்தது அவருடைய குடிசை. இரவு–பகல் எந்நேரமும், விரகதாபத்தில் வாடி உழலும் இளங் காதலர்களின் கண்களைப் போலக் கதவு மூடாமல் திறந்தே இருக்கும். 'இவ்வழியே வாரானோ? என் ஐயன் இவ்வழியே வாரானோ?' என்று வைத்த கண் வாங்காமல் வழி மேல் விழிவைத்த வண்ணம் இருப்பதுதானே பிரிந்த காதலர்களின் இயல்பு? கணமும் தாளிடப்படாத சதாசுகரின் குடிசை காண்போர் கண் முன்னே அந்தக் காட்சியைத் தான் படம் பிடித்துக் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டிருந்தது.

அந்த இடம் மலைநாட்டு மக்களின் இயல்புக்கேற்ற முறையில் படாடோபம் ஏதும் இன்றி அடக்கமும் ஒடுக்கமும் நிறைந்து காட்சி அளித்தது. ஆனால் அவ்வூருக்கு வந்து போகும் யாத்திரீகர்களுக்குக் காட்டப்பட்டு வந்த மட்டு மரியாதைகளுக்கு ஓர் கங்கு கரை கிடையாது. அதிகம் சொல்லுவானேன்? மலைநாட்டு மக்களுக்குத் தெரிந்த மட்டு–மரியாதை மற்றவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, சந்தேகந்தான்! அவர்களுடைய அந்த ஊழியத்தின் ஆழத்தில் எவ்விதமான தன்னலத்துக்கும் இடங் கிடையாது. புகழுக்கும் பெயருக்கும் அவர்கள் ஏங்கிச் சாகவில்லை. உலகத்து ஆசைக் கனவுகள் அவர்களை வாட்டுவதில்லை. பட்டப்பகலில் பலர் பார்த்திருக்கப் பெருமையை வேண்டிப் பட்டணத்து மக்கள் அளிக்கும் நன்கொடையோ சந்தாவோ அல்ல, அவர்கள் செய்யும் அந்தச் சேவை. ஒரு கையால் கொடுப்பது இன்னொரு கைக்குத் தெரியாது என்பார்களே, அப்படி இரவுக்கிரவே எவருக்கும் தெரியாமல் எளிய முறையில் செய்யப்படும் உதவி அது. பலரும் பார்த்துப் புகழ வேண்டும் என்ற நோக்கத்துடன், ஊர் அறிய உலகம் அறியச் செய்யப்படும் தானமோ, தருமமோ அல்ல அது. பிறர் பாராமல் இருக்கும் சமயமாகப் பார்த்து ஆற்று வெள்ளத்திலே அள்ளிக் கொட்டும் நன்மை அது. ஆற்று வெள்ளத்தின் ஆழத்திலோ அடித்தளத்திலோ அமிழ்ந்தபின் அந்தப் பொருளின் பெருமை என்ன தெரியும்? அவர்களுடைய உபசாரம் அத்தகையது. அது பலர் பார்க்க விளக்கில் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டு, விளக்கையும் அணைத்து விடும் விட்டில்பூச்சியின் காதலோ, தியாகமோ அல்ல, கவிகள் பார்த்துக் கவிதைகள் புனைவதற்கு! அது விதைகள் செய்யும் தியாகத்தைப் போன்றது. பூமிக்கடியில் இருளில் மக்கி மடிந்து மக்களுக்கு உதவி புரியும் விதையின் தியாகத்தை யாராவது நேரில்கண்டதுண்டா? அல்லது எந்தக் கவிஞனாவது அதன்மீது கவிதை கவிதைகள் தான் புனைந்ததுண்டா?

அந்த மகாத்மா பணக்காரர் அல்ல. அவருக்கு மாதா மாதம் எங்கிருந்தோ இருநூறு ரூபாய் மணி

யார்டர் மட்டும் வந்து கொண்டிருந்தது. ஆனால் அவருக்கு மனசு தங்கமான மனசு; தாராளமான மனசு. அவர் குடிசைக்கு வந்து கைநீட்டிய எவனும் வெறுங்கையுடன் திரும்பிப் போனதில்லை. உதவியென்று வந்த ஏழை–பாழை, கூலி–குடியானவன், அநாதை – அபலை, வழிப்போக்கன் யாராயிருந்தாலும் சரி, அவர் நிறைந்த மனத்துடன் அவர்களுக்குத் தம்மால் இயன்ற அளவு உதவிபுரிவார். 'இவர் மனிதர் அல்ல; மனித உருவில் வந்த தெய்வம்' என்று சொல்லி மக்கள் மனமார வாயாரப் புகழ்வார்கள். 'மண்ணைப் பொன்னாக்கும் மாய வித்தை அவருக்குத் தெரியும். கல்லைக் கனகமாக்கும் யோகசித்தி அவருக்குத் தெரியும்' என்றெல்லாம் பேசிக் கொள்ளுவார்கள். கோயிலில் குடிகொண்டுள்ள தெய்வங்கள் பழையனவாகிவிட்டன. ஆகவே, பகவானாகப் பார்த்து நமக்குப் புதுத் தெய்வம் ஒன்றை அனுப்பி அருளியிருக்கிறார். அந்தத் தெய்வங்களைப் போலவே, இந்தத் தெய்வத்தின் உருவமும் கறுப்பாக இருக்கிறது; கல்லைப்போல் கடினமாக இருக்கிறது. ஆனால் மனக் கோயிலில் பகவானின் அறிவு ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் கோயிலில் குடிகொண்டிருக்கும் கல்லுச்சாமி, நாம் பெருக்கும் கண்ணீரைப் பார்த்துக் கல்லாக வாயடைத்துப் போய் உட்கார்ந்திருக்கிறது. கலியுகத்தின் காலக் கோளாறுதானோ என்னவோ, அவற்றின் உள்ளத்திலிருந்து இரக்கம் என்னும் திரவ பதார்த்தம் கல்லினும் கல்லாக, பனிக்கட்டி போன்று உறைந்து விட்டது.

ஆனால் இதோ நம் எதிரே நடமாடும் தெய்வமாக விளங்கும் இவருடைய உள்ளத்திலே அன்பும் கருணையும் கரைகாணாக் கடலாகத் திகழ்கின்றன. பிறர் கண்களில் நீரைக் கண்டு விட்டால், இந்தத் தெய்வத்தின் கண்களிலும் நீருண்ட மேகம் போலக் கண்ணீர் கோத்து நிற்கிறது. பிறர் அழுவதைக் கண்டால் இவரும் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விடுகிறார். பிறர் நோயுற்றிருப்பதைக் கண்டால், தாமும் நோயுற்றவராகி விடுகிறார். அவையெல்லாம் ஆகாயத்துத் தெய்வங்கள்; எட்டாக் கனிகள்; வானத் தாமரைகள். ஆனால் இவரோ இகலோகத்தில் நடமாடும் தெய்வம், தெய்வத்தைக் காட்டிலும் ஒரு படி மேல். அந்தத் தெய்வங்கள் நம் அருகில், நம் எதிரே இருந்தும், நம்மிடமிருந்து வெகு தொலைவில், நம் நிலை தெரியாமல் வாழ்கின்றன. நம்மைக் கவனிக்க அவற்றுக்குப் பொழுதே இல்லை. ஆனால் இவரோ நம் அருகிலேயே, நம்முடனேயே நம் சுக–துக்கத்தைப் பங்கு போட்டுக் கொண்டு வாழ்கிறார். இவர் மேலானவரா, அந்த ஆகாச குசுமம் போன்ற தெய்வங்கள், வானத் தாமரையெனத் திகழும் தெய்வங்கள் மேலானவையா? — இவ்வாறாக மலைநாட்டு மக்களிடையே மகாத்மாவான சதாசுகர் பற்றிப் பேச்சு வளர்ந்தது.

ஒரு நாள் மாலை வைஜநாத்தின் சரித்திரப் பிரசித்திபெற்ற கோயிலின் குருக்கள் தம் பூஜையை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது கோயில் வாசலில் ஒரு மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு பெண்மணிகள் இறங்கினர்.

அந்திமங்கும் அந்த வேளையிலே ஆண் துணையின்றி இரண்டு பெண்மணிகள் மட்டும் இறங்குவதைக் கண்ட குருக்கள் சற்றுத் திகைத்து நின்றார். வீட்டுக்குப் புறப்பட்டவர் அவர்களுக்கு ஆண்டவனைத் தரிசனம் செய்து வைத்து விட்டுப் புறப்படலாம் என்று எண்ணி, அவர்கள் அருகில் வந்ததும், "அம்மா! எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று ஆதரவோடு விசாரித்தார்.

அவ்விரு பெண்மணிகளில் பெரியவளாகத் தோன்றியவள் சிறியவளுக்குத் தாயாராக இருக்க வேண்டும் என்று தோன்றியது. அவள் தன் மூட்டை முடிச்சுகளைத் தரையில் வைத்த வண்ணம், "சுவாமி! நாங்களா? வெகு தூரத்திலிருந்து வருகிறோம்!" என்று சொன்னாள்.

"அப்படியா? உங்களுடன் யாரும் ஆண்பிள்ளை துணைக்கு வரவில்லை போலிருக்கிறதே?" என்றார் குருக்கள்.

"என் கணவரைக் கடவுள் தம் அருகே அழைத்துக் கொண்டு விட்டார். ஆகவே, நாங்கள் தனியே தான் வந்தோம்!" என்று பதில் அளித்தாள் அந்தப் பெண்மணி.

இதைச் சொல்லி முடித்ததும் அவள் துயரமும் வருத்தமும் நிறைந்த நீண்ட பெருமூச்சு ஒன்று விட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். அவள் கண்களின் இரு ஓரத்திலும் இரு பொட்டு நீர் முத்துப்போல் கோத்து நின்றது. (தொடரும்)

வெளிவருகிறது



லட்சக்கணக்கான 'கல்கி' வாசகர்களை
வாரந்தோறும் மகிழ்வித்து வந்த இலக்கியச் செல்வம்

அகிலனின்

பாவை விளக்கு

சிறந்த நாவல்

சுமார் 700 பக்கங்கள் - ரெக்சைன் பைண்டு

ஓவியர் மணியத்தின் மூவர்ண மேலட்டைப் படத்துடன்

பிப்ரவரி முதல் வாரத்தில் வெளிவருகிறது

விலை ரூ. 10.00

பதிவுத் தபால் மூலம் பெற விரும்புவோர், ரூ. 11.00 முன் பணம் அனுப்பவும்

இது ஒரு பொற்கொடி வெளியீடு

விற்பனை உரிமை

பழனி பிரசுரம்

3, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை - 5

அகிலனின் பிற நூல்களும் எமது வெளியீடுகளே
விரிவான விலைப்பட்டியலுக்கு எழுதவும்

1. உணவைக் கொடுக்காதே! உதவி செய்யாதே!

திருச்சி.

மார்சிங்பேட்டைத் தெரு.

அந்தத் தெரு மூலையில் உலகநாதன் அழுது கொண்டிருந்தான். அவன் அழுகையைக் கவனித்தவர்கள் ஒரு சிலர். கவனியாமல் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போனவர்கள் பலர். ஒரு மணி நேரமாகப் புளிய மரத்து நிழலில் அவன் அழுது கொண்டிருந்தான். யாரும், "ஏண்டா அழுகிறாய்?" என்று கேட்கவில்லை. அழுது அழுது கன்னத்தில் கண்ணீர் கோடிட்டிருந்தது. அவ் வழியாக வந்த பிச்சைக்காரன் ஒருவன், "ஏஞ் சாமி அழுகிறாய்?" என்று கேட்டான். அவனோ கண் தெரியாமல், கைக் கம்பினால் தட்டிக்கொண்டு போனவன். அழுகிற குரலைக் கேட்டு அவ்வாறு இரக்கம் காட்டினான்.

உலகநாதன் நிமிர்ந்து பார்த்தான். உலகத்தில் கண் தெரிந்தவர்கள் ஒருவர் கூட அவனைக் கவனிக்காத போது, கண் தெரியாத ஒருவன் மட்டுமே கவனித்தான். எழுந்து சரசர வென்று அந்தக் குருடன் பின்னால் போகலாமா என்ற எண்ணம் வந்தது.

அதற்குள்ளாக அந்தக் குருடன், "சாமி! என்னோடு வருகிறாயா?" என்று கேட்டான். குருடனுக்கு எவ்வளவு இரக்கம்? எவ்வளவு பாசம்? குருடனுக்கு ஆள் ஒருவன் தேவை. அவனுடைய கம்பைப் பிடித்துக் கொண்டு வழி காட்ட வேண்டும் போலிருக்கிறது. அதற்காகக் கேட்டானோ என்னமோ?

"நான் வரவில்லை!"

உலகநாதனின் குரல் அழுது அழுது வறண்டு போயிருந்தது. அதனால் குருடன் நிச்சயமாக நம்பி விட்டான். அழுத பையன் கட்டாயம் தன்னுடன் வருவான், தனக்கு உதவி செய்வான் என்று எண்ணினான்.

"உன் பெயர் என்ன, கண்ணு?"

'கண்ணுமே!' அவ்வளவு அன்பாக, அவனைக் கூப்பிட்டவர்கள் அவனுடைய அம்மா; அவள் காலமாகி விட்டாள். போன வருடம் வந்த சித்தப்பாவும் அருமையாகக் கூப்பிட்டார். இப்போது பிச்சைக்காரன் ஒருவன் கூப்பிடுகிறான். உலகநாதனின் மனத்தில் திகைப்பு ஏற்பட்டது. ஆனாலும் கூப்பிடுகிறவன் பிச்சைக்காரன். அந்தப் பயம் இருந்தது.

"என் பெயர் என்னவாக இருந்தால் என்ன? நீ போ."

"உனக்கு வீடு எது? கொண்டு போய் விடுகிறேன்."


'தனக்கே வழி தெரியாமல் திண்டாடுகிறான்; இவனா நம்மை வீட்டில் கொண்டு போய்விட முடியும்?' இவ்வாறு உலகநாதன் எண்ணினான். சிரிப்பு வந்தது. சிரித்தும் விட்டான்.

"என்ன கண்ணு சிரிக்கிறே?"

"என் வீட்டுக்கு நீ வந்தால் உனக்கும் எங்கள் சித்தி உதை கொடுப்பாள்; கரண்டியைக் காயப் போட்டுக் கன்னத்தில் சூடு கொடுப்பாள்."

"பாவம்! நீ என்னோடு வந்தால் உனக்குத் தினம் தினம் காசு தருகிறேன். உணவு வாங்கித் தருகிறேன்."

உலகநாதனுக்குக் குமட்டல் வந்தது. பிச்சைக்காரன் உண்பது என்னவென்று பார்த்திருக்கிறான். எல்லா வீட்டிலும் அழுகல், ஊசல், எச்சில் போடுவார்கள். எச்சில் சோறு, ஊசிப் போன பண்டங்கள், பிறர் வேண்டாம் என்று வீட்டில் கழித்த பட்சணம், காய்ந்து போன நேற்றுச் சுட்ட தோசை இப்படிப்பட்ட உணவுப் பொருள்கள்





உல்கநாதன்
சகி

உண்பவன் பிச்சைக்காரன். அவனோடு போகிறதாமே. சை! பிச்சையெடுப்பது கேவலம்; மகா கேவலம்.

"போ ஐயா, வந்தவழியிலே" என்று கத்தினான். பிச்சைக்காரன் மீது இருந்த இரக்கம் போய் விட்டது. 'அவன் சோறு போடுகிறேன்' என்று சொல்லாமல் இருந்தால், சும்மா இருந்திருப்பானோ, என்னவோ?

"நானும் உன்னைப்போல் அநாதையாக இருந்தவன். நீ எண்ணுகிறபடி நான் ஏழையில்லை. என்னிடம் பணம் இருக்கிறது. உனக்கு வேண்டிய உதவி செய்கிறேன், வா. என்னோடு வந்தால் உனக்கும் நன்மை."

உலகநாதன் யோசித்தான். வீட்டிலே சித்தி அடிக்கிறாள். உணவும் போட மறுக்கிறாள். அடிக்கடி அடியும் உதையும் தவறாது தருகிறாள். பிச்சைக்காரனுடன் போனால் சாப்பாடு கிடைக்கும். சில பிச்சைக்காரர்கள் வட்டிக்குக் கொடுத்து வாங்குவதைப் பார்த்திருக்கிறான். அது போல் இந்தக் குருட்டுப் பிச்சைக்காரனும் பணம் வைத்திருக்கிறான் என்று எண்ணிக் கொண்டிருந்த போது, தொலைவில் சீனு வந்தான்.

பிச்சைக்காரன் கையிலுள்ள மூங்கிலைத் தட்டிக் கொண்டே, அவன் அருகில் நகர்ந்து வந்தான் கையில் தகரக் குவளை: அது நசுங்கியிருந்தது. மேலே ஒரு கிழிசல் கோட்டு, ஆயிரம் தையல் இருக்கும். தாடியும் மீசையுமாக இருந்தான். அருகே வரவர உடையிலிருந்தும், குளிக்காத உடம்பிலிருந்தும் துர்நாற்றம் குப்பென்று வந்தது. அந்த நாற்றம் உலகநாதனுக்குக் குமட்டியது. சற்று முன்னால் அவனுடன் போக எண்ணியவன் இப்போது திடுக்கிட்டான்.

பிச்சைக்காரன் கிட்டே வந்ததும், உலகநாதன் நகர்ந்து உட்கார்ந்தான். நகர்ந்து உட்கார்ந்தது அறியாத பிச்சைக்காரன் மீண்டும் குரல் கொடுத்தான். உலகநாதன் பேசவில்லை.

இதற்குள் சீனுப் பயல் ஓடியே வந்து விட்டான். அவன் வயிறு மட்டும் உப்பிக் கொண்டிருந்தது அதனைக் கவனித்தான் உலகநாதன்.

சட்டையை விலக்கி ஒரு பொட்டலத்தை எடுத்தான். அதிலே இட்டிலி கொஞ்சம் மிளகாய்த்தூள் விரவியது. கொஞ்சம் சட்டினி எல்லாம் குழம்பிக் கிடந்தன! பேப்பரில் சுற்றிக்கொண்டு வந்ததால் பேப்பர் நசநசத்துப்போய் இருந்தது. இருக்குமிடம் புளியமரத்தடி. நசுங்கிய பேப்பரில் இட்டிலி, எதிரே பிச்சைக்காரன், கொண்டு வந்தவனோ அருமைத் தம்பி. நேற்று இரவு முழுக்க ஒன்றும் சாப்பிடவில்லை. பகலில் பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, சித்தி உதைத்தாள். ஆகவே பசி வயிற்றைக் கிள்ளியது. எதிரே உணவு வந்த பின்னர் இடத்தின் சுத்தத்தைக் கவனிக்காமல் ஒரு துண்டு எடுத்துப் போட்டான். காரம் அதிகமாக இருந்தது. ஆகவே விக்கல் எடுத்தது.

"இதோ ஓடிப் போய் அந்தக் குழாயில் தண்ணீர் கொண்டு வருகிறேன்."

ஆறுவயது சின்னப்பயல் ஓடினான். அவன் பிஞ்சுக் கைக்குள் தண்ணீர் எவ்வளவு நிற்கும்? அதுவும் மடித்து உள்ளங் கையைக் குவிக்கத் தெரியாத வயது. சீனுப் பயல் தண்ணீர் கொண்டு வர ஓடினாலும் உலகுக்கு விக்கல் வந்து கொண்டிருந்தது. குருடன் ஊகித்துக்கொண்டான். 'யாரோ உண்ணப் பொருள் கொடுத்திருக்கிறார்கள். காரம் அதிகம். உண்டதும் பயலுக்கு விக்கல் எடுத்திருக்கிறது' என்பதை உணர்ந்து கொண்டான்!

"என்னிடம் சின்னக் குவளை இருக்கிறது, தரட்டுமா?" என்று பைக்குள் இருந்து சிகரெட்டு டின் ஒன்றை எடுத்தான். அதுதான் அவன் வைத்துள்ள தண்ணீர்த் தம்ளர். அதை வாங்கவும் அச்சமாக இருந்தது. குருடன் பைக்குள் என்னென்னவோ பொருள்கள். வீடே அவனுக்கு அப்பெரிய பைதானோ என்னவோ?

"வேண்டாம்! நீ வந்த வழியாகப் போய் விடு!"

"பாவம்! உனக்கு அம்மா இருக்கிறார்களா?" என்று கேட்டவாறே குருடன் உட்கார்ந்தான். அவன் மனசில் ஒருஅபிப்பிராயம் இருந்தது: உலகநாதன் கலங்கும் வேளையில் தன்னோடு அழைத்துப் போய்விட வேண்டும். கொஞ்சம் பிரியமாக அழுத்திக் கூப்பிட்டால் வந்து விடுவான். அதற்காகத் தரையில் அமர்ந்தான்.

பத்து கஜ தூரத்திலே கைநிறையத் தண்ணீர் பிடித்துக் கொண்டு சீனுப் பயல் நலுங்காமல் வந்தான். அந்த உள்ளங் கைக்குள் தண்ணீர் நிற்கிறதாக அவனுக்கு எண்ணம். பாவம், அவன் எவ்வளவு மெதுவாக வந்தும், ஒரு பொட்டுத் தண்ணீர் கூடக் கையிலே இல்லை. உலகநாதன் விக்கிக் கொண்டே கையிலிருந்த இட்டிலியை விழுங்கிக் கொண்டிருந்தான்.

"எங்கேடா சீனு தண்ணீர்?"

"இங்கே பாரு, அண்ணா! கைநிறையத்தான் தண்ணீர் பிடித்துக்கொண்டு

வந்தேன். எப்படியோ காணாமல் போய் விட்டது!"

குருடன் சிரித்துக் கொண்டான். சின்னக் குரலாக இருந்ததால், அவன் உலகநாதனை விடச் சின்னவன் என்று மனத்துள் திட்டம் போட்டுக் கொண்டான்.

"இந்தத் தகரத்தைக் கொண்டு போய்த் தண்ணீர் பிடித்து வா."

குருடனிடம் நெருங்கவே சின்னப் பயல் சீனு நடுங்கினான். அவனுக்குப் பயம், பிச்சைக்காரர்கள் பிள்ளையைப் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்று அவனது அம்மாவும் அடிக்கடி சொல்லியிருக்கிறாள்! அதனால் பயம் அதிகமாகி விட்டது. போதாக்குறைக்குக் கையிலே இருந்த மூங்கில் தடி வேறு பருமனாக இருந்தது. சீனுப் பயல் பயந்து கண் கலங்கி நின்றான்.

"வாங்காதேடா, சீனு! நானே போய்த் தண்ணீர் குடிக்கிறேன்."

உலகநாதன் அங்கிருந்து எழுந்தான். சீனுப் பயல் பயந்து ஒரு தாவுத்தாவி முன்னே வந்துவிட்டான். பிச்சைக்காரனுக்கு இது ஒன்றும் தெரியாது. சற்றுப் பொறுத்துச் சத்தம் வராமற் போகவே, அவன் திண்டாடினான்; கூப்பிட்டான். அது சமயம் குழாயிலே, ஒரு கையில் இட்டிலியும் ஒரு கையில் குழாய்த் தண்ணீருமாகக் குடித்துக் கொண்டிருந்தான் உலகு. சீனுப் பயலின் சின்னக் கை குழாயின்மேல் இருந்தது.

"அண்ணா! நீ அந்தப் பிச்சைக்காரனோடு பேசாதே. அவன் பிடித்துக் கொண்டு போய் விடுவான். வீட்டுக்கு வருகிறாயா?" என்று கேட்டான் சீனு.

"வந்தால் ஜானகி அம்மாள் என்னை அடிக்குமே?"

"அப்போ என்ன செய்யப் போகிறாய்?" கேள்வியிலே அழுகை வந்தது.

கொஞ்சம் இட்டிலியும், சிறிது தண்ணீரும் வயிற்றுக்குள் பட்டதும் உலகநாதன் சிரிக்கக் கூடச் செய்தான். அந்த வேளையில்தான் இரும்புக் கரம் ஒன்று அவன் கழுத்தைப் பிடித்தது. பிடித்த பிடியில், வாயிலே இருந்த இட்டிலித் துண்டு தன்னைப்போல் வெளியே வந்து விழுந்தது. கத்தவும் முடியவில்லை. வலியோ உயிர் போயிற்று. அந்த இரும்புக் கரத்தின் மற்றொரு கை சீனுப் பயலின் கையைப் பிடித்தது.

"ஐயோ, அம்மா! எமன் வந்து விட்டதே!" என்று சீனு அலறினான். சீனு அலற அலற, அவனையும் விடாமல் பிடித்தது அந்தக் கரம். குரல்வளையில் பிடித்த பிடி குரங்குப் பிடியாகத் தள்ளிக் கொண்டு போயிற்று. கையிலுள்ள இட்டிலி கீழே விழாதிருக்க, அதனைக் காப்பாற்ற முனைந்தான் உலகு. அதே சமயம், காலால் அந்த ராட்சச வெறியன் எற்றினான். இட்டிலி பொட்டலத்தோடு ஆகாய மார்க்கமாகப் பறந்து போயிற்று. போன பொட்டலம் கீழே வந்தபோது ராட்சஸன் தலையில் 'பொத்'தென்று விழுந்தது. சீனுவுக்குச் சிரிப்புவந்தது. சிரித்து விட்டான். தன் தலையில் விழுந்ததைக் கண்டு சீனு சிரிக்கிறானே என்ற ஆத்திரத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தான். அப்படிக் கொடுக்க உலகநாதன் கழுத்திலிருந்து கையை எடுக்க வேண்டியிருந்தது. கையை எடுத்த மறுவிநாடி உலகநாதன் சிட்டாகப் பறந்து விட்டான்.

சீனு அடிபட்டதுதான் மிச்சம். யாரைப் பிடிக்க வேண்டும் என்று எண்ணி வந்தானோ, அவன் தப்பி விட்டான். இனி அவனைத் துரத்திப் பிடிப்பது முடியாது. இனிமேல் கையில் இடைத்த தம்பியைத் தள்ளிக் கொண்டு போக வேண்டும், அம்மா முன்னால் கொண்டு போய் நிறுத்தி நடந்ததைச் சொல்ல வேண்டும். சீனுப் பயல் அம்மாவுக்குத் தெரியாமல் இட்டிலியைக் கொண்டு வந்து கொடுத்ததற்



குத் தகுந்த தண்டனை கிடைக்கும்; தன்னையும் தாயார் புகழ்வாள். இவ்வாறு எண்ணிக்கொண்டு சீனுப் பயலைக் 'கரகர'வென்று தெரு வழியே இழுத்துக் கொண்டு போனான் பொன்னுரங்கம். அவன் பெயர் பொன்னுரங்கமே தவிர, அவன் செய்கை யெல்லாம் ராட்சசத்தனமாக இருக்கும். பெயருக்கும், செயலுக்கும் சம்பந்தம் கிடையாது என்பதற்கு அவன் குணம், செயல் எல்லாம் பின்னால் நமக்குத் தெரியும். சீனு, சிறு பையனாக இருந்தாலும் உலகநாதனின் பசியைப் போக்க அம்மாவுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக இட்டிலி கொண்டுவந்தான். சீனுவின் அண்ணன் பொன்னுரங்கம் என்ன செய்தான், பார்த்தீர்களா?

உண்பதை உதைத்த உத்தமன்!

சீனுவைத் தெருவழியாக இழுத்துப் போகும்போது, பலர் விட்டுவிடச் சொன்னார்கள். இவர்கள் அனைவரும் ஜானகி அம்மாளின் குணம் தெரியாதவர்கள். அவள் குணம் தெரிந்தவர்கள் வாயை மூடிக்கொண்டு போனார்கள். வீடு நெருங்க நெருங்கச் சீனுவின் பயம் அதிகமாயிற்று.

“அண்ணா! பொன்னண்ணா! என்னை விட்டுவிடு. அம்மாவிடம் சொல்லாதே. அம்மா கொன்று போடுவாள். உனக்குப் பறக்கும் பட்டம் ஒன்று தந்து விடுகிறேன். இல்லை, என்னிடமுள்ள பீங்கான் கோலிக்குண்டுகளில் இரண்டைத் தந்து விடுகிறேன்.”

“நிஜமாகத் தந்துவிட்டால் நான் அம்மாவிடம் சொல்ல மாட்டேன்.”

“ஏதாவது ஒன்று தந்தால் போதுமா?”

“இரண்டுமே தரவேண்டும்!”

தாயிடம் அடிபடாமல் தப்புவதற்குத் தன்னுடைய இரு பொக்கிஷங்களான ரோஸ் பட்டம், நீலவண்ணக் குண்டு இவற்றை இழக்கச் சித்தமானான். கைப்பிடியை விட்டுவிட்டான் பொன்னு. இருவரும் ஏதும் நடக்காதவர்கள் போன்று வீட்டுக்குள்ளே வந்தார்கள்.

ஜானகி அம்மாள் அப்போதுதான் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தாள். “டேய், சீனு! நீ இட்டிலி தின்னாமல் ஓடிப்போய் விட்டாயே!” என்று அன்பாகக் கேட்டாள்.

“அதுதான் தின்றேனே!”

சீனுப் பயல் பொய் சொல்வதை அவள் எங்கே கண்டாள்?

“இரண்டு இட்டிலி தானேடா தின்னே? இன்றைக்கு நீ எண்ணெய் போட்டுக் கொள்ளாமல் வெறும் இட்டிலியை எப்படித் தின்றாயோ?”

தாய், அரிசி புடைக்க ஆரம்பித்த போது, சீனுவுக்கும் பொன்னுவுக்கும் சண்டை வளர்ந்தது. இவன் ஒரு பொருள் மட்டும் தருவேன் என்றான்; அவனோ இரண்டு பொருளும் தேவையென்றான். இவ்வாறு இருவருக்கும் வாக்குவாதம் நடக்கவே, தாயார் கூர்ந்து கேட்க ஆரம்பித்தாள். அரிசியைப் புடைக்காமல் தாய் தங்கள் பேச்சை உற்றுக் கேட்பது பிள்ளைகளுக்குத் தெரியாது. தனக்குத் தெரியாமல் சீனு இட்டிலியைக் கொண்டு போய் உலகநாதனுக்குக் கொடுத்து விட்டானா? இதை எண்ணியதுமே, ஜானகிக்குக் கோபம் வந்தது. அவளுக்குக் கோபம் வந்தால் பிள்ளைகளைக் கையால் அடிப்பது கிடையாது. அதற்கென்று பெரிய பிரம்பு ஒன்று வைத்திருந்தாள். அதனை எடுத்தாள்.

மறுகணம் ‘பளீர்! பளீர்!’ என்று சீனுவின் முதுகில் அடி விழுந்தது. சீனு துடித்துத் துவண்டு விட்டான்.

“எங்கே அந்தக் கடன்காரப் பயல் உலகு? இட்டிலியைக் கொடுத்தாயா?” என்று உறுமினாள். சீனு அழுதுகொண்டே நடந்ததைச் சொன்னான். தான் தவறு செய்து விட்டதாகவும், இனிச் செய்வதில்லையென்றும் வாக்குறுதி கொடுத்தான். செய்த தப்பிதத்துக்கு, அடிக்கு மேல் அடி அடித்தபோது சீனு மயங்கிப் போய்க் கீழே விழுந்தான்.

சின்ன மகன் கீழே விழுந்ததும், பொன்னுவின் பக்கம் அவள் கோபம் திரும்பியது.

“அம்மா! அந்தப் பயலுக்கு இவன் இட்டிலி கொண்டு கொடுத்தான். இருவரும் தெருக்கோடிக் குழாயடியில் தண்ணீர் குடித்தார்கள். இருவரையும் பிடித்து வந்தேன். அந்த எமன் தப்பியோடி விட்டான்” என்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சொன்னான் பொன்னுரங்கம்.

“அவன் எங்கே போயிருந்தாலும் தேடிக் கொண்டு வா!” என்றாள்.

மூர்ச்சையாயிருந்த தம்பியை ஒரு மிதி மிதித்து விட்டுப் பொன்னு வேகமாகத் தெருவுக்குள் ஓடினான். எங்கே போய்த் தேடுவது என்று தெரியாமல் கால் போன போக்கில் போய்க் கொண்டிருந்தான். **(தொடரும்)**

கடைசிப் பொங்கல்


வழக்கம்போல் ஏழு புதுப் பானைகளிலே பொங்கல் பொங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் காளியம்மாவின் முகத்திலே வழக்கமாகத் தோன்றும் உற்சாகக் குறி ஒன்றும் இன்று தென்படவில்லை. அடக்க முயன்றும் முடியாமல் அவளை மீறிக் கொண்டு கண்களிலிருந்து துயரத் தாரைகள் வழிந்தன.

மாடுகளை இரவு நேரங்களிலே அடைத்து வைக்கும் பட்டி புதுமையாக முன்னால் காட்சியளிக்கிறது. புதிய மூங்கில் தப்பைகளைக் கொண்டு பட்டிப் படல்களைச் செப்பனிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பொங்கல் புதுநாளிலும் பட்டி புதுப்பிக்கப்பட வேண்டுமல்லவா? அதை ஒழுங்காகச் செய்திருக்கிறான் முத்துசாமிக் கவுண்டன். ஆனால் அவன் முகத்திலும் இன்று துயரத்தின் சாயல் தான்படிந்திருக்கிறது. பொங்கலுக்கு வேண்டிய சாமான்களை எடுத்து வந்த மாட்டு வண்டியின் ஏர்க்காலின் மேல் அவன் சோர்வோடுஉட்கார்ந்திருக்கிறான். மாயப் போர்வை போலச் சுற்றிலும் படர்கின்ற இருளின் கருமையோடு சேர்ந்து அவனுடைய உருவம் அசையாத கருங்கற்சிலையாகத் தோற்றம் அளிக்கிறது.

உழவனுக்குப் பட்டிதான் முதல் தெய்வம். அந்தப் பட்டிஆவுடையார் என்று அவன் வணங்குகிறான். ஏழு பொங்கல்களிலே முதல் பொங்கல் பட்டி ஆவுடையாருக்கு. அடுத்த பொங்கல் முருகனுக்கு; அடுத்தது குல தெய்வத்துக்கு. இப்படி வரிசையாக ஒவ்வொரு தெய்வத்துக்குமாக ஏழு பொங்கல்கள் பொங்கிக் கொண்டிருக்கின்றன. கடைசிப் பொங்கல் கன்னிமாருக்கு. தை பிறந்த முதல் நாளில் சூரியனுக்குத் தலைப்பொங்கல். அது வீட்டிலே அதிகாலையிலே தயாராகும். அடுத்த நாளாகிய இன்றுமாட்டுப்பொங்கல். இது கழனியிலே மாலை நேரத்திலே மாடுகளின் முன்னிலையிலே நடக்கும்.

பட்டி ஆவுடையார் பொங்கல் எல்லாவற்றிலும் பெரியது; பெரிய பானையிலே பால் பொங்குகிறது. அறுவடை செய்யப்பட்ட துவரைச் செடிகள் ஆங்காங்கே குவியல் குவியலாகக் கிடக்கின்ற கழனியின் மத்தியிலே பட்டியின் எதிரிலே மூன்று மூன்று கற்களைக் கொண்டு முக்கோண வடிவில் அமைத்த ஏழு அடுப்புகளிலும் தீ உற்சாகமாகச் சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

ஆனால் பொங்கல் வைக்கும் தம்பதிகளின் உள்ளத்திலே உற்சாகம் இல்லை; துயர அலைகள்தான் முட்டிமோதிக் கொண்டிருந்தன.



"ம்... இது தான் கடைசிப் பொங்கல். அடுத்த வருஷத்திலே இந்தக் காட்டிலே

யார் பொங்கல் வைக்கிறார்களோ?" என்று நீண்ட பெருமூச்சு விட்டாள் காளியம்மாள்.

"போனால் போகுது. எல்லாம் விதிப்படிதான் நடக்கும்" என்று வாயைச் சப்பினான் முத்துசாமி. ஒரு பெருமூச்சு அவன் உள்ளத்தைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டது.

"காடு போனால் போகுது; வயலும் தோட்டமும் போன பிறகு இந்த வறண்ட காடு மட்டும் இருந்து என்ன பிரயோசனம்? அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை" என்று காளியம்மாள் தனது கவலையின் உண்மைக் காரணத்தைக் குறிப்பாகக் காட்டினாள்.

"போன வருசத்திலே பொங்கல் வைக்கிறபோது எல்லாந்தான் இருந்தது. ஆனால் இந்தப் பொங்கலுக்கு இதுதான் மிச்சம். அடுத்த பொங்கலுக்கு இதுவுமில்லை. நினைத்துப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும்."-விசனச் சிரிப்போடு முத்துசாமி பேசினான்.

சென்ற ஆண்டிலே முத்துசாமிக்கும் அவன் அண்ணன் கந்தசாமிக்கும் சொத்து பாகப் பிரிவினை நடந்தது. அது வரையிலும் உயிருக்குயிராக இருந்த அவர்களுக்குள்ளே பாகப் பிரிவினையோடு உள்ளப் பிரிவினையும் ஏற்பட்டு விட்டது. தனி உடைமை என்கிற எண்ணத்தோடு அதைக் காப்பாற்றுவதற்காகத் தோன்றும் ஆவல் ஒரு வெறியாகவே தலையெடுத்தது.

பெரிய தோட்டம் ஒன்றைப் பாகப் பிரிவினையின் போது இரண்டாகப் பிரித்தார்கள். அதன் மத்தியிலே பொழி அமைப்பதிலே சிறிய சச்சரவு கிளம்பியது. அது பூத வடிவெடுத்துச் சூழ்ச்சிக்கும், வியாச்சியத்துக்கும், கட்சிக்கும் காரணமாயிற்று. இரு பக்கங்களிலும் பணச் செலவு எதிர்பாராத விதமாகப் பெருகியது. அண்ணன் சொத்தெல்லாம் கரைந்து விட்டது. தம்பிக்கு இந்தத் துவரைக் காடு ஒன்றுதான் மீதி. இதன் மேலும் அவன் கடன் வாங்கியிருந்தான். அந்தக் கடனுக்கு ஈடாக இதுவும் சீக்கிரத்திலே போய்விடும்.

"கோர்ட்டுச் சேவகனுக் கெல்லாம் தொங்கு சலாம் போட்டீர்கள். அது கேவலமில்லை. அண்ணனுக்குப் பணிந்து போனால் அது கேவலம்" என்று புதிராகப் பேசினாள் காளியம்மாள். கணவன் நடத்தையைத் தான் ஆமோதிக்கவில்லை என்று பல தடவைகளில் அவள் காட்டிக் கொண்டிருக்கிறாள்.

"நான்தானா சலாம் போட்டேன்? அண்ணன் போடவில்லையா?"

"அவரும் போட்டாலும் அந்த அவமானம் உங்களுக்கு இல்லையா? இத்தனை காலமும் நாலு பேர்கள் மதிக்க வாழ்ந்து விட்டு இன்றைக்கு அண்ணனுக்கு ஒரு துண்டு நிலம் கிடையாது. பொங்கல் வைக்கிறதுக்குக் கூடப் பண்ணையில்லை, ஆடுமாடு இல்லை. அடுத்த வருசத்திலே நம்ம கதியும் அதுதான்."



காளியம்மாள் அடுப்புக்கவிலே விறகைத் தள்ளி விட்டாள். புதிய வேகத்தோடு நெருப்பு ஓங்கிப் படமெடுத்து ஆடியது. அவள்

உள்ளத்திலே துக்கமும் புதிய வேகம் கொண்டு மேல் எழுந்தது.

"ஒரு சின்னப் பொழி. அதிலே இரண்டடி அந்தப் பக்கம் போனால் என்ன, இந்தப் பக்கம் வந்தால் என்ன? அப்படிப் போனாலும் அது மூணாவது மனிதனுக்குப் போய்ச் சேர்ந்துவிடவில்லையே?" என்று மீண்டும் குற்றம் சாட்டினாள் காளியம்மாள்.

"அந்த யோசனை அண்ணனுக்கல்லவா வர வேணும்?"

"ஏன், உங்களுக்கு வரப்படாதா? நானும் தலையில் அடித்துக் கொண்டேன். அப்போ என் பேச்சு காதிலே ஏறவேயில்லை."

"அடே, போனதை நினைத்து இப்போ என்ன ஆகப் போகுது? நானே விட்டுக் கொடுத்திருக்கலாம். இனிமேல் அதைப் பற்றிப் பேசி லாபம் என்ன?"

"போனதெல்லாம் போனாலும் இனியாவது நாம் ஒற்றுமையாக இருக்கலாமல்லவா?"

"அண்ணனுக்குத்தான் அந்தப் புத்தி முதலில் வரவேணும். பொங்கலுக்கு நாம் பட்டிக்குப் புறப்பட்டபோது, அந்தக் குழந்தையை அண்ணன் அடித்தானே - அந்த அறை என் கன்னத்திலே விழுந்ததுபோல் இருக்கிறது."

முத்துசாமியின் உள்ளம் கொதித்தது. மாலையிலே ஊர்த் தலை வாசலிலே நடந்த சம்பவத்தின் நினைப்பு அவனை உலுக்கி விட்டது.

அன்று மாலை முத்துசாமியின் மொட்டை வண்டி கோயில்புத்தூர்த் தலைவாசலிலே நின்று கொண்டிருந்தது. பொங்கலுக்கு வேண்டிய பச்சரிசி, காய் கறிகள், புதுப்பானைகளெல்லாம் அதில் ஒழுங்காக இருந்தன.

முத்துசாமி வீட்டிலிருந்து தன் மனைவி காளியம்மாளோடு புறப்பட்டான். பொங்கல் வைக்கப் பட்டிக்குப் புறப்படுகிறவர்கள் எதிரில் கண்டவர்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிடுவார்கள். பகையிருந்தாலும் அதை மறந்து விட்டு அன்று எல்லோரும் ஆசீர்வாதம் செய்வார்கள். "சுகமாகப் போய் வாருங்கள். பட்டி பெருக வேணும்; பால் பொங்க வேணும்" என்று மனமாரக் கூறுவார்கள். அப்படி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டே வந்து முத்துசாமி வண்டியில் ஏறினான்.

"சித்தப்பா! நானும் உங்களோடு வருகிறேன்" என்று கூவிக்கொண்டு அவனுடைய அண்ணன் பையன் குழந்தைவேல் ஆவலோடு வண்டியருகிலே ஓடி வந்தான். அவனுடைய குரல் தலை வாசலில் ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்த கந்தசாமிக்குக் கேட்காமல் இருக்குமா?

அவனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. குழந்தைவேலின் கன்னத்திலே பளாரென்று ஒரு அறை கொடுத்தான். கையைப் பிடித்து அவனைத் தரதர வென்று இழுத்துக் கொண்டு வேகமாக நடந்தான். குழந்தைவேலின் வாயி லிருந்து குபீரென்று ரத்தம் வெளிப் பட்டு வந்தது; பல் இரண்டு கீழே தெறித்து விழுந்தன. "ஐயோ, அம்மா!" என்று பையன் அலறினான். கந்தசாமி ஒன்றையும் கவனியாமல் அவனை இழுத் துக்கொண்டு தன் வீட்டுக்குள் நுழைந்து விட்டான். வண்டியைப் பூட்டி ஓட்டிச் சென்ற முத்துசாமியின் செவிகளிலே குழந்தைவேலின் அழுகைக் குரல் வெகு நேரம் வரை ஒலித்துக் கொண்டிருந்தது.

"அந்தப் பையன் என்னை விட்டுப் பிரியவே மாட்டான். பெற்ற அம்மாள் கூப்பிட்டாலும் போகாமல், 'சின்னம்மா, சின்னம்மா!' என்று என்னிடத்திலேயே இருப்பான். அப்படி இருந்தவனை இந்த ஒரு வருசமாக நான் கண்ணாலே பார்க் கக் கூட முடிகிறதில்லை" என்று காளி யம்மாள் கண்ணீர் வடித்தாள்.

"பட்டிக்கு வந்தால் என் கூடவே திரிவான். பாகப் பிரிவினையின்போது சித்தப்பனுக்குத்தான் பெரிய காளை யைக் கொடுக்க வேணுமென்று அவன் விடாப் பிடியாகச் சொல்லிக் கொண் டிருந்தான்."

"ஆமாம்! அவன் ஆசைப்பட்டபடியே தான் உங்களுக்கும் கொடுத்தார்கள். அதை இல்லையென்று நீங்கள் சொல்ல முடியுமா?"

"இல்லையென்று யார் சொன்னார்கள்? அந்தப் பையன் இன்றைக்கு என் கூட வந்தால் ஆகாதா? அவர்கள் வீட்டில் தான் பொங்கல் இல்லை. குழந்தையின் ஆசையைக் கெடுத்ததுமில்லாமல் பேய் அறைந்தது போல் அறைந்தானே?" பேசப் பேசக் கோபம் மேலோங்கியது முத்துசாமிக்கு. குழந்தைவேலின் மேலுள்ள அன்பு அண்ணன்மேல் கோப மாக உருவெடுத்தது.

"உங்கள் கூட எப்படி மனசார அவனை அனுப்புவார்கள்? நீங்களே கொஞ்சம் யோசனை செய்து பாருங் கள்" என்று அமைதியாகச் சொன்னாள் காளியம்மாள்.

"ஏன் அனுப்பக் கூடாது? குழந்தைக்கு நம்ம சண்டையெல்லாம் தெரியுமா? அவனை எதற்காகத் தடுக்கவேணும்?" ஆத்திரம் பொங்கப் பொங்க மனைவியை விழுங்கி விடுகிறவன் போலப் பார்த் தான் முத்துசாமி.

காளியம்மாள் தளர்ந்து விடவில்லை. "வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது என்

லோரையும் கையெடுத்துக் கும்பிட்டீர்களே, அண்ணனைக் கும்பிட்டீர்களா? எத்தனை பகையிருந்தாலும் இன்றைக்கு அதை நினைக்கலாமா?'' என்று அவள் குற்றம் சாட்டி வெடுக்கென்று பேசினாள்.

முத்துசாமி மௌனம் சாதித்தான். பதில் பேச அவனால் முடியவில்லை.

''குடியைக் கெடுத்தானே, அந்த மேற்கு வீட்டுக் கருப்பன் - அவனைக் கூடக் கும்பிட்டீர்கள். அவன் இல்லாவிட்டால் நம்ம குடும்பம் இத்தனை கெட்டுப் போயிருக்காது. அவனைக் கும்பிட்ட போது பக்கத்திலே நின்ற அண்ணனைக் கும்பிடாமல் மறுபக்கம் பார்த்துக் கொண்டு வந்தீர்களே - அவர் எப்படிக் குழந்தையை உங்களோடு சேர்ந்து அனுப்புவார்?''

பட்டி ஆவுடையார் பொங்கற்பானை திடீரென்று உருண்டது. என்றும் நடைபெறாத விதமாக அது இரண்டாக உடைந்து பொங்கற் சோறெல்லாம் நெருப்பிலே வழிந்தது.

காளியம்மாள் திடுக்கிட்டாள். ''இதென்ன சோதனையோ?'' என்று கூவி விம்மினாள். முத்துசாமி வண்டி ஏர்க்காலை விட்டு எழுந்து அடுப்படியே ஓடி வந்தான். அவன் உள்ளமும் பதைத்தது. பொங்கற் பானை உடைவது பொல்லாத சகுனமல்லவா? உழவனுடைய முக்கியமான திருநாளிலே இப்படி நேரலாமா?

''அண்ணனைக் கும்பிடாமல் வந்தது ஆவுடையாருக்கும் பொறுக்கவில்லை'' என்று பொருமினாள் காளியம்மாள்.

''எனக்கும் அந்தப் பையன் இல்லாமல் பொங்கல் படைக்க மனம் இசையவே இல்லை. ஊருக்கு ஓடிப் போய் அண்ணனுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டுக் குழந்தைவேலை அழைச்சுக்கிட்டு வரட்டுமா?'' என்று ஆவலோடு முத்துசாமி கேட்டான். அவன் உள்ளத்திலே மறைந்திருந்த அன்பெல்லாம் பீறிக்கொண்டு மேலெழுந்தது.

''ஆமாம்! உடனே புறப்படுங்கள். நான் வேறொரு பானையிலே பட்டி ஆவுடையாருக்குப் பொங்கல் வைக்கிறேன்'' என்று உற்சாகத்தோடு காளியம்மாள் பதில் கொடுத்தாள்.

அவளைத் தனியாக இருட்டிலே விட்டுப் பிரிவதைக் கூட நினைத்துப் பாராமல் முத்துசாமி வேகமாகப் புறப்பட்டான். துவரைக்காட்டிலிருந்து கோயில் புத்தூர் இரண்டு மைல்.

''சொத்து இன்றைக்கு இருக்கும்; நாளைக்குப் போகும். சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தால், அதுவே பெரிய சொத்து'' என்று எண்ணிக்கொண்டே மகிழ்ச்சியோடு புதிய பானையிலே அரிசியைக் கொட்டினாள் காளியம்மாள். ஒரு சிறிய லாந்தர் நடுக்காட்டிலே அவளுக்குத் துணையாக நின்று ஒளி வீசிக் கொண்டிருந்தது.

இதன் மத்தியிலே ஊரிலே வேறொரு நாடகம் நடந்தேறியது. தந்தையின் கோபத்துக்குப் பல்லைப் பறி கொடுத்த குழந்தைவேலின் அழுகை நிற்கவேயில்லை.

''சின்னம்மா! சின்னம்மா!'' என்று கதறிக் கொண்டிருந்தான்.

''நல்ல கோபம் இது - உங்கள் சண்டைக்குக் குழந்தை என்ன செய்யும்? அது குழந்தைக்குத் தெரியுமா?'' என்று செல்லம்மாள் தேம்பினாள். பெற்ற மனம் பற்றி எரிந்தது.

கந்தசாமி குழந்தையை என்றும் அடித்ததில்லை. அவனுக்கும் அவன் மனைவி செல்லம்மாளுக்கும் அவன் ஒரே பையன்; செல்லப் பையன். கோபம் எப்படியோ அவனையும் மீறி விட்டது; முத்தம் கொஞ்சிய இளங் கன்னத்திலே மோதி அடித்து விட்டான்.

என்றும் அடிக்காத தந்தை அடித்ததைக் கண்டு குழந்தைவேல் நடுங்கிப் போய் விட்டான். தந்தையின் கண்களிலே ஜொலித்த கோபவெறி அவனைப் பொசுக்கி விட்டது. தந்தையை அவன் அந்தக் கணத்திலேயே மறந்தான். ஆனினமே அவனுக்குப் பயத்தை உண்டாக்கியது. சின்னம்மாளின் அன்புருவம் ஒன்றே அவன் நினைவில் நின்றது.

பெற்றவளுக்குக் குழந்தையின் மனநிலை தெரியாமல் போகுமா? செல்லம்மாள் சமாதானப்படுத்தப் பலவகைகளிலே முயன்றாள். அவை பயன்படாமற் போகவே குழந்தைவேலை அழைத்துக்கொண்டு துவரைக்காட்டை நோக்கி இருட்டிலே புறப்பட்டு விட்டாள். வாடிப்போன குழந்தையின் முகம் மலர வேண்டும். கணவன் தன்னையும் அடித்தாலும் பரவாயில்லை.

குழந்தையின் கன்னத்திலே அறைந்த அறைச்சலோடு பேய் வெறி அடங்கத் தொடங்கியது. பகைமைப் புழுங்கலும் எப்படியோ தணியலாயிற்று. அடி மட்டத்திலே அழுந்திக் கிடந்த நெருப்பை வெளியே கக்கிவிட்டு அமைதியடைந்த எரிமலைபோல் மாறினான் கந்தசாமி.

இருட்டிலே விளக்குக்கூட இல்லாமல் குழந்தையை அழைத்துக் கொண்டு தனியாக மனைவி போகிறாளே என்று அவன் தவித்தான். மறுகணத்திலே ஒரு லாந்தரை எடுத்துக் கொண்டு அவன் அவர்களைப் பின் தொடரலானான்.

உணவு ருசியும் சத்தும்
மிகுந்ததாய் அமைய...



RISING SUN BRAND

சூரியன் மார்க்

மைதா
சூஜி
ஆட்டா

"சூரியன் மார்க் மைதா, சூஜி அல்லது ஆட்டாவில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் எப்பொழுதும் ருசியும், சத்தும் மிகுந்ததாக இருபபது எப்படி ?"

இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது மிகவும் சுலபம் — தரக்கட்டுப்பாடு.

தேசத்தின் உணவுத் தேவைக்கு உதவும் பொறுப்பான பணியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். எனவே தயாரிப்புத் துறையில், உயர்தரக் கோதுமையைக் கொள்முதல் செய்வது முதல், தயாரான கோதுமைப் பொருள்களை விற்பனைக்கு அனுப்புவது வரையுள்ள ஒவ்வொரு கட்டத்திலும், கட்டுப்பாடான தரத்தனிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்து கடைப்பிடிக்கிறோம்.

இன்று கோதுமைப் பொருள்களை வாங்கும் பொழுது, சிறிதும் தயங்காமல், உடனடியாக நீங்கள் சூரியன் மார்க்கைத் தேர்ந்து எடுக்கிறீர்கள். இது எங்கள்மீது உங்களுக்குள்ள நம்பிக்கையின் அடையாளம். எங்களுக்கு மகிழ்வுதரும் செயல்



சென்னை செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிட்டெட் தயாரிப்புகள்

மானேஜிங் ஏஜண்டுகள்,

சௌந்தரராஜன் & கம்பெனி லிமிட்டெட்.

221, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்–1

போன் : 3707 & 4375 — தபால்பெட்டி 1558 — தந்தி : MATHOORAN


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!



இன்று தைக் கிருத்திகை. கடைத் தெருக்கள் நிரம்பி வழிகின்றன. எங்கும் பூக்காவடிகளும், பால்காவடிகளின் மணி ஓசையும் மயிர்க் கூச்செரியும்.

முருகப் பெருமானின் சந்நிதிக்கு எதிரே அந்த மூன்று உருவங்கள்! கிழவர் மிகவும் வயது முதிர்ந்து விட்டார். வடிவேலுவும் தேவானையுமே முதுமையுடன் காணப்படுகின்றனரே! மனப் பக்குவத்தினால் ஏற்பட்ட முதுமையா அது? அவர்கள் கண்களிலே ஒரு தனி ஒளி. ஆண்டவனைப் பார்க்கும்போது அது பன்மடங்கு விகாசப்படுகிறது.

பழைய நினைவுகள் என்னை எங்கோ இழுத்துச் செல்கின்றன. இந்த வடிவேலுவும் நானும் ஒன்றாகக் கோலி ஆடி, கில்லி அடித்தோம். இந்தத் தேவானையைத் தோளில் தூக்கி நான் எத்தனை கோவிலுக்கு அழைத்துச் சென்றிருப்பேனோ? இன்று அவர்கள் பெரியவர்கள், நான் கேவலம் சிறியவனிலும் சிறியவன்தான்....

முறுவலிக்கும் முருகன்

அநுத்தமா

கிருத்திகைக்காக விடப்பட்ட தனி பஸ் காங்கேயநல்லூர் கோயில் வாயிலை விட்டுத் திரும்பிய சமயம். கண்டக்டர் வடிவேலு ஏறும் படியில் நின்ற வண்ணம் கம்பியைப் பிடித்து ஒருதரம் சுற்றி, கீல் சுழன்ற கதவு போல் அந்தரத்தில் ஒரு கணம் சுழன்று நின்று, ஆண்டவனை மீண்டும் ஒரு முறை தரிசிக்க முயன்றான். பஸ்ஸில் இன்னும் பிரயாணிகள் யாரும் ஏறவில்லை. வண்டியைத் திருப்பித் தெரு முனையில் நிறுத்தி, இரண்டு மூன்று முறைகள் 'பாம், பாம்' என்று சத்தப்படுத்த வேண்டும். அப்பொழுது ஆங்காங்கு கடைகளிலும், வீட்டுத் திண்ணைகளிலும், கோவில் பிராகாரத்திலும் குழுமிப் பேசிக் காத்துக் கொண்டிருக்கும் ஜனங்கள், புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் ஓடி வருவார்கள்; முண்டி அடிப்பார்கள். அவர்களைச் சமாளித்து, சிலரை ஏற்றிக் கொண்டு, பலரை விட்டு விட்டுக் கிளம்புவது பெரிய சாதனையாகி விடும். டிரைவர் தங்கவேலுவுக்குப் பொறுமை பறந்து விடும். சிடுசிடுக்கும் முகத்துடன், இரு கைகளையும் ஸ்டியரிங் சக்கரத்தின் மீது படுக்க விட்டபடி அவன் திரும்பிப் பார்ப்பான்.

வடிவேலுவின் சிரித்த முகத்தைக் கண்டே அநேகம் பேர்கள் அவன் இருக்கும் பஸ்ஸில் ஏற முயலுவது சகஜமாகி விட்டது. பெண் பிள்ளைகள் ஏறும்போது கனிவு சொட்டும் அவன் குரலில், "ஏறு, தங்கச்சி! ஏறு, தாயே, சீக்கிரம் ஏறுங்க....'

சிறு குழந்தைகள் வந்தால் அவன் அவர்களை அலாக்காகத் தூக்கி, "வா, முருகப்பா! வா, வள்ளிக்கண்ணு!" என்று அன்பு சொட்ட அழைத்த வண்ணம், அவரவர் பெற்றோர், உற்றோரிடம் ஒப்படைப்பான். இதைக் காண, டிரைவர் தங்கவேலுவுக்கு எரிச்சல் அதிகமாகும். ஆனால் வடிவேலுவிடம் கோபித்துப் பயனில்லை என்று அவன் அறிந்திருந்த படியால முணுமுணுத்தபடி பொருமிக் கொண்டே யிருப்பான்.

தங்கவேலுவும் வடிவேலுவும் சிறு பிராயம் முதல் இதுகாறும் ஒன்றாகவே இருந்து வருகின்றனர். தங்கவேலு வடிவேலுவின் ஒன்று விட்ட மாமன் - வடிவேலுவின் தங்கையை மணந்து கொண்டிருந்தான். தன் அண்ணன் மகள் தேவானையை வடிவேலுவுக்குக் கொடுத்து ஆசையோடு மணம் முடித்து வைத்தான் தங்கவேலு. மாமன், மச்சான், மருமகன் என்ற பல உறவு முறைகளைக் காட்டிலும், அவர்கள் இருவருக்குமிடையே நேசம் மிகுந்த ஓர் இதய உறவு இருந்துவிட்டது.

தங்கவேலுவும் வடிவேலுவும் மனத்தில் ஒருமைப்பாடு கொண்டவர்களாக இருப்பினும், மற்ற விஷயங்களில் அதிக வேற்றுமை உடையவர்கள். தங்கவேலு வயது ஆக ஆகத் தொப்பையும் தொந்தியுமாக வளர்ந்துவிட்டான். ஏழு எட்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகி விட்டான். குடும்பத்தில் பற்றாக் குறையுடன் போராடிப் போராடி நிரந்தரமாக ஒரு சிடுசிடுப்பும் கடுகடுப்பும் அவனிடம் புகலிடம் கொண்டு விட்டன. வடிவேலுவின் ஒற்றை நாடி சரீரம் நாட்கள் செல்லச் செல்ல உலர்ந்து கொண்டே வந்து விட்டது. கிள்ளி எடுக்கச் சதையில்லாமல் உயரமாக வளர்ந்து விட்டான் அவன். அவன் கண்களிலே எப்பொழுதும் ஓர் அமைதி, வதனத்தில் ஒரு புன்னகை, வாயில் தெய்வத்தின் திருநாமம்.

அவனை உருவத்தில்மட்டும் தங்கவேலுவுக்கு மாறாக வைக்கவில்லை கடவுள். வாழ்க்கையிலும் மிக மிக மாறாக்கி விட்டார். வடிவேலுவுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து, ஐந்து வயது வளர்ந்து இறந்து விட்டது. அதற்குப் பிறகு பத்து வருடங்கள் கழித்து ஒரு பெண்



"உன் கணவர் மாடு மாதிரி ஓடி ஓடிச் சம்பாதிக்கிறாரே, அத்தனை பணமும் என்ன ஆச்சு?"

"குதிரைப் பந்தயத்தில் தோற்கிறார்!"

பிறந்தது. அதற்கு நகை செய்ய வேண்டும், பாவாடை தைக்க வேண்டும் என்று நினைத்தாள் அதன் தாய் தேவானை. மூன்று வயது வளர்ந்தது அந்த மகவு. "லக்ஷ்மி!" என்று பெயர் வைத்து ஆசையுடன் சீராட்டினார்கள் பெற்றோர். வெடுக்கென்று பேசியது அந்தக் குழந்தை. அந்தச் செல்வச் சிறுமி ஓர் ஆடிக் கிருத்திகை அன்று காங்கேயநல்லூர் கோவில் கூட்டத்தில் எங்கோ காணாமற் போய் விட்டாள். அது நடந்தும் இப்பொழுது மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. தேவானை இடிந்து குன்றி விட்டாள்.

பஸ்ஸில் இருந்த ஒரு பெண் தன் மகள் லக்ஷ்மியின் சாயலாக இருப்பதைக் கண்டான் வடிவேலு. அவன் கண்கள் அப்படியே நிலைத்து நின்றுவிட்டன.

வடிவேலு டிக்கட்டுகளைக் கொடுத்து முடித்துச் சரி பார்த்துவிட்டு, தன் இடத்தில் அமர்ந்தான். பஸ் அப்பொழுது கப்பிப் பாதையை விட்டு விட்டு, காட்பாடி வேலூர் சிமெண்ட் சாலையில் ஏறியது. வடிவேலு தன் இருப்பிடத்திலிருந்து குனிந்து கிழக்கே நோக்கினான். காங்கேயன் கோயில் கோபுரம் தென்படவில்லை. இருந்தாலும் வலது கையின் விரல்களால் மோவாயிலும், கன்னத்திலும் தட்டிக் கொண்டான்.

"கண்டக்டர் கடவுளுக்குத் தந்து கொடுக்கிறாரு, பார்த்தியா?" என்று ஒரு பிரயாணி கேலியாகப் பேசினார்.

பஸ் 'விர்'ரென்று பறந்து சென்றது. லக்ஷ்மி போல் இருந்த பெண்ணைக் கையில் பிடித்துக் கொண்டு ஒருவர் எழுந்து நின்றார். அதைக் கண்டதும் மணி அடித்தான் வடிவேலு. அந்த மனிதன் ஜட்கா ஸ்டாண்டில் இறங்கிக் கூட்டத்தில் மறைந்து விட்டார். வடிவேலு அந்தத் திக்கையே ஒருகணம் பார்த்தான்.

பஸ் டவுன் தாணு தாண்டுவதற்குள் அநேகமாக எல்லோரும் இறங்கி விட்டனர். ஒரே ஒரு தொரப்பாடி டிக்கட்டு தான் இருந்தது. வடிவேலு தன் இடத்தில் இருந்தபடியே,

"நேரே தில்லு போ. இன்னும் இரண்டு 'டிரிப்' அடிச்சுட்டா அப்புறம் நிம்மதியாய் வீடு போய் விடலாம்" என்றான்.

வடிவேலு தனக்குள் சிரித்துக் கொண்டான்.

தொரப்பாடியைத் தொட்டு பஸ்ஸில் இருந்த ஒற்றைப் பிரயாணியையும் இறக்கி விட்டு, பஸ் மீண்டும் காங்கேயநல்லூர் நோக்கித் திரும்பிச் சென்றது.

தங்கவேலு தன் வழக்கப்படி தனக்குள் பேசிக் கொண்டே வண்டியை ஓட்டினான். வடிவேலு தன் வழக்கப்படி ஆழ்ந்த சிந்தனையில் இறங்கி விட்டான்.

வழி நெடுகிலும் பக்தர்கள் காத்திருந்தனர். ஏறினவர்களுக் கெல்லாம் டிக்கட்டு கொடுத்தான் வடிவேலு. அவர்களிடமிருந்து பணத்தை எண்ணிப் பெற்றுக் கொண்டான். 'வள்ளிக் கண்ணு'க்களையும், 'முருகப்பா'க்களையும் ஆதரித்தான். ஆனால் அவன் உள்ளத் துக்குள்ளே கொந்தளித்து விவரமறியாத குழப்பத்தை உண்டாக்கும் வேதனை அதன் பாட்டுக்குக் கொதித்துத் தள்ளியது.

பஸ் தன் கடைசி இடத்தை அடைந்து மீண்டும் திரும்பியது. கோட்டை மைதானத்தை நெருங்கும்போது பார்த்தான் வடிவேலு. பொங்கலுக்காக அலங்கரிக்கப்பட்டிருந்த கடைகள் காட்சி அளித்தன. சில குழந்தைகள் மைதானத்தில் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவன் நெஞ்சம் இறுகி வலித்தது. கண்கள் பனித்திரை இட்டுக் கொண்டன. வண்டியில் இருந்த குழந்தைகள் ஆரவாரம் செய்தன. அதைக் கேட்கும் போது மட்டும் அவன் சோக முகத்தில் முறுவல் பூத்தது. அவன் அவர்களுடன் அகமகிழ்ந்தான்.

பஸ் சிமெண்ட் ரோடை விட்டுக் காட்பாடி புது டவுன் ஊடே சென்றது. வீடுகளில் கொண்டாட்டம் தென்பட்டது. வீட்டுக்கு வீடு கோலமும் செம்மண்ணுமாகத் திகழ்ந்தன. குழந்தைகள் புத்தாடை உடுத்து நடமாடினர். ஒரு வீட்டில் கல்யாணம். மேளம் வாசித்தது. அதையெல்லாம் கண்ணுற்றபடியே வடிவேலு மௌனம் சாதித்தான்.

கோவிலில் எல்லா இடங்களும் இலட்ச தீபம்போல் தீபாலங்காரத்துடன் துலங்கின. பிரயாணிகள் இறங்கினதும் வண்டி வேறு சிலரை ஏற்றிக் கொண்டு கிளம்பி விட்டது. மீண்டும் வேலை.

அன்றிரவு வடிவேலு வீடு சென்று உடலுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு, திருநீறிட்டு, முருகன் படத்தின் முன் வணங்கி விட்டுக் கலத்தின் முன் அமர்ந்தான். மற்றக் குடித்தனக்காரர்கள் எல்லோரும் உறங்கி விட்டிருந்தனர்.

"நிறையக் கூட்டமா பஸ்ஸிலே?" என்று கேட்டாள் தேவானை, அவனுக்குச் சோறு படைத்தவண்ணம்.

"அதிகமுமில்லே, குறைவுமில்லே. பரவாயில்லை. விசேஷ பஸ் விட்டதற்குக் கம்பெனிக்கு நஷ்டம் இராது."

"அன்றைக்கு நமக்கென்று எங்கிருந்து கூட்டம் வந்ததோ!" என்று தன் வாழ்வில் நடந்த பழைய துயரத்தை நினைத்துப் பெருமூச்செறிந்தாள் தேவானை.



"அதைப் பற்றி இப்ப என்ன? என்ன செய்வது? ஆண்டவன் மனசை யார் அறிவாங்க? நம்ப லக்ஷ்மி இப்ப யார் வீட்டிலே ராஜாத்தியா வளருகிறதோ? இந்த ஏழைக் குடிசையிலே லக்ஷ்மி இருப்பாளா - நீயே சொல்."

"போதும், உங்க வேதாந்தம்! நீங்கள் படிச்சிருக்கிறதும் பேசறதும் பெரிசாத்தான் இருக்குது. இன்றைக்குவரையெல்லாம் கொண்டாட்டம். எங்கே சிரிப்புக் கேட்டாலும் என் காதைக் குத்துது. எங்கே தண்டை ஓசை கேட்டாலும் என் நெஞ்சிலே வேல் பாயுது."

"வேல்தானே பாயுது? நெஞ்சு ஆறிடும் பார். அது முருகனுடைய ஆயுதமாயிற்றே!"

"வேடிக்கையா செய்யறீங்க? பெற்ற மனசு எப்படித் தவிக்கும் என்று ஆண்பிள்ளைகளுக்கு என்ன தெரியப் போகிறது?" தேவானை முந்தானையால் ஏற்கெனவே சிவந்து வீங்கிக் கிடந்த கண்களைக் கசக்கிப் புண்ணாக்கிக் கொண்டாள்.

"தேவானை! உனக்கு என்ன பைத்தியமா? இப்படியே அழுது அழுது கடைசியிலே என்ன செய்யப் போகிறே! எனக்கு மட்டும் கவலையில்லையா? நீயாவது அக்கம்பக்கத்திலே இருக்கிற இரண்டு, மூன்று குழந்தையைப் பார்க்கிறே. நான் தினம் தினம் எத்தனை குழந்தைகளைப் பார்க்கிறேன், தெரியுமா?"

"அப்படி ஒன்றும் நீங்க கஷ்டப்படுகிறாப் போல் தெரியவில்லையே? என்னவோ 'முருகா' 'வள்ளி'ன்னு காலத்தைச் சிரிக்கவிட்டே தள்ளுகிறீர்களே?"

"உன் தாய் மனசு கஷ்டப்படுகிறது. ஆண்டவன் நமக்குக் கொடுக்காமல் இல்லே. கொடுத்தான். திருப்பி வாங்கிக் கொண்டான். அவன் திருவுள்ளம் எதுவோ? நமக்கு வளர்க்கத் தெரியாது அப்படீன்னு தான் சாமி வாங்கி வளர்க்கிறது."

"உங்க தெளிஞ்ச மனம் எனக்கில்லையே? இன்றைக்குக் கடைத்தெருப் பக்கமாகப் போயிருந்தேன். அங்கே ஒரு குழந்தை நம்ம.....மாதிரியே இருந்தது....." துக்கமும் ஏக்கமும் அவள் நெஞ்சை அடைத்தன.

வடிவேலுவுக்கும் நினைவு வந்தது. தானும் அந்தக் குழந்தையைப் பார்த்துப் பிரமித்ததும், அவர்கள் ஜட்கா ஸ்டாண்டில் இறங்கியதும் அவனுடைய கவனத்துக்கு வந்தன. "நானும் பார்த்தேன்..." என்றான் அவன்.

"அப்படியா? நீங்க அந்தக் குழந்தையோடு பேசினீர்களா? அது ஒரு வேளை நம்ப....?"

"அடி, பைத்தியமே! நம்ப குழந்தை இன்னும் அதே மூன்று வயசும், தூளியிலே கிடப்பதும், ஜொள்ளு சொட்டும் வாயுமாக இருப்பாளா?"

"ஆமாம், அது தோன்றவில்லை எனக்கு." தேவானையின் உற்சாகம் குன்றிவிட்டது.

"தேவானை! நீ கேட்டதில்லையா? ஆண்டவனுடைய பக்தர்களிலே எல்லோருக்கும் சொந்தனேதான். அப்படி நினைச்சுப் பார்த்தால், நமக்குப் பெருமையாக இல்லே?"

"இப்படிப் பேசிவிட்டால் ஆகிவிட்டதா? என் உள்ளக் கொதிப்பு உங்களுக்கு இல்லே. ஒரு குழந்தைக்கு இறையத் தலை வாரணும்னு என் கை குறுகுறுக்குது. அதன் பட்டு உடம்பைத் தடவித் தூங்கப் பண்ணணும்னு உடல் ஏங்குது. அதன் மழலைப் பாட்டைக் கேட்கக் காது துடிக்குது. அதன் நாட்டியத்தைக் காணக் கண் தவிக்குதே!"

"நம்ப தங்கச்சி வீட்டுக் குழந்தைகளுக்குச் செஞ்சு பார்க்கிறது. அவங்க உனக்கும் சொந்தம், எனக்கும் சொந்தம். நாளைக்குக் கூட்டி செந்தாமரையை வேண்டுமானால் அழைத்து வந்து விடுகிறேன்."

"அழைத்து வாங்க, நானும் செய்யறேன். ஆனால் பாருங்க, அழகாக அலங்காரம் செய்து, குஷியாகப் பண்டம் பண்ணிக் கையிலே கொடுத்தால், அது, 'எங்க அம்மாவுக்குக் காட்டுகிறேன்' என்று ஓடி விடுமே!" என்று வாதாடினள் தேவானை.

"எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லே, தேவானை! ஆண்டவனை நம்பு. அது ஒன்றுதான் நான் சொல்லுவேன்."

"நானும்தான் கேட்கிறேன். எப்படித்தான் உண்மையிலே உங்க மனசு நிம்மதியாக இருக்கிறதோ!" என்று கேட்டாள் தேவானை வேதனையுடன்.

வடிவேலு ஒன்றும் பதில் சொல்லவில்லை. பேசாமல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்து தெருப் பக்கம் போய் விட்டான். தேவானை ஆத்திரமும் வேதனையும் கலந்த பார்வையுடன் அவன் செய்கையைக் கவனித்தாள். அவன் திரும்பிப் பாராமலே மௌனமாக வெளியேறியது அவள் இதயத்தைச் சுட்டது. தனிமையில் எண்ணமிட்டு எண்ணமிட்டு அவள் மூளையும் களைத்துக் கனத்தது. சோற்றுப் பானையை எடுத்து மூடிவிட்டு அவள் பட்டினியாகக் கட்டாந்தரையில் படுத்து விட்டாள்.

அவளுக்கு இப்பொழுது புது பயம் ஒன்று பிடித்துக் கொண்டது. முன்பு இரண்டு முறை வடிவேலு சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடி விட்டிருக்கிறான். வீட்டில் ஒவ்வொரு கஷ்டம் நேர்ந்த பிறகும், இது போல் நைந்த நாட்களில் எதிலும் ஒன்ற முடியாமல் தவித்து அவன் கண் மறைவாகப் போய் விடுவான்.

ஒரு சமயம் அவன் திருத்தணிகைக் கோயிலில் ஆண்டியாகிவிடத் துணிந்தான். எப்படியோ திரும்பினான். ஒரு முறை வெறும் தண்ணீர் குடித்துக்கொண்டு திருவண்ணாமலை குன்றைச் சுற்றிச் சுற்றி வலம் வந்தான். கால் சோர்ந்து விழும் வரையில் வலம் வருவதாக இருந்தவன் எப்படியோ திரும்பி வந்தான்.

இன்று அவன் போன மாதிரியிலிருந்து தேவானையின் அடிவயிற்றில் 'கபீர்' என்றது. "ஏன் தான் அந்தக் கேள்வி கேட்டேனோ!" என்று அவள் தன்னையே மீண்டும் மீண்டும் நொந்து கொண்டாள்.

தான் கேட்ட அந்தக் கேள்வி மிகவும் விபரீதமாக அவளுக்கு இப்பொழுது தோன்றியது. அவனும் அமைதியின்றி அல்லற்படுகிறான் என்பதை அவள் அறிவாள். ஆனாலும் அவன் அப்படி ஒன்றும் கூறாமல் எழுந்து போய் விட்டது அவளைச் சித்திரவதை செய்து விட்டது.

"மனசுக்குத்தான் தெரிஞ்சுதே, ஏன் கேட்டேனோ? காதுக்குத் தெரிய வேண்டுமா? ஐயோ, பேதையே!" என்று தேம்பிப் புலம்பினாள் தேவானை.

அதன் பிறகு அவளால் தனியாக இருக்க முடியவில்லை. கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு அவள் வெளிக்கிளம்பி விட்டாள். வாசல் திண்ணையில் படுத்திருந்த அடுத்த வீட்டு ஆயாள், "தேவானை, நீயா?" என்று கேட்டாள். 'போகும்போதே இப்படிக் கேட்கிறீங்களே?' என்று நினைத்தாள் தேவானை. ஆனால் "ஆமாம், ஆயா! சித்தப்பா வீட்டுக்கு வரச் சொன்னாங்க" என்று பதிலளித்து விட்டுக் கிளம்பினாள்.

அவள் பாதி வழிகூடப் போயிருக்கமாட்டாள். எதிரே தங்கவேலு வந்து கொண்டிருந்தான். "தேவானை!" என்று அவன் விளித்தவுடன்தான் அவள் கவனித்தாள். "சித்தப்பா!" என்றாள்.

"நானே உன்னை அழைத்துக்கொண்டு போகத்தான் வந்தேன். உங்க சின்னம்மா அனுப்பி வைச்சது. மருமகப் பிள்ளை, ஆளிப் பொண்ணு எல்லாம் வருகிறார்களாம். அதிரசம் சுடணுமாம், அரிசி மாவு ஆட்டணுமாம்... நீ இல்லாமே நடக்குமா?"



"நீங்களெல்லாம் கவர்ன்மெண்டை 'சப்போர்ட்' செய்யணும், சார்!"

"கிடைக்கிற சம்பளத்திலே ஏழு குழந்தைகளையும் 'சப்போர்ட்' பண்ணி, கவர்ன்மெண்டை வேறு எப்படி சார் 'சப்போர்ட்' பண்றது?"

"நானேதான் வருகிறேனே!"

"தம்பி தனியாகவா வீட்டிலே இருக்குது?" என்று கேட்டான் தங்கவேலு.

தேவானையின் இடுக்கிட்டுப் போன முகம் தெரு விளக்கின் வெளிச்சத்தில் தெள்ளெனத் தெரிந்தது. தங்கவேலு ஒரு கணம் யோசித்தான். பிறகு "இரவு டூட்டிக்குப் போகணுமே, போறானோ?" என்று கேட்டான்.

"வேலை இருக்குதா!" என்று கேட்கும் போது தேவானையின் குரல் பரிதாபமாக இருந்தது. உயிரின் ஆசையே விட்டு விட்ட ஒரு நோயாளியிடம் பிழைப்பதற்கு வழி உண்டு என்று கூறினால் என்ன தீவிரம், நம்பிக்கையின்மை, ஆவல், நிராசை எல்லாம் இருக்குமோ அத்தனையும் அவள் குரலில் குடி கொண்டு விட்டன.

"ஆமாம்! எனக்குக்கூட இருக்குது. கம்பெனியிலே ரிப்பேர் வேலை நடக்குது" என்றான் தங்கவேலு.

தேவானை நிம்மதியுடன் பெருமூச்சு ஒன்று விட்டுக் கொண்டாள். அந்த மூச்சுடன் அவள் பலவீனமெல்லாம் பறந்தோடி விட்டது போலும். தன் சிற்றப்பனுக்குச் சமமாக நடை போட்டுக் கொண்டு அவள் வேகமாக நடந்து சென்றாள்.

தங்கவேலுவின் வீட்டில் யாவரும் தேவானையைச் சூழ்ந்து கொண்டுவிட்டனர். குழந்தைகள் அவளிடம் கொஞ்சிக் குலாவின. தங்கவேலுவின் மனைவி அவளிடம் குடும்ப விவகாரம் பேசினாள். அவளுக்குத் தன் சொந்த விஷயமோ, கவலையோ ஒன்றும் தோன்றவில்லை. தங்கவேலு உடை அணிந்து கொண்டு தன் மனைவியிடம் கூறிவிட்டு வெளியே சென்று விட்டான்.

அன்று முழுதும் வடிவேலு வீடு வரவில்லை. தேவானையின் இதயம் இழுத்து இழுத்துத் தப்புத் தாளம் போட்டது.

தங்கவேலுவின் வீட்டில் விருந்தோம்பல் நடந்தது. தேவானைக்கும் வேலை சரியாக இருந்தது. தன்னுடைய கவலையை வெளிக்

காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்கு அவன் அரும்பாடு பட்டாள்.

மாலை நேரமும் வந்து விட்டது. தேவானை மட்டும் யாரிடமும் கலந்து பகிர்ந்துகொள்ள முடியாத தனிமையில் துடித்தாள். கடைசியில் அவளாலும் பொறுக்க முடியாமல் போய் விட்ட பிறகு, தங்கவேலுவிடம் கேட்டுக் கொண்டு காங்கேயநல்லூருக்குக் கிளம்பினாள். தங்கவேலுவும் கூடவே வந்தான்.

அவர்கள் ஐயன் சன்னிதியில் நுழைந்தது தான் தாமதம்; எதிரிலேயே வடிவேலுவைக் கண்டார்கள். கொடிமரத்தின் அருகில் நின்ற அவன் திருப்புகழ் ஒன்றை மெய்ம் மறந்து பாடி நின்றான். அவன் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்தது. தேவானை அவன் அருகில் போய் நின்றாள்.

"வடிவேலு!" என்று தங்கவேலு அன்புடன் அழைத்தான்.

வடிவேலு கண்களைத் திறந்து பார்த்தான். தேவானை 'பொத்'தென்று அவன் காலில் விழுந்து விட்டாள்.

"எழுந்திரு, தேவானை! என் காலிலே விழாதே. இதோ இந்தப் பெரியவர் காலிலே விழு" என்று கூறி வடிவேலு அருகில் இருந்த பெரியவரைக் காட்டினான். ஏன், எங்கே, எதற்கு என்று கேட்கவில்லை தேவானை. கணவன் சொன்ன இடத்தில் விழுந்து அவள் கும்பிட்டாள்.

"வேலாயுதம்! வேலாயுதம்! என்னங்க இது!" என்று அந்தக் கிழவர் சங்கோசத்துடன் தடுமாறினார். அவர் குரலும் புரிபடாமல் மழுங்கியிருந்தது.

தங்கவேலுவும் அந்தப் பெரியவரை வணங்கினான். "யார் இந்தப் பெரியவர்?" என்று மெதுவாகக் கேட்டான்.

"இவர் கையைப் பார், அண்ணாத்தே! பூக கட்டிக் கட்டிக் கை நன்கு காய்த்து விட்டது. நாக்கைப் பார். நாயகன் நாமம் பயின்று பயின்று தடித்து விட்டது. இந்த உலகத்து ருசி ஒன்றும் அதில் தெரியாது. இவரை விடப் பெரியார் யார்? 'குமரா, குகனே, கதிர்வேல் முருகா!' என்று அவன் திருநாமத்தை உச்சரித்த வண்ணம் பூத் தொடுத்துப் போடுகிறார். பக்தி செய்ய வழி தெரியவில்லையே என்று கதறினேன் நான். வாழ்க்கை நடத்த வெளிச்சம் காணேனே என்று புலம்பினேன். அப்பொழுது கர்ப்பக் கிருகக் குத்து விளக்கில் திடீரென்று ஓர் ஒளி வீசியது. 'சாமி, இந்தாங்க மாலை!' என்று ஒரு குரல் கேட்டது. திரும்பினேன். இவர் நின்று கொண்டிருந்தார். ஆண்டவனின் முகத்தைப் பார்த்தேன். அப்பொழுது...அப்பொழுது....முருகன்...என் அப்பன் முகத்திலே ஒரு புன்சிரிப்பு பூத்தது. அண்ணாத்தே, என்ன சொல்வேன்!" வடிவேலுவின் குரலில் நடுக்கம் கண்டு விட்டது.

"பிறகு?..." என்று சாவதானமாகக் கேட்டான் தங்கவேலு.

"பிறகு என்ன! அன்றைக்கு அன்னை வள்ளிக்குக் கிழக் கோலத்திலே தரிசனம் கொடுத்த முருகனே இன்றைக்கு என்னை அழைத்தமாதிரி நினைத்து இவர் பின்னாலேயே போனேன். அவர் காலடியில் விழுந்து சேவித்தேன். ஆனால் அவர் என்னை ஏற்றுக் கொண்டாரா இல்லையா?"

வடிவேலு தங்கவேலுவைப் பார்த்தான். தங்கவேலுவை அணைத்துக் கொண்டான்.

"வடிவேலு! நீங்க இரண்டு பேரும் வாங்க வீட்டுக்கு. பண்டிகை..." என்று ஆரம்பித்த தங்கவேலு பேச்சை முடிப்பதற்குள் ஒரே குரலில் புருஷனும் மனைவியும், "நாங்க இனி இங்கேதான்" என்றார்கள்.

தங்கவேலு தன் ஈரக் கண்களுடன் ஆமோதித்து விட்டுத் தன் வீடு திரும்பினான்.

கூட்டத்தில் யாரோ, "அந்தப் பூப்பண்டாரம் காலிலே விழுந்து கும்பிட்டாங்க. மூளை கலங்கிடுச்சி போல் இருக்குது. சொந்தக்காரர் வந்து அழுது விட்டுப் போறாரு" என்று பேசிக் கொண்டார்கள்.

*　　*　　*

அவர்களா மூளை கலங்கினவர்கள்? நான் அல்லவா குழம்பி நிற்கிறேன், கழுத்தளவு பாசச் சகதியில்!

ஒருநாள் மீண்டும் சென்று அவர்களை அழைத்தேன். "வடிவேலு! தேவானை! நேற்று நான் ஆறுமுகம் பண்டாரத்தினிடம் குறி கேட்டேன். நம்ப லக்ஷ்மி இன்னும் ஒரு வாரத்திலே கிடைத்து விடுமாம். வாங்க வீட்டுக்கு, வாங்க" என்று கூப்பிட்டேன்.

"வேண்டாம், நாங்கள் வரவில்லை. தெளிவு பெற்ற பிறகு மீண்டும் இருட்டுக்குப் போவார்களா? குழந்தை கிடைத்தாலும் எங்களுக்கு வைத்துக் கொள்ளத் தெரியாது. நீங்களே அவளை வளர்க்க வேண்டும்" என்றார்கள்.

அவர்கள் மனத்தின் மாண்பைக் கண்டு கண்ணீர் கசிய நான் திரும்பி விட்டேன்.

அந்தக் கிழவனைக் கண்டபோது கேவலம், ஒரு மனிதனைப் பார்க்கவில்லை வடிவேலு. ஆண்டவனின் திருநாமத்தை உச்சரித்து, உச்சரித்து, பாமாலை பாடி நாத் தடித்த ஆழ்வார்களின் வரிசையையும், உழவாரம் ஏந்தித் திருப்பணிசெய்து தழும்பேறிய நாயன்மார்களின் பரம்பரையையுமே கண்டான்.

நானும்தான் அவனோடு குழந்தைப் பருவம் முதல் ஒன்றிப் பழகினேன். ஆனால் சம்சார பந்தத்தில் உழலுகிறேன். அன்றாடம் வயிறு முட்டச் சாப்பிடுபவன் விருந்து கிடைக்கவில்லையே என்று ஏங்குவதுபோல் நான் பணத்துக்கும் வசதிக்கும் ஏங்கிப் பொருமுகிறேன். அவனோ பசியால் வாடுபவன் திருப்தியாக இருப்பது போல் இருக்கிறான்.

நான் அவன் கண்ட காட்சியைக் காணவில்லை. வாகினி அம்மையையும் நளாயினியையும் காணவில்லை. வடிவேலுவையும் தேவானையையும் மட்டுமே கண்டேன். ஆனால், "அதனால் என்ன? ஒரு நாள் முருகனின் அந்தப் புன்முறுவலை நீயும் காண்பாயடா, தங்கவேலு!" என்று என்னுள் ஒரு குரல் கூவுகிறது.

என் இதயத்தில் அந்த வெளிச்சம் நிறைந்து விட்டது. ஆயினும், வடிவேலுவின் துணையின்றி, பஸ் வண்டியைத்தான் இனி எப்படி ஓட்டுவேனோ, வாழ்க்கைச் சகடத்தைத்தான் எப்படி உந்துவேனோ!

அன்னையின் மடியிலே!

எஸ். ரங்கநாயகி

ராதையும் அதிரதனும் மகனின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருந்தனர். அவன் வந்தபிறகு அவனுக்குத் தன் கையினால் அன்னமிட்டு விட்டுப் பிறகுதான் ராதை உணவருந்துவாள். அதிரதனும் மகன் பக்கத்திலிருக்க, தன் உணவை உட்கொள்ளுவான். அங்க தேசத்து அரசனாக அமர்ந்து விட்ட போதும் கர்ணன் இன்னமும் அவ்விருவரிடமும் மாறாத அன்பு கொண்டிருந்தான். அவர்கள் வரை அவன் புத்திரனே. 'ராதேயா' என்று அழைப்பதில் அதிரதனுக்கு எல்லையற்ற ஆனந்தம்.

"ஏன் இன்னும் நம் மகன் வரவில்லை? நம் கையினால் கொடுக்கும் ஒரு பிடி அன்னத்தை உண்டபிறகு தானே அவன் அரண்மனைக்குச் செல்வது வழக்கம்?" என்று தவித்து விட்டாள் ராதை.

"வருவான், ராதை! அவன் வராமல் நான் சாப்பிடமாட்டேன் என்று அவனுக்குத் தெரியும்" என்று அவளைத் தேற்றினான் அதிரதன்.


"நம் மகன், நம் மகன் என்று பெரும் பாத்தியமாகத்தான் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். பாவம், பெற்றெடுத்த தாய் எங்கு தவித்துக் கொண்டிருக்கிறாளோ?"

"ஏன் அந்நினைவு கொண்டு மனத்தை அலட்டிக் கொள்கிறாய், ராதை!" அதிரதனுக்கு இவ்வாறு ராதை அனாவசியமாக மனத்தை அலட்டிக் கொள்வது சிறிதும் பிடிக்கவில்லை.

"நான் என்னைப்பற்றிக் கூறவில்லையே! தாய்ப்பாசம் உங்களுக்குத் தெரியாது. எந்தச் சூழ்நிலையில் சின்னஞ்சிறு குழந்தையை நதியில் விட்டுப் போகத் தோன்றியதோ...பாவம், இப்பொழுது எப்படியெல்லாம் அல்லாடுகிறாளோ!"

கடந்த கால நினைவுகள் அலை அலையாக ராதையின் உள்ளத்தை மோதின.

அதேசமயம் கர்ணன் உள்ளே நுழைந்தான். "ராதேயா!" என்று அழைத்தான் அதிரதன். கணவன் விளித்ததைக் கேட்டு ராதை திரும்பி நோக்கினாள். கர்ணன்



தலைகுனிந்தபடி நின்று கொண்டிருந்தான். முகத்தில் பிரகாசம் இல்லை.

"ராதேயா..." என்று அதிரதன் ஆரம்பித்தபோது, கர்ணன், "வேண்டாம், கர்ணன் என்றே கூப்பிடுங்கள்" என்றான்.

அதிரதன் திடுக்கிட்டான். இதுவரை இவ்விதம் கூறாத மகன் ஏன் இவ்வாறு கூறுகிறான்? "ஏன் அப்பா இவ்விதம் கூறுகிறாய்!" என்று கேட்டான்.

கர்ணன் பதில் கூறுவதற்குமுன் ராதை பதில் கூறினாள். கர்ணனின் பிறப்பில் அவளுக்கு ஒரு சந்தேகம். "ஏன் கேள்விகள் கேட்டுத் தொந்தரவு கொடுக்கிறீர்கள்? அலுத்துப் போய் வந்திருக்கிறான் அவன். அரண்மனையில் எவ்வளவு தொல்லைகளோ...அப்பா கர்ணா! சற்று இளைப்பாறிக் கொள். பிறகு சாப்பிடலாம்."

ராதையின் அன்புமொழிகள் கர்ணனின் உள்ளத்தை உலுக்கி எடுத்தன. 'ஏன் இவர்கள் இவ்வளவு அன்பு செலுத்த வேண்டும்? அப்பொழுதே என்னை நிர்க்கதியாக விட்டிருக்கக் கூடாதா?' மனத்தில் எழும்பிய சுழல் முகத்தில் பிரதிபலித்தது. பெண் மனம் இதைக் கவனித்துப் புரிந்து கொண்டது. அதிரதனுக்கு ஒன்றும் புரியவில்லை.

கர்ணன் இளைப்பாறி விட்டுக் கைகால் கழுவிக் கொண்டு வந்ததும் ராதை, இரண்டு கவளங்கள் அவன் கையில் வைத்தாள். தினமும் இந்த இரு கவளத்துக்காகவே ராதையைத் தேடி வருவான் கர்ணன். ஆனந்தத்துடன் அள்ளிப் புசிப்பான். இன்றும் வழக்கம் போல் வந்தான். ஆயினும், ஆனந்தம் எங்கோ விடைபெற்றுச் சென்று விட்டது! அதிரதனும் அவன் சாப்பிட்ட பிறகு சாப்பிட்டான். மலர்ச்சியடையா மகன் முகம் கண்டு அவனுக்கும் அன்னம் கசந்தது. பெயரளவுக்குச் சாப்பிட்டு விட்டு எழுந்தான்.

"கர்ணா!"

கர்ணன் நிமிர்ந்து நோக்கினான்.

"ஏனப்பா, என்ன வேதனை உனக்கு?" தலையைத் தடவிக் கொடுத்தபடியே ராதை கேட்டாள்.

"ஒன்றுமில்லை!" தொண்டை அடைக்கப் பதில் வந்தது.

"கர்ணா, என்னிடம் மறைக்காதே, அப்பா! நான் பெண். உன்னை வளர்த்தவள், உன் வேதனையை நான் அறிவேன்."

கர்ணன் திடுக்கிட்டான். "என்னது? நீங்கள் அறிவீர்களா?"

"தெரியும். நீ இன்று ஒரு புது முகத்தைத் தரிசித்திருக்கிறாய்."

"புது முகம் இல்லை. பழைய முகத்தில் புது விஷயம். என் உள்ளத்தைக் கிடுகிடுக்கவைத்தவிஷயம். நீங்கள் மறைத்து வைத்த இரகசியம் இப்பொழுது வெட்ட வெளிச்சமாகி விட்டது."

"நானும் இதை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன், கர்ணா! ஆயினும் சமயம்வரும்போது தன்னால் தெரியட்டும் என்றுதான் மௌனமாக இருந்து விட்டேன். உன் தந்தைமட்டும் இந்த ரகசியம் வெளிப்படாது என்ற நம்பிக்கையில் இருந்து விட்டார்...கிடக்கட்டும், நீ சந்தித்த பாக்கியவதி யாரப்பா?"

"அவளை நாம் யாவரும் அறிவோம், அம்மா! எனக்குப் பரம வைரியான அர்ச்சுனனின் தாய் குந்தி தேவிதான் என் தாயாம். இன்று காலை நான் ஜபம் செய்து கொண்டிருந்த நேரத்தில் இந்த உண்மையை அவள் வெளியிட்டாள்...... ஆனால் அம்மா எனக்கு ஒரு சந்தேகம்! ஒரு தாயின் வயிற்றில் உதித்த நாங்கள் இருவரும் எப்படிப் பகை மனப்பான்மை கொண்டுள்ளோம்?"

"என்ன? குந்தி பெற்ற மகனா நீ?" ராதை ஆச்சரியத்துடன் வினவினாள்.

"ஆமாம்! அப்படித்தான் கூறினார் மகாராணி. அதனால்தான் பாண்டவர்களுடன் யுத்தம் செய்யாமல் அவர்களுடன் ஒற்றுமையாக இருக்கக் கூறினார்......"

"நீ என்ன கூறினாய், அப்பா?"

"அம்மா! நான் உண்ட வீட்டுக்கு இரண்டு நினைக்க விரும்பவில்லை. அதனால் மகாராணியின் வேண்டுகோளை நிராகரித்துவிட்டேன். ஆயினும் அர்ச்சுனனைத் தவிர மற்ற நால்வருக்கும் உயிர்ப்பிச்சை தருவதாகச் சபதம் செய்து கொடுத்து விட்டேன்."

"ஏனப்பா! பெற்ற தாயிடம் நீ ஒன்றும் கேட்கவில்லையா?"

"வாதம், எதற்கு அம்மா? என்னைச் சந்தியில் விட்டுவிட்டுப் போனவரிடம் என்ன கேட்க முடியும்?"

"கர்ணா! துரியோதனாதிகளுடன் சேர்ந்து பழகிப் பழகி உனக்கும் துடுக்கான பேச்சுக் கிளம்பி விட்டதோ?" ராதை சற்றுக் கோபித்தாள். கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்கத் தவற மாட்டாள் அவள்.

"அம்மா! கோபிக்காதீர்கள்...நீங்கள் எடுத்து என்னை வளர்த்திருக்கா விட்டால் என் கதி என்ன ஆகியிருக்கும், சற்று யோசித்துப் பாருங்கள்."

"கர்ணா! உன்னைப் பெற்றவள் பெருமைக்குகந்தவள். சூழ்நிலை காரணமாக விட்டுவிட்டுச் சென்றிருக்கிறாள். இல்லாவிடில் கவச, குண்டலங்களுடன் தேஜோமயமாகப் பிறந்த குழந்தையை ஒரு தாயும் விட்டுச் செல்ல மாட்டாள்......போனது போகட்டும், தாய்க்கு ஆற்ற வேண்டிய கடமை ஒன்று உனக்கும் உண்டு."

"அதில் குறை வைக்கவில்லையே நான். பாண்டவர்களில் நால்வருக்கு நான் உயிர்ப்பிச்சை அளித்து விட்டேன்......"

"கர்ணா! தாயின் மனம் உனக்குத் தெரியாது. உன்னை நினைத்து நினைத்து உள்ளம் உருகிக் கொண்டிருப்பார் மகாராணி. தாய்க்கு இன்பம் அளிக்கும் வகையில் நீ ஒரு உதவி புரிய வேண்டும். மகாராணியின் குறை ஒன்றைத் தீர்த்து நீ அவருக்கு மகன் என்று நினைவுபடுத்திக்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்......"

"என்னம்மா சொல்லுகிறீர்கள்?"

ராதை அவன் காதோடு கூறினாள். கர்ணன் திடுக்கிட்டான். "அம்மா! இது நடக்காத காரியம்" என்று கத்தினான்.

"நீ விரும்பினால் நடக்காததும் ஒன்று உண்டோ? கடைசியில் நீயே விரும்பி இதைச் செய்வாயடா. மகனே! தாயை விரும்பாத மைந்தர், தனயனை விரும்பாத தாயும் எங்கேனும் உண்டோ?"

கர்ணன் ஆட்சேபணை, சமாதானங்கள் செய்தான். ராதை ஒன்றையும் காதில் ஏற்றுக் கொள்ளவில்லை. கர்ணன் அவ்விதமாகச் செய்வதாக வாக்களித்ததும் தான் அவள் நிம்மதி அடைந்தாள்.

"அம்மா! துரியோதனனுடைய உப்பைச் சாப்பிடுவதால்அவருக்குக் கடமைப் பட்டு யுத்தத்தில் உதவுவதாக வாக்களித்தேன். பெற்ற தாயாதலால் மகாராணியிடமும் தாங்கள் கூறிய கடமையைச் செய்வதாக வாக்களித்தேன்......ஆயினும் சிசுப் பருவத்திலிருந்து அன்புடன் அரவணைத்து வளர்த்து வீரனாக்கிய தங்கள் வரை என் கடமை ஒன்றும் நிறைவேற வில்லையே! அம்மா! தாங்கள் எதை விரும்புகிறீர்களோ, அதைக் கேளுங்களம்மா!" கர்ணன் ராதையின் கையைப் பற்றியபடி கேட்டான்.

ராதை மெள்ளச் சிரித்தாள். "கர்ணா! நான் உன்னைக் கொண்டு திருப்தி அடையவே விரும்புகிறேன். எனக்குச் செய்ய வேண்டிய கடமை ஏதேனும் செய்ய விரும்பினால் ஒன்றுசெய். என்றும்போல் இங்கு வந்து, இரு கவளங்கள் அன்னம் உண்டு விட்டுப் போப்பா......மற்றொரு விஷயம், உன் பிறப்புபற்றிய விஷயம். உன்னைத் தன் மகனாகவே நேசிக்கும் என் கணவருக்குத் தெரிவதை நான் விரும்பவில்லை. அவர் மனம் குன்றிப்போய் விடுவார். ஆகையால் அவர் "ராதேயா!" என்று அன்புடன் கூப்பிடும்போது மனம் கோணாமல் ஏன் என்று கேட்க வேண்டும். கணவர் சுகத்திலேயே நான் யாவற்றையும் அர்ப்பணம் செய்ய விரும்புகிறேன்" என்றாள் ராதை.



அவளுடைய உள்ளத்தின் உயர்வைக் கண்டு நெகிழ்ந்து விட்டான் கர்ணன்.

அன்று இரவு. அனைவரும் நித்திரைக்குச் சென்று விட்டபிறகு குந்தி மட்டும் நித்திரை கொள்ளாமல் தவித்துக் கிடந்தாள். அவளுடைய நெஞ்சு விம்மிக் கொண்டிருந்தது. அருமையான மகனைப் பெற்று விட்டுக் குப்பையில் எறிவது போல் எறிந்து விட்டு வந்து விட்டாள். அந்தக் குப்பையில் வளர்ந்த மாணிக்கம், இன்று அவள் வார்த்தைக்குச் செவி சாய்த்து அவள் புத்திரர்களின் உயிருக்கு அபயதானம் அளித்து விட்டான். அவளுக்கு அவள் வயிற்றில் உதித்த மூத்த புத்திரனின் உயிர் வேண்டியதில்லையோ, அவன் அலட்சியப் பண்டமோ! மனச் சாட்சிக்குப் பதில் கூறி முடியாமல் தவித்து விட்டாள் குந்தி. புத்திர பாசம் மெள்ள மெள்ளத் தலைதூக்கியது. 'கர்ணா! என் மகனே!' என்று உள்ளம் தவிப்போடு கூப்பாடு போட்டது.

இந் நேரத்தில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. குந்தி திடுக்கிட்டாள். யார் இந்த வேளையில்? மெள்ள மெள்ளச் சென்று கதவைத் திறந்தாள்.

"ஆ மகனே! நீயா?" குந்தி ஓடிச் சென்று அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பில் ராதையின் கட்டளையை நிறைவேற்ற வந்த கர்ணனும் திடுக்கிட்டு விட்டான். 'மகனே!' என்ற ஒரு சொல்லில் ஒரு இன்ப உணர்ச்சியும் தலைதூக்கியதை அவன் உணர்ந்தான்.

"அம்மா!"

ஆகா! இன்பத் தேன் வந்து பாய்கிறதே! குந்தி உள்ளம் உவந்தாள். என்றும் காணாத இன்பம் கண்டாள்.

மகனை அணைத்தபடியே சற்றுக் கண்ணீர் உகுத்தாள் குந்தி.

"அம்மா! நான் தினம் ஒரு முறை ஒருவருக்கும் தெரியாமல் இங்கு வந்து தங்களைத் தரிசிப்பதில் தங்களுக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லையல்லவா?" என்று கர்ணன் மெதுவாகக் கேட்டான். ராதையின் உத்தரவு அது.

"ஐயோ, கர்ணா! என்னைப் பரீட்சிக்காதே! நான் மகா பாவி. என் நெஞ்சு கிடந்து துடிக்கிறது. நான் உனக்குக் கொடுமை இழைத்து விட்டேன். 'அம்மா!' என்று அழைத்து என் தாபத்தை அதிகரித்து விட்டாய். இனி நீ என்னுடனேயே இருந்து விடு. நீ என் மகன் என்று பறை சாற்றிவிடு. கர்ணா, வேண்டாம், நீ எங்கேயும் போய் விடாதே! என்னுடனேயே இரு" என்று குந்தி நெஞ்சு துடிக்கக் கூறினாள்.

"அம்மா! மன்னிக்க வேண்டும். என்னால் தகாத காரியம் அது!" என்றான் கர்ணன் வேதனையுடன்.

சற்று நேரம் பேசுவதறியாது உள்ளக் கிளர்ச்சியில் தாயும் மகனும் தவித்தனர். பிறகு கர்ணன், "அம்மா! இன்று நான் இங்கு சற்று இளைப்பாறி விட்டுச் செல்லலாம் அல்லவா?" என்று கேட்டான்.

"உனக்கில்லாத இடமாடா மகனே!" என்று கூறிய குந்தி சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு, "கர்ணா! என் விருப்பம் ஒன்றை நிறைவேற்றுவாயா? இங்கு தலைக்கு வைத்துக் கொள்ளக்கூடிய சாதனம் இல்லை. என் மடியிலேயே இளைப்பாறிச் செல்வாயா? இந்த ஒரு ஆனந்தமாவது எனக்குக் கிட்டினால் என் ஜன்மம் சாபல்யமடையும். வாடா, மகனே!" என்றாள் கெஞ்சும் குரலில்.

கர்ணன் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது. ராதை கூறியது உண்மையாக

இருக்கிறதே! 'ஒரு தாய் தன் மகனுக்கு இளைப்பாற முதலில் தன் மடியைக் காட்டுவாள். அதிலிருந்து அவள் பெற்றெடுத்த தாய் என்பதை அறிந்துகொள்ளலாம்' என்றாள் ராதை. இனி சந்தேகமில்லை. குந்தி அவன் தாய். அர்ச்சுனன் போன்ற சகோதரர்களுக்குள் பகைமை இருப்பது உலக இயல்பு போலும்!

பெற்றெடுத்த தாயின் விருப்பத்தை ஈடேற்றி விட்டு வெளியே வந்தான் கர்ணன். அவன் மனத்திலும் அவனையறியாமல் ஒரு இன்ப உணர்ச்சி பெருகியோடியது. ஓடோடி ராதையிடம் சென்றான். அவன் கூறியதைக் கேட்டு ராதையும் ஆனந்தம் கொண்டாள்.

ரணகளத்தில் கர்ணன் மாண்டதும், துரியோதனன் ஆறாத் துயர் அடைந்தான். அந்தத் துயரின் கடுவிலும் தன் நண்பனுக்குச் சகல மரியாதைகளையும் செய்து ஸம்ஸ்காரம் செய்ய அவன் விரும்பினான். ஆகையால் அவன் தேகத்தை உயர்ந்ததொரு இடத்தில் வைத்து விட்டு, மறுநாள் பொழுது விடிந்ததும் ஆடம்பரமாக அந்திம மரியாதைகளைச் செய்ய உத்தரவிட்டான்.

நடு இரவு. குந்தி சோகமே உருவாகத் தள்ளாடித் தள்ளாடிக் கர்ணனின் சடலத்தை வைத்திருந்த இடத்துக்கு மறைந்து சென்றாள். சடலத்தின் அருகில் சென்று மகனின் சாந்தம் ததும்பும் முகத்தை நோக்கினாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வரவில்லை. அவள் நெஞ்சு மட்டும் துடித்தது. அதே நேரத்தில் அங்கு வந்த ராதையை அவள் கவனிக்கக்கூட இல்லை. மகாராணியின் நிலையைக் கண்டு ராதை பச்சாத்தாபம் அடைந்தாள். இந்த நிலையில் மகாராணியை விட்டு வைத்தால் அவள் உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்தாள். கர்ணனைப் பற்றி ஒரு வார்த்தையாவது கூறி நெஞ்சை அடைத்துக் கிடக்கும் கண்ணீரை வெளிவரச் செய்ய வேண்டும்.

"அம்மா! கர்ணன் தங்களைப் பற்றிக் கூறாத நாள் கிடையாது. அவனை மகனாகப் பெற்றெடுத்த தாங்கள் பாக்கியவதி" என்றாள் ராதை.

"ஐயோ கர்ணா!" பெரிய ஓலத்துடன் குந்தி கர்ணன் சடலத்தின்மீது விழுந்தாள்.

சட்டென்று அவள் வாயைப் பொத்தினாள் ராதை. "மகாராணி! தாங்கள் இங்கு வந்திருப்பது வெளியாருக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் பல கேடுகள் விளையக் கூடும்"

"ஐயோ, ராதை! நான் மகாபாவி. மகனின் மரணத்துக்கு நான்தான் காரணம்" என்று துடித்தாள் குந்தி.

"இல்லை, அம்மா! மகனின் புகழுக்கு நீங்கள்தான் காரணம். தன் உயிரைக் கொடுத்தாவது சகோதரர்களின் உயிரைக் காப்பாற்றினான் கர்ணன் என்ற புகழை அளித்தது தாங்கள்தான். இந்திரனும் அவனிடம் யாசகம் கேட்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியதும் தாங்கள்தான். தாய் ஒதுக்கித் தள்ளியிருந்தும், அவனைப் பேரன்புடன் 'அம்மா' என்று அழைத்து அவள் மடியில் படுத்து உறங்கி அவனுக்கு ஆனந்தம் கொடுத்த பெருமையை அடைய வைத்ததும் தாங்கள்தான். மகாராணி! நீங்களே யோசித்துப் பாருங்கள். இம் மாபெரும் புகழ்ச்சியை உங்கள் மற்ற புத்திரர்கள் அடையவில்லை. கர்ணன் அமர கதியை அடைந்து விட்டான். அதுவே கம் வரையில் போதும்."

"ராதை! நீ என்ன சொன்னாலும் என் மனம் சாந்தி அடையாது. கர்ணனுக்கு நான் ஒன்றுமே செய்யவில்லை." குந்தி மீண்டும் புலம்பினாள்.

"இப்பொழுது நினைத்தாலும் நீங்கள் அவன் நினைவாக ஒன்று செய்யலாம்."

"என்ன சொல்லுகிறாய், ராதை?"

"கர்ணனுடைய தலையைத் தாங்கிய மடியை இனி வேறு ஒரு மகனுக்கும் அளிக்காமல் இருக்கலாமல்லவா? தாயிடமிருந்து குழந்தைகள் அன்பும் அரவணைப்பும்தானே எதிர்பார்ப்பார்கள்? இந்த ஒரு சலுகைமட்டும் கர்ணனைத்தவிர வேறு ஒருவருக்கும் கிடைக்காமல் இருக்கட்டுமே!" ராதை மெள்ள மெள்ளக் கூறினாள்.

குந்தி சற்று யோசித்தாள். இதை நிறைவேற்றுவது சற்றுக் கஷ்டம்தான். இவ்வளவு நாட்களாக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் புத்திரர்கள் வெற்றிக்குப் பிறகு அம்மாவைத் தேடிவருவார்கள். எவ்வளவு வயதானாலும் அம்மாவின் மடியில் சற்றுப் படுத்துறங்கப் பீமனுக்கு கப்பாசை.

குந்தி கடைசியில் நிச்சயப்படுத்திக் கொண்டாள். கர்ணனுக்கு மட்டும் இந்த ஒரு சலுகையை ஒதுக்கி விடுவதற்கு நிச்சயித்தாள்.

"அம்மா! மேலும் ஒரு விஷயம். கர்ணன் தங்களைத் தரிசிக்க வந்ததோ, அல்லது தாங்கள் இங்கு செய்து கொண்டிருக்கும் பிரதிக்ஞையோ ஒருவருக்கும் தெரியக் கூடாது. என் மரணம் வரையில் அவன் என் புத்திரனாக இருக்க வேண்டும்" என்றாள் ராதை. குந்தி அவளை அதிசயத்துடன் நோக்கினாள்.

கர்ணன் இறந்த சில நாட்களுக்கெல்லாம் ராதையும் அதிரதனும் சென்ற இடம் தெரியவில்லை. குந்தி தன் சபதத்தை நிறைவேற்றக் காந்தாரியுடன் வனம் ஏகினாள். அங்கு புத்திரர்கள் யாரும் வரமாட்டார்கள் என்று அவள் அறிந்ததே. கர்ணனுடைய பிறப்பு தெரிந்தபிறகும்கூடக் கர்ணன் தன்னை வந்து சந்தித்ததைப் பற்றியோ, தான் எடுத்த சபதத்தைப் பற்றியோ, அவள் ஒருவரிடமும் கூறவில்லை. இதன் காரணமாகக் கர்ணனின் புகழ் அதிகரித்தது; குந்திக்குத் தனித்ததொரு இன்பம் கிடைத்தது.

வேறு எதிலும், எதனாலும் கிடைக்க முடியாத இன்பமல்லவா அது?

பொங்கிவரும் பெருநிலவு

இருபத்திரண்டாம் அத்தியாயம்

"போய் வருகிறேன்"

உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக, உயர்வானதாகக் கருதப்படுகிறான் மனிதன். காரணம் தான் செய்யப் போகும் காரியத்தில் ஊக்கமும், திறமையும் காட்டுவதுடன் ஆழ்ந்த, நேர்மையான சிந்தனையும் கொண்டவனாக விளங்குவதுதான். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் மிருகங்களிடம் இல்லாத பகுத்தறிவு மனிதனுக்கு இருக்கிறது.


ஆனால் இந்தப் பகுத்தறிவை மனிதன் எப்போது இழப்பான்; இழந்து மிருகமாக — அல்லது மிருகத்தைப் போல் வாழ்ந்து வந்த ஆதிகால மனிதனாக — மாறுவான் என்று சொல்ல முடிவதில்லை. எப்போது வேண்டுமானாலும் இது நேர்ந்து விடலாம். சின்னஞ் சிறிய சம்பவம் நாகரிகமனிதனை, பண்பாடுள்ள மனிதனை; நாகரிகமற்ற, மிருக சுபாவம் மிக்க ஆதிகால மனிதனாக மாற்றி விடுகிறது. அந்த மாறுதல் ஒரு சில நிமிஷங்கள் இருக்கிறது. மறுபடியும் பழைய நிலையை அடைந்து யோசித்துப் பார்த்தால், 'ஏன் இப்படி நடந்து கொண்டோம்?' என்று நினைக்கத் தோன்றுகிறது.

காற்றிலே கதவு வேகமாய் மூடிக் கொள்கிறது, 'படார்' என்ற ஓசையோடு. நமக்குத் தூக்கி வாரிப் போடுகிறது. அருகே இருக்கும் மகனைப் பார்த்து, "கொக்கியைப்போடாமல் வைத்திருக்கிறாயே?" என்று கோபித்துக் கொள்கிறோம். "நான் போட மாட்டேன் போ!" என்று அவன் பதிலுரைத்தால் ஆத்திரம் கொண்டு அடிக்கவே போகிறோம். மனைவி குறுக்கே புகுந்தால், துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சாப்பிடாமலே வீட்டை விட்டுக் கிளம்பி விடுகிறோம்.

'காற்றிலே கதவு அடித்துக் கொண்டால் என்ன குடிமுழுகிப் போய் விட்டது! எதற்குச் சாப்பிடாமல் எழுந்து போக வேண்டும்? கொஞ்சமும் அர்த்தமற்ற செயல்' என்று பின்னால் நினைக்கத் தோன்றுகிறது.

அந்தச் சமயத்தில் மனிதன் பகுத்தறிவை இழந்து விடுகிறான். 'இம்மாதிரியாகப் பகுத்தறிவை இழந்து அசட்டுத்தனமாக, அனாவசியமாக நடந்து கொள்ளக் காரணம் என்ன?' என்று மனோதத்துவ நிபுணர்கள் ஆராய்ந்தார்கள்.

மனிதன் தற்போது பண்பாடு மிக்கவனாக, நாகரிகம் அடைந்தவ



னாக விளங்கிய போதிலும், அவன் மனத்திலே பதிந்துபோன ஆதிகால வாழ்க்கையின் பழக்க வழக்கங்கள் இன்னும் அறவே நீங்கவில்லை. பல நூற்றாண்டுகளாக நாகரிக வளர்ச்சியில் பங்கு பற்றி வந்திருந்த போதிலும், இன்னமும் அந்த ஆதிகாலத்திய உணர்ச்சிகள் முழுவதும் மனிதனின் உள்ளத்தை விட்டு நீங்காமல் மிச்சமிருந்து கொண்டே வருவது வினோதமாகத் தோன்றலாம்.

ஆனால் தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது உண்மையானால், ஒரு சில வருஷங்களே அனுபவிக்கும் குழந்தைப் பருவத்தின் பழக்க வழக்கங்கள் சாகும்வரையில் நிலைத்திருப்பது நிஜமானால்; ஆதி மனிதர்களின் ஆயிரமாயிரம் வருஷப் பழக்க வழக்கங்கள், இருபது அல்லது முப்பது தலைமுறைகளின் நாகரிக வளர்ச்சியில் ஏன் மறைய வேண்டும்?

இது மனோதத்துவ நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து கண்ட உண்மை.

* * *

அமைதியான நித்திரையில் ஆழ்ந்திருந்தாள் விமலா. நிம்மதியான மூச்சுக்களால் அவள் நெஞ்சம் விம்மித் தணிந்தது. பச்சை நிறப் போர்வையொன்று அவள் உடல்

மீது விரிக்கப்பட்டிருந்தது. மலர் போன்ற அவளுடைய ஒரு கரம் மட்டும் போர்வைக்கு மேல், புல் தரையில் தும்பைப் பூவைப் போலக் காட்சியளித்தது. அந்தக் கரத்தில் ஓடிய ரத்தக் குழாய்களின் நீல நிறத்தைக் கண்ணாடி வழியே பார்ப்பது போலத் தெளிவாகக் கண்டான், அவளருகே அமர்ந்திருந்த நடராஜன். ஒரு விரலை அந்த நீலக் கோட்டின் மீது மெல்லப் பதித்து நீள இழுத்தான்.

அப்போது ஏற்பட்ட உடற் சிலிர்ப்பில் பகலை அலங்கரிக்க மலரும் புஷ்பம் போல் படபடத்துத் திறந்து கொண்டன அவள் கண்கள். மேகத்துக்குப் பின்னாலிருந்து வெளிப்படும் சூரியனைப் போல் இமைகள் திறந்து கொண்டதும் கண்களிலிருந்து எழுந்த ஒளி நடராஜனைக் கூச வைத்தது. குருடாகித் தன் கண்களை மூடிக் கொண்டது கூசியதாலல்ல என்றும் அவமானக் கூச்சத்தால்தான் என்றும் அவனுக்குத் தெரிந்தது.

கண்களையும் நெற்றியையும் தவிர மற்ற எல்லாப் பகுதிகளையும் மூடி மறைத்துப் போட்டிருந்த கட்டுகளுடன் விளங்கிய அந்த முகத்தைப் பார்க்கவே வெட்கினான் நடராஜன்.

பல முறைகளில் உணர்ந்து அனுபவித்திருந்த அந்த மென்மையான கன்னங்களை இனி அவன் காண முடியாது. குங்குமமாகச் சிவந்து குழி விழும் நாணப் புன்னகையின் பிரதிபலிப்பைப் பட்டுக் கன்னங்கள் அவனுக்குக் காட்டாது. கிள்ளிக் கொஞ்ச அழைப்பு விடுக்கும் சதைப் பற்றைக் கொண்ட இரண்டு இன்ப லோகங்களை அவன் இனி பார்க்க முடியாது.

தொடுத்த முல்லை அரும்புகளைப் போன்று வரிசை வரிசையான பற்கள் அவளுக்கு இப்போது இல்லை. சிரிப்பிலே சொக்க வைக்கும் கூர்மையான பல் வரிசை அவளுக்குக் கிடையாது. உள்ளத்தைக் குளிர்விக்கும், அவளுடைய கலகலப்பான சிரிப்பொலியை நடராஜன் கேட்க முடியாது. இதயத்துக்கு இதமளிக்கும் பேச்சை யாராலுமே கேட்க முடியாது. இன்பக் கதைகள் சொல்லும் நாவு பேசும் சக்தியையே இழந்து விட்டது.

இன்னல்களைத் தீர்க்கும் புன்னகை அவள் அதரங்களில் இனி மலராது. துடிதுடிக்கும் அந்தக் கொவ்வைச் செவ்வாயில் நினைவை யழிக்கக் கூடிய மந்தகாசம் தவழாது.

விமலாவின் முகம் கோரமாகி விட்டது. அவள் குரூபியாகி விட்டாள்.

'அதற்குக் காரணம் இந்தப் பாவி தான்' என்ற நினைவு நடராஜனை அவமானத்தில் உடல் குன்றச் செய்தது. கூச்சத்தால் கண்களைக் கூசச்செய்தது.

விமலாவிடம் அதைச் சொல்வதற்கும் தைரியம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தான் அவன்.

நடராஜனுடைய கரத்தைப் பற்றி அழுத்தி அவன் கவனத்தைத் தன் பக்கம் திருப்பினாள் விமலா. புருவங்களை நெறித்து, 'என்ன நடந்தது?' என்று கேட்டாள்.

நடராஜன் கட்டில் அருகே தரையில் மண்டியிட்டு அவள் இரு கரங்களையும் தனது உள்ளங்கையில் எடுத்துக் கொண்டு அதனிடம் பேசினான், கண்களை ஏறிட்டுப் பார்க்க முடியாமல்.

"மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்து விட்டேன், விமலா! பொறுமையே உருவான உன்னால்கூட என்னை மன்னிப்பது இயலாத காரியம். அத்தகைய கொடிய காரியத்தைச் செய்து விட்டேன். உன்னைச் சாக அடித்திருந்தாலும் பரவாயில்லை. நானும் என் உயிரை மாய்த்துக் கொண்டு உன்னுடன் வந்து சேர்ந்திருப்பேன். ஆனால் உயிரை உனக்கு வைத்து விட்டு எழிலைப் பறித்து விட்டேன். உன் அழகை அழித்து விட்டேன்! எனக்கு ஏது மன்னிப்பு? நீ மன்னிக்க மாட்டாய். அதை நான் எதிர்பார்க்கவுமில்லை. எனக்குக் கிடைக்கக்கூடிய தண்டனையைத்தான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். ஆனால் சட்டப்படி கிடைக்கக் கூடிய எந்தத் தண்டனையும் எனக்குப் போதாதே என்றுதான் கவலையாக இருக்கிறது. எவ்வளவு கொடிய தண்டனையை நான் அனுபவித்தாலும் போதவே போதாது விமலா! போதவே போதாது!

"இல்லை! இல்லை. பயங்கரமான தண்டனையொன்று இருக்கத்தான் செய்கிறது. உன்னிடமிருந்து என்னைப் பிரித்து வைத்தால் போதாதா? எப்போதும் உன் அருகிலே இருந்து கவனித்துக் கொள்ள முடியாமல் சித்திரவதை செய்தால் போதாதா? அதைவிடப் பெரிய தண்டனையை யார் எனக்குக் கொடுக்க முடியும்?" என்று கேட்டபடியே அவள் இரு கரங்களிலும் தன் முகத்தைப் பதித்துக் கொண்டு குழந்தை போல் உரக்க அழுதான் அவன்.

ஒரு கரத்தை மெல்ல விடுவித்துக் கொண்டு அவன் தலையை வருடினாள் விமலா. நெற்றியைத் தடவிக்கொடுத்

தான். முகத்தை நிமிர்த்தி அவன் கண்களைத் துடைத்து விட்டாள்.

கையினால் சமிக்ஞை செய்து காகிதமும் பேனாவும் வேண்டுமென்று கேட்டாள். கேவிக் கொண்டே அவற்றை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான் நடராஜன்.

அவற்றைப் பெற்றுக் கொண்டு, துப்பாக்கியை எடுத்து அசட்டுத்தனமாகப் பரீட்சித்துப் பார்த்ததாகவும், அந்த ஆயுதத்தைப் பற்றிய விவரங்கள் ஒன்றுமே தெரியாததால் தவறிப் போய்த் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு விட்டதாகவும் ஒரு வாக்கு மூலம் எழுதி, அதில் கையெழுத்திட்டாள் விமலா.

பின்னர் அத்தானுக்கு நீண்டதொரு கடிதம் எழுதினாள் :

"மனப்பூர்வமாகச் சொல்கிறேன், அத்தான்! உங்கள் மீது எனக்குக் கொஞ்சங்கூடக் கோபமுமில்லை, வருத்தமுமில்லை. தண்டனையைப் பற்றியும் மன்னிப்பைப் பற்றியும் பேசாதீர்கள். தண்டனையடையவோ மன்னிக்கவோ ஒன்றுமில்லை. உண்மையில் இப்படி நேர்ந்து விட்டதற்கு மகிழ்ச்சியடைகிறேன். தங்களுக்கு என்னிடமிருந்த அன்பை அதிகரித்த விதிக்கு நன்றி செலுத்துகிறேன். சற்று முன்னால் என்னைப் பிரிந்து இருக்க முடியாது, சித்திரவதையாகத்தான் இருக்கும் என்றீர்கள். அந்தச் சொற்களைக் கேட்க இதைவிடப் பயங்கர சொருபத்தை அடையலாம், அத்தான்!

"நீங்கள் அழுவதுதான் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதைத்தான் என்னால் பொறுக்க முடியாது, மன்னிக்க முடியாது. உங்கள் அர்த்தமற்ற அழுகைக்குத்தான் தண்டனையளிக்க வேண்டும் என்று கூடத் தோன்றுகிறது!

"தயவுசெய்து என்னிடம் இருக்கும் அன்புக்கு அடையாளமாக உடனே அழுவதை நிறுத்துங்கள்.

"அத்தான்! கடைசியாக ஒரு விஷயம். மல்லிகா அக்காள் களங்கபடமற்றவள் என்பதை இதற்குள்ளாக உணர்ந்திருப்பீர்கள். என் நிலை இப்படியாகி விட்டதால் அவளைத்தான் நீங்கள் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும், யோசிக்க இடமில்லை. எனக்கு அதில் ஆட்சேபணையே கிடையாது. சந்தோஷம்தான்."

நடுங்கும் கைகளால் கடிதத்தை வாங்கிப் படித்தான் நடராஜன். படித்து முடித்ததும் அதைச் சுக்குச் சுக்காகக் கிழித்தான். அவள் எழுதியிருந்த கடைசி விஷயம் கடிதத்தை அப்படிக் கிழிக்கச் செய்தது.

"என்னை மன்னிப்பதன் மூலமாகவே தண்டனை யளித்துவிடப் பார்க்கிறாயா, விமலா? என்னை அவள் தலையில் கட்டி விடுவதன் மூலமாகப் பழிவாங்கிவிட நினைக்கிறாயா? உன்னை நினைத்து நினைத்து ஏங்கவைத்துச் சித்திரவதை செய்ய யோசிக்கிறாயா? முடியாது விமலா, முடியாது! உலகமே எதிரே வந்து நின்றாலும் என் விமலாவை விட்டுப் பிரிய மாட்டேன்! அவ்வளவு கொடிய தண்டனையை ஏற்றுக் கொள்ள எனக்குத் தைரியம்



இல்லை. என்னைத் துன்புறுத்தாதே!" என்று கதறினான் நடராஜன்.

"கோழை! செய்வதையும் செய்துவிட்டு, 'தண்டனையை அனுபவிக்கத் தைரியம் இல்லை' என்கிறான்! அயோக்கியன்!" என்ற மணியின் குரலைக் கேட்டு நடராஜன் திரும்பினான்.

"உயிரைக் காப்பாற்ற வேண்டியவன், உயிரை அழிக்கத் துப்பாக்கியை எடுத்தாயா? டாக்டர் என்று உன்னைச் சொல்லிக் கொள்ள வெட்கமா யில்லையா உனக்கு? சமூகத்திலே பொறுப்புள்ள ஒரு மனிதன் நடந்து கொள்ளும் விதமா இது?" என்று பொரிந்து தள்ளினான் மணி.

"நான் டாக்டர்தான், மணி! ஆனால் நான் மனிதனும்கூட. மனிதனுக்குள்ள ஏற்றத் தாழ்வுகள் எனக்கும் உண்டு. தெய்வப் பிறவியல்ல, நான்."

மணி மேலே பேசுவதற்கு முன் அங்கு நடப்பனவற்றைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த விமலா கைகளைப் பலமாக அசைத்து அசைத்து மணியை அடக்கினாள். பேனாவைத் திறந்து எழுதினாள்.

மணி அதை வாங்கிப் படித்தான். "என் நல்வாழ்வுக்குப் பாடுபடுவதாகச் சொன்னீர்களே, என்ன ஆயிற்று? பேசாமல் இருங்கள்."

அதைப் படித்ததும், மணியின் கண்கள் அசாதாரணமான ஒளியைப் பெற்றன. ஆர்வத்துடன் அவளை நெருங்கினான். "நான் மறக்கவில்லை, விமலா! அதை மறக்கவேயில்லை. ஒரு விநாடி கூட மறந்து விடவில்லை. அதற்காகத்தான் இங்கு வந்தேன்.

"இந்த நீசனை எண்ணி எண்ணி நீ இனி ஏங்க வேண்டாம். அழகுக்கு அடிமையான இவன் உன்னிடம் அதைக் காண முடியாது. உன்னை அணுக மாட்டான். உள்ளத்தின் அழகை உணர்வதால் ஏற்படும் தெய்விகக் காதலை இவன் அறியவே மாட்டான். உன்னை என்னிடமிருந்து பிரித்து வைத்த அழகு அழிந்து விட்டது. மேளதாளத்தோடு ஊரறிய நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன், கவலைப்படாதே!"

விமலா காதுகளை இறுகப் பொத்திக் கொண்டாள். அவன் பேச்சைக் கேட்கச் சகியாமல், தலையை இப்படியும் அப்படியும் அசைத்தாள். அதனால் ஏற்பட்ட வலியின் வேதனை உள்ளத்தின் வேதனையுடன் சேர்ந்து அவள் நெற்றியில் காட்டியது.

அதைப் பார்த்த மணிசேகரன், "நான், நான்..." என்று இழுத்தான்.

"ஆமாம், மணி! நீ தவறாகத்தான் பேசி விட்டாய்! விமலாவின் மனத்தைத் துன்பப்படுத்தி விட்டாய். இதோ பார்! விமலாவை என்னிடமிருந்து பிரிக்க இனி எந்தச் சக்தியாலும் முடியாது. அவள் முகத்தின் வெளிப் பாகம் கோரமாகி விட்டது, உண்மைதான். ஆனால் அங்கே அவள் இருந்த அழகெல்லாம் ஒன்று திரண்டு அந்தக் கண்களிலே அடைக்கலமாகி விட்டது.

"அவள் அதரங்களிலே இனி புன்னகை தவழாது. ஆனால் அந்தப் புன்னகை அவளுடைய கடைக்கண் பார்வையுடன் இணைந்து விட்டதை நான் அறிவேன்.

"கலகலப்பான சிரிப்பொலியைக் கேட்க முடியாது. ஆனால் குறுகுறுப்பான பார்வையாலேயே சிரிப்பதற்கு அது இணையாகுமா?

"அவள் இனிமேல் பேசவே மாட்டாள். நயன பாஷையில் என்னுடன் சதா உறவாடிக் கொண்டிருக்கையில் அவள் வாய் பேசுவானேன்?

"வெண்மையான பல் வரிசையைக் காண முடியாது. அவற்றின் ஒளி ஒன்று சேர்ந்து அவள் நெற்றியை ஒளிரச் செய்வதைப் பார்க்கிறேன்.

"உள்ளத்தின் களங்கமற்ற தன்மையைப் பற்றி நீ சொன்னாய். அதையும் அந்த அகன்ற பெரிய கண்கள் பிரதிபலிப்பதைக் காண்கிறேன்.

"அவள் இதயத்தின் தூய்மையை அந்தக் கண்களில் சுடர் விடும் இரு தீபங்கள் எனக்குக் காட்டுகின்றன.

"அவள் என்னிடம் கொண்டிருக்கும் காதலின் ஆழத்தைத் தெரிந்து கொள்ளலாம், அந்த விழிகளின் ஆழத்தை அளந்து பார்க்க முடியுமானால் என்று அறிந்தேன்.

"என்னுடைய கண்கள் விழித்துக் கொண்டன. விமலா 'அழகுத் தெய்வம்' என்று உணர்ந்துகொண்டேன்."


ஒரு கணம் அசைவற்று நின்ற மணி அடுத்த கணம் பாய்ந்து சென்று நடராஜனை இறுகத் தழுவியபடியே விமலாவைப் பார்த்துப் பேசினான்: "உன்னுடைய நல்வாழ்வுக்குப் பாடுபடுவதாக உறுதி பூண்டேன். அதையே என் லட்சியமாகவும் கொண்டேன். அந்த லட்சியம் இன்று பூரணமாக நிறைவேறி விட்டது. நான் போகிறேன். ஊர் ஊராகச் சுற்றித்திரிந்தவன் இங்கு வந்து சேர்ந்தேன். மறுபடியும் ஊர் ஊராகச் சுற்றப் போகிறேன். போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தான் மணி. விமலா தன்னுடைய கண்களாலேயே அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினாள்.

கதவருகே சென்ற பிறகு ஆவலை அடக்க முடியாமல் கடைசியாக ஒரு முறை அவன் திரும்பிப் பார்த்த போது, நடராஜன் விமலாவின் இரு கரங்களையும் எடுத்துத் தன்னுடைய கன்னங்களில் அழுத்திப் பதித்துக் கொள்வதைக் கண்டான்.

சட்டென்று திரும்பித் தன் கண்களில் அரும்பிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே விரைந்தான்.



இந்த இளைஞர் தொழில் சம்பந்தமான கண்காட்சி கூடங்களை திட்டமிட்டு நிர்மாணித்தார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தொழில் துறையில் இந்தியா அடைந்திருக்கும் மகத்தான முன்னேற்றத்திற்கு இந்த கண்காட்சிகள் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.
SCISSORS
அவருடைய சிகரெட்
சிஸர்ஸ்
86/284
Issued by The Imperial Tobacco Company of India Limited



குடும்பத்தில்
உள்ள
ஒவ்வொருவருக்குப்
நல்லது



கிருமி நாசினியான வேப்ப எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்டதும், மனோகரமான மணம் தருவதுமான மார்கோ மிக மெல்லிய சருமமுடையவர்களுக்கும் உத்தமமானது. மார்கோ சோப்பின் இளகும் சத்துநிறைந்த நுரை சரீரத்தின் துவாரங்களில் ஆழமாகப் புகுந்து சென்று, சருமத்திலுள்ள எல்லா அழுக்குகளையும் போக்கி சுத்தப்படுத்துகிறது. இதன் தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் சோதிக்கப்பட்டுள்ள மார்கோ சோப் உங்களுக்கு அதிக சுகத்தையும், நாள்முழுதும் அதிகத் தூய்மை உணர்ச்சியையும் அளிக்கிறது.

மார்கோ சோப்

குடும்பத்துக்கு உத்தமமான சோப்

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட், கல்கத்தா-29

தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1

பல் சிதைவுகளையும்
வாய் நாற்றத்தையும்
ஈறு உபாதைகளையும்

நிறுத்துங்கள்

பளிச்சென்று ஒளிவீசும் வெண்மையும்
ஆரோக்கியமுமான பல் வரிசைகளை
அடைய வேண்டுமானால்

போர்ஹான்ஸ்

பற்பசையை உபயோகியுங்கள்



ஈறுகளின் உறுதிக்காக என்றே டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் கண்டுபிடித்து அளிக்கும் விசேஷத் துவர்ப்புப் பொருள் கலந்துள்ள பற்பசை இது ஒன்றுதான்.

Geoffrey Manners & Co. Private Ltd.

5.29

TAM. ௬

நர்ஸிங்ஹோமின் வாசலை அவன் அடைந்த போது நடராஜன் உரக்கப் பாடுவது கேட்டது:

மங்கியதோர் நிலவினிலே
கனவிலிது கண்டேன்
வயது பதினாறிருக்கும்
இளவயது மங்கை

பொங்கிவரும் பெருநிலவு
போன்ற வொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும்
போற்றவரும் தோற்றம்

துங்கமணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதே எழுந்தென்னைப்
பாரென்று சொன்னாள்

அங்கதனிற் கண்விழித்தேன்
அடடாவோ! அடடா!
அழகென்னும் தெய்வந்தான்
அதுவென்றே யுணர்ந்தேன்.

மணிசேகரனுடன் கூடவே, நாமும் அந்த இளங் காதலர்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்வோமாக.

இருபத்திமூன்றாம் அத்தியாயம்

நிலவு சிரித்தது

செண்பகபுரம் கிராமத்திலே ஒரே கோலாகலம். "பட்டணத்திலேயிருந்து சினிமா எடுக்க வந்திருக்காங்களாம்" என்று வாய்க்கு வாய் சொல்லிக் கொண்டு கிராமவாசிகள் ஆற்றங் கரையிலே வந்து குழுமினார்கள்.

மங்கைப் பருவத்தை அடைந்து விட்ட சரஸ்வதி அந்தக் கூட்டத்தின் முன்னணியில் நின்றாள்.

"ஷூட்" என்றார் டைரக்டர். காமிரா 'விர்ர்ர்' என்று சுழன்றது. திரைப்படக் கதாநாயகன் இரட்டை மாட்டு வண்டியை 'ஜல் ஜல், ஜல்ஜல்' என்று ஒலி எழும்பக் கன ஜோராக ஓட்டிச் சென்றான். கூடவே அமர்க்களமாகப் பாடினான்:

கூடுனமே கூடுனமே நாம்
கூண்டு வண்டிக் காளைபோலே
ஆகாத காலம் வந்து நாம்
ஆளுக் கொரு சீமையானோம்

அப்போது கூண்டு வண்டிக் காளைகளுக்கும் துரதிர்ஷ்டவசமாக ஆகாத காலம் வந்து மூலைக்கொன்றாகப் பிய்த்துக் கொள்ளப் பார்த்தன. வண்டி இப்படியும் அப்படியுமாக அல்லோலகல்லோலப்பட்டுக் கடைசியாக ஒரு மரத்தில் மோதி நின்றது.

இத்தனை நேரமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பயப் பிராந்தியுடன், "ஐயோ! ஐயோ!" என்று அலறிக் கொண்டிருந்த கதாநாயகன் சட்டென்று கீழே குதித்து டைரக்டரிடம் போனான். "ஸார்! இந்த வேலையெல்லாம் நம்மாலே முடியாது! அசல் பட்டிக்காட்டானைப் போட்டு 'லாங்ஷாட்' எடுத்துக் கொள்ளுங்கள் ஸார்! கோ, கோ! அடேயப்பா! நம்மால் முடியாது!" என்று சொல்லி விட்டு நெற்றியைக் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டு பெருமூச்சை ஊதி வெளிப்படுத்தினான்.

அவன் படும் அவஸ்தையைப் பார்த்துக் கொண்டேயிருந்த சரஸ்வதி 'களீ' ரென்று சிரித்து விட்டாள். சிரிப்புச் சத்தம் கேட்டதும் கேமிராவைக் கையாண்டு கொண்டிருந்த மணி தன் கோபமாகத் திரும்பினான். பருவத்தின், பூரிப்பும் இளமைத் துடிப்பும் தலை முதல் கால் வரை மிளிரச் சரஸ்வதி நிற்பதைப் பார்த்தான். கோபம் இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்ப் புன்னகை அரும்பியது அவன் முகத்தில். சரஸ்வதி கன்னங்குழிய நாணித் தலைகுனிந்தாள்.

சற்றுத் தூரத்தில் நின்று இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மல்லிகா. காமிராமேன் ஏறியிருந்த கார் அப்பால் போனதும் 'விடுவிடு' வென்று நடந்து சரஸ்வதியின் கையைப் பிடித்துத் தர தரவென்று இழுத்துக் கொண்டு போனாள். "மறுபடியும் இப்படி யாரையாவது பார்த்துப் பல்லை இளித்தால் உதை கொடுப்பேன். இப்படிச் செய்துதான் என்னுடைய வாழ்க்கையே பாழாகிவிட்டது. நீயும் அந்தத் தவறையே செய்யாதே" என்று எச்சரித்தாள்.

"என்னைக் கவனித்துக் கொள்ள எனக்குத் தெரியும்."—'வெடுக்'கென்று பேசியபடியே குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு ஆற்றில் நீர் மொள்ளச் சென்றாள் சரஸ்வதி.

அன்று முழுவதும் மல்லிகாவுடன் அவள் பேசவேயில்லை. பலமுறை பேச்சுக் கொடுத்துப்பார்த்தும் அவள் பதில் கூறாதிருக்கவே மல்லிகா தன் பிரயத்தனத்தை விட்டு விட்டாள். தானாகவே கோபம் குறைந்துவிடும்

என்று எண்ணி இரவுக்கான சமையலைச் செய்யத் தொடங்கினாள்.

அடுப்படியில் காரியம் முடிந்து வெளியே வந்து பார்த்தபோது சரஸ்வதியைக் காணவில்லை. தேடுவதற்குக் கூட இடமில்லாத சிறிய வீடானதால் உடனே வாசல் கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு ஆற்றங்கரைக்கு விரைந்தாள். சரஸ்வதி அங்குதான் சென்றிருக்க வேண்டும் என்று அவளுக்கு நிதர்சனமாகத் தெரிந்தது.

* * *

பகலைப் பழிக்கும் மோகன இரவு ஆற்றங்கரையிலே மல்லிகாவை வரவேற்றது. பூரண சந்திரனென்னும் சுனையிலிருந்து நிலவு பொங்கிப் பெருகி வந்தது. அழிவற்ற அந்த நிலாக் கற்றைகள் உலகையே சூழ்ந்து கொண்டு ஒளியில் இரவைப் பகலாக்கித் தண்மையில் உயிர் இனங்களை இன்பபோதையில் மயங்கச் செய்தன. இயற்கையே அலுத்தும் களைப்புற்றும் படுத்து விட்டது போல், உலகமே உறங்கிய அந்த வேளையில், காதலர்கள் மட்டும் தூக்கம் கெட்டுத் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

யௌவனப் பருவத்துப் பெண்ணொருத்தி சுழன்றும், துள்ளியும், தளிர் நடை போட்டும், சதங்கை கொஞ்ச ஆடுவது போல் தாமிரபரணி நீர்ச் சுழிகளுடனும், நீர்க் குமிழிகளுடனும், கரைகளில் முட்டி மோதியும், சலசலக்கும் ஒலியுடன் நர்த்தனம் செய்தாள். ஆற்றைத் தழுவிய நிலாக் கற்றைகள் ஆடும் அணங்குக்கு வெள்ளி இழைகளாலான பளபளக்கும் ஆடையை அணிவித்திருந்தது போலிருந்தது.

தெய்வீகக் காதலுக்கு எடுத்துக் காட்டாக எண்ணற்ற காதலர்கள் ஏற்றி வைத்த விளக்குகள் போல வானத்தில் நட்சத்திரங்கள் சுடர் விட்டுப் பிரகாசித்தன.

தாமிரபரணியில் குளித்தெழுந்த நிலவுக் கதிர்கள் பரந்த புல் வெளியிலே ஒயிலாக நடந்து சென்று தன்னிச்சையாக வளர்ந்திருந்த காட்டு மலர்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்து மகிழ்வித்தன.

நிலாவையோ, ஆற்றின் புதுப் பெருக்கையோ, வீசிய மாருதத்தையோ, அதில் கமழ்ந்த செண்பக மலர்களின் வாடையையோ சரஸ்வதி கவனிக்கவில்லை. உள்ளத்தில் பொங்கிய பிரேமையில் அவள் எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். தன்னையே மறந்து போனாள்.

தன் காதலனின் இதயத்தை மாற்றுச் சாவியினால் திறந்து விட்டு, அதனுள்ளிருந்து எழும் இன்ப கீதங்களால் தன் செவிகளை நிரப்பிக் கொள்ளத் தொடங்கினாள். இதயத்தின் இதயத்துக்குள்ளே வசித்து அவனுடைய உணர்ச்சிகளைத் தானும் உணர்ந்து, அவனுடைய எண்ணங்களைத் தானும் எண்ணி வரலானாள்.

குமுறும் சூல் கொண்ட மேகங்களைப் போல் அவள் இருதயம் படபடத்தது. பொங்கும் அலை கடலைப் போல நெஞ்சு விம்மியது. கொட்டும் மழையைப் போல ஆசை சொரிந்தது. விரியும் மலரைப் போல் காதல் பரிணமித்தது.

வானத்திலிருந்து இறங்கி வந்து விட்ட நட்சத்திரங்களாக அவள் கண்கள் மின்னிப் பிரகாசித்தன. அசையும் ஆம்பலைப் போல் அவள் உடல் கிறங்கியது. இதமளிக்கும் அந்தச் சூழ்நிலையில், அமைதி நிறைந்த வேளையில் அவளுடைய வெள்ளிமணியின் நாதம் போன்ற சிரிப்பொலி நீண்ட தூரத்துக்குப் பரவி எதிரொலித்து அந்தக் காதல் உள்ளங்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

இதையெல்லாம் கண்ட மல்லிகா அவர்களை நெருங்குவதா, வேண்டாமா என்று யோசனையிலாழ்ந்து விட்டாள்.

"வேண்டாம், மல்லிகா! வேண்டாம்! புது மணம் பரப்பும் அந்தக் காதல் மலரை அழிக்க முற்படாதே. அதை விடப் பாபச் செயல் வேறு எதுவுமே இருக்க முடியாது" என்று தனக்கு அருகே யாரோ பேசுவதைக் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டவளாகத் திரும்பிப் பார்த்தாள் மல்லிகா. அங்கே மணி நின்று கொண்டிருந்தான்.


"என்ன, மல்லிகா! பல வருஷங்களுக்குப் பிறகு என்னைப் பார்ப்பதால் அடையாளமே தெரியவில்லையோ?"

"நன்றாகத் தெரிகிறது. ஆனால் எதிர்பாராத சந்திப்பானதால் திடுக்கிட்டேன். எப்போது வந்தீர்கள்?"

"இன்று சென்னையிலிருந்து......"


'சென்னை' யென்றதுமே, "நடராஜனும் விமலாவும் சௌக்கியமா?" என்று கேட்டாள் மல்லிகா.

"ரொம்ப ரொம்பச் சௌக்கியம் தான் மல்லிகா! மூன்று வருஷங்கள் வடக்கே எங்கெல்லாமோ சுற்றி விட்டுக் கடைசியில் நம்மைச் சேர்ந்தவர்களை இனிமேலும் பார்க்காமல் இருக்க முடியாது என்று திரும்பி வந்தேன் சென்னைக்கு. நடராஜன் வீட்டிலே நான்கு நாட்கள் தங்கி



பண்டிகை, விழாக்
காலங்களிலே . . .

இன்னிசையோடு இணையாத இன்பமும் ஓர்
இன்பமாமோ ? இன்னிசையின் பூரணமான
வடிவத்தை ஜங்கார் ரேடியோவின்
மூலமாகத்தான் அனுபவிக்க முடியும்.



JHANKAR

மகத்தான மேக்னடோன் உடைய

ஜங்கார் ரேடியோ

இதனிலும் மேலானது கிடைப்பதரிது!

தென் பிராந்தியத்திற்குப் பூரண உரிமையாளர்கள் :
ஜே - ஓ - போன் கம்பெனி, 13, தங்கசாலைத் தெரு. சென்னை - 3

யிருந்தேன். அவனும், விமலாவும், சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்கள். பொன்னம்மாளும் மரகதம்மாளும் பாட்டிகளாகப் போகும் பெருமிதத்திலே ஒரு சுற்றுப் பருத்து விட்டார்கள்!''

மல்லிகா புன்னகை பூத்தாள்.

''இன்னொன்று தெரியுமா? கல்யாணமானதும் விமலாவை அழைத்துக் கொண்டு அமெரிக்காவுக்குப் போய் 'பிளாஸ்டிக் ஸர்ஜரி'யில் முகத்தைச் சரிப்படுத்த நினைத்தானும் நடராஜன். விமலா அதற்கு ஒப்புக் கொள்ளவில்லையாம். 'நீங்கள் என்னை அழகுத் தெய்வமாக நினைக்கச் செய்த இந்த அவலட்சணம் இப்படியே இருந்து விட்டுப் போகட்டும், அத்தான்!' என்றாளாம். நடராஜனும் ஒப்புக் கொண்டானும். எப்படியிருக்கிறது கதை? அந்தப் பெண்ணுக்குப் புத்தி சொல்லிவிட்டு வந்தேன், 'அத்தான் சொல்லைத் தட்டாதே' என்று. என்ன முடிவு செய்தார்களோ என்னமோ தெரியவில்லை. ஒரு வேளை குழந்தை பிறந்த பிறகு பாட்டிகளைச் சீராட்ட வைத்து விட்டுக் கணவனும் மனைவியுமாக 'ஹனிமூன்' போகலாம்.''

''எப்படியோ அவர்கள் சந்தோஷமாக இருந்தால் சரிதான்!'' என்றாள் மல்லிகா. அவள் கண்களில் துளித்த நீர் முத்துக்களை நிலவொளியில் பார்த்தான் மணிசேகரன்.

''ஏன் மல்லிகா, கண் கலங்குகிறாய்? பழைய கதையை யெல்லாம் இன்னும் மறக்கவில்லையா நீ? நடராஜனை எண்ணி எண்ணி இன்னும் ஏங்கிக் கொண்டிருக்கிறாயா என்ன?''

''அவர்கள் இருவரும் சந்தோஷமாக இருப்பதை நினைத்து அரும்பும் ஆனந்தக் கண்ணீர் இது. நெஞ்சில் செதுக்கிவிட்ட அந்த நிகழ்ச்சிகளை எப்படி மறக்க முடியும்? ஆனால் அவரை நினைத்து ஏங்கவில்லை நான். அப்படி ஏங்குவதில் அர்த்தமுமில்லை. விமலாவுக்காக அவரும், அவருக்காக விமலாவும் என்றே பிறந்திருக்கிறார்கள். அதை உணர்ந்திருந்தும் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோல் என் மனம் அவரை அடைய நினைத்தது. நல்ல வேளையாக எல்லாம் சரியான நிலையை அடைந்து விட்டன. நான் அவருக்குத் துரோகம் செய்யவில்லை என்பதை உணர்ந்து விட்டார். அதுவே எனக்குப் போதும்.''

இந்தச் சமயத்தில் 'கலகல' வென்ற சிரிப்பொலி மறுபடியும் கேட்கவே, இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

தன் காதலனின் கரங்களிலே சரஸ்வதியின் விரல்கள் சிறைப்பட்டிருந்தன. முழுமதியை அண்ணாந்து பார்த்து அவள் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

இந்தப் பெண்ணுக்கு எவ்வளவு சொன்னாலும் தெரிவதில்லை'' என்று கடிந்துகொண்டே நகர ஆரம்பித்த மல்லிகாவை மணி கைகளை நீட்டித் தடுத்து நிறுத்தினான்.

''மறுபடியும் சொல்கிறேன், மல்லிகா! அந்தக் காதலுக்குத் தடை விதிக்காதே. அதை நல்வழிப்படுத்தி, கட்டுமீறிக் கரையை உடைத்தெரியாமல் சங்கமம் அடையும் வரையில் பாதுகாத்து வந்தால் போதும். சரஸ்வதியின் காதல் திருமணத்தில் சங்கமமடைய முதலில் உன் கல்யாணம் நடக்க வேண்டும்!

''உலகம் பிறந்தபோதே அதில் காதல் இன்பமும் உடன் பிறந்து விட்டது, மல்லிகா! சின்னஞ் சிறிய நீரோடைகள் ஆற்றுடன் இரண்டறக் கலக்கின்றன. ஆறு கடலைச் சென்றடைந்து சங்கமமாகிறது. வான வெளியிலே சதா சர்வ காலமும் இன்ப உணர்ச்சியுடன் மாருதமும், தென்றலும், வாடைக் காற்றும் இன்னும் பலவும் ஒன்றோடொன்று இணைந்து கொண்டேயிருக்கின்றன. உலகத்தில் எதுவுமே தனித்திருக்க முடியாது, மல்லிகா! தெய்வம் விதித்த சட்டத்தின்படி எல்லாப்பொருள்களுக்கும் சந்திப்பும் இணைப்பும் உண்டாகின்றன.

''வான முகட்டை எட்டிப் பிடித்து முத்தமிடும் மலையும், ஒன்றையொன்று தழுவிக் கொள்ளும் கடலலைகளும், பூமியை ஆலிங்கனம் செய்யும் சூரியக் கிரணங்களும், கடலை அணைக்கும் நிலாக் கற்றைகளும் இதைத்தான் சொல்கின்றன, மல்லிகா!''

அவனுடைய பேச்சைக் கேட்டுச் சிரித்து விட்டாள் மல்லிகா. ''எப்போது கவியாக மாறினீர்கள்?'' என்று கேட்டு மறுபடியும் சிரித்தாள். மணிசேகரனும் சேர்ந்து சிரித்தான்.

சற்றுத் தூரத்தில் சரஸ்வதியும் அவள் காதலனும் சிரித்தார்கள்.

மரங்களிலே கூடு கட்டியிருந்த புள்ளினங்கள் தூக்கம் கலையப் பெற்று, விதம் விதமான ஒலிகளை எழுப்பிச் சிரித்தன.

துள்ளல் நடை போட்ட தாமிரபரணி சிரித்தாள்.

வீசும் காற்றிலே அசைந்த மரங்களின் இலைகள் சிரித்தன.

பொங்கி வந்த பெருநிலவு சிரித்து மகிழ்ந்தது.

(முற்றும்)

இன்பத்தின் இசை

நெருப்பெனத் தோன்றும் செந்நிற மலர்கள் பூத்து உதிரும் 'டாக்' (முருக்கம்) மரக் காடுகளுக்கிடையே காகிதம் உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை. அங்கு வேலை செய்பவர்களுக்குத் தனிக் 'குவார்டர்ஸ்' அளித்திருந்தனர். அந்தத் தொழிற்சாலையின் ஒரு பகுதியில் நாகராஜன் மேற்பார்வையாளன். அந்த வேலையில் சேர்ந்து நான்கு வருடம் சர்வீஸ் கூட ஆகிறது. அவனுடைய வீட்டுடைய ஜன்னல் வழியாகப் பார்த்தால் கிராண்ட் டிரங்கு எக்ஸ்பிரஸ் செல்லும் ரயில் பாதை. எதிர்ப்புறம் படிப்படியாக மலை உச்சிவரைக்கும் படரும் காடு யாவும் தெள்ளெனப் புலனாகும். நாகராஜன் மணமாகிய அடுத்த வருஷமே தன் மனைவி மங்களத்தை அழைத்துக்கொண்டு சின்னக் குடித்தனம் வைத்து விட்டான். ஒரே சந்தத்தில் செல்லும்வேலை; மாறுதலே இல்லாத சூழ்நிலை; நான்கு வருஷங்களாகப் பிறந்த ஊரையும், பெற்றவர்களையும் பாராமல் இருக்கவே வாழ்க்கையில் சலிப்புத் தட்டியது. தொழிற்சாலையின் சங்கு ஊதியதோ இல்லையோ, நாகராஜன் அரக்கப்பறக்க இட்டிலியையும் காப்பியையும் வயிற்றுள் தள்ளிவிட்டுச் சட்டையை மாட்டிக் கொண்டு வேலைக்குப் போய் விடுவான். பகல் பன்னிரண்டு மணிக்கு வந்து சாப்பிடுவான். சற்று ஓய்வு; மறுபடியும் வேலை; சாயங்காலம் நாலரை மணிக்கு வீடு; டிபன் சாப்பிட்டானதும் சற்று இளைப்பாறல்; மங்களத்துடன் தண்டப் பேச்சு; இராது போனால் தன் தொழில் சம்பந்தமாக ஏதாவது புத்தகத்தில் மூழ்கி விடுவான். நான்கு வருஷங்களாகவும், வெறிச்சென்றிருந்த இவர்கள் வாழ்வைக் கலகலப்பாக்கக் குழந்தைச் செல்வத்தைக் கடவுள் ஏனோ தரவில்லை.

கணவன் காலையில் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றதும், மங்களம் ஆலசியமாக ஜன்னலண்டை வந்து நிற்பாள். 'ஜிக்புக்' கென்று 'கூட்ஸோ' மெயிலோ செல்லும் ரயில் பாதையில். கண்கள் வெளிக்காட்சிகளில் லயித்திருந்தாலும் அவள் உள்ளம் தொலைவில் தென்னாட்டில் மாந்தோப்புக்கிடையே குளுகுளுவென்றிருக்கும் ஒரு சிற்றூருக்குப் பறந்து போய்விடும். வீட்டு வேலைக்காரி-மலைஜாதிப் பெண் தன் விசித்திர மொழியில் 'வீட்டுக்குப் போகட்டுமா?' என்று குரல் தரும்போது நினைவு கலைந்து தன் உலகுக்குத் திரும்புவாள். மடமடவென்று சமையல் செய்து முடித்ததும், குளித்துவிட்டு, பளிச்சென்ற உடையில், மலர்ந்த பூவைப்போல் ஜன்னல் அருகில் வந்து நிற்பாள்; நிழலும் வெய்யிலும் பின்னி விளையாடும் செம்மண் சாலை வழியே அவன் இனியன் வருவது தெரிந்ததும், புன்முறுவலுடன் கதவைத் திறக்கச் செல்வாள். மனைவியின் கப்ரமான முகத்தைக் கண்டதும், வேலையால் அலுப்புற்றுத் திரும்பும் நாகராஜனும் களிப்படைவான். இப்படி நான்கு ஆண்டுகளாக மங்களம் வெறுப்பை மூட்டும் ஒரே வட்டத்துள் சுழன்று வந்தாள். இப்படி எத்தனை நாட்கள்தான் செல்லுமோ என்ற ஏக்கம் அவளைச் சுட்டெரித்து வந்தது. கலையிராத இந்த இல்லறத்தை அவள் எப்படித்தான் சகித்துக் கொண்டாளோ?

இவர்கள் இருந்த வீடுகளில் இரண்டே அறைகள், ஒரு சிறு தாழ்வாரம், குட்டி முற்றம் ஒன்று. இவ்வளவே; நாகராஜனிடமிருந்து அன்புக்கென்னவோ குறைவில்லை; தன் தொழிற்சாலையில் நடக்கும் விஷயங்களைக் குறித்துப் பேசுவதை விட வேறு விஷயமில்லை அவனுக்கு. அக்கம் பக்கத்தில் குடியிருப்பவர்கள் வேறு மொழி பேசுபவர்கள். மராட்டிக் குடும்பத்தைச் சேர்ந்த அனசூயா என்ற பெண் ஒருத்தியே மங்களத்தின் கூட்டாளி. அவளிடமிருந்து மங்களம் 'அபங்க' என்ற கீர்த்தனங்களைப் பாடத் தெரிந்து கொண்டாள். அவளும், தியாகராஜ கிருதிகள் சிலவற்றை மங்களத்திடம் கற்றுக் கொண்டாள். அவர்கள் குடும்பத்தில் நாலைந்து பசங்கள். அவர்கள் வீடு எப்போதும் இரைச்சலாகவே இருக்கும். இதையெல்லாம் பொழுதுபோக்குவதற்குத் தன் வீட்டிலிருந்தபடியே அனுபவித்தாலும் மங்களம் மட்டும் அகன்றே நின்றாள். எங்கேயாவது மனிதரே இராத இடமாகப் போக வேண்டும் போல் அவளுடைய இதயப்பறவை துள்ளியது. அவள் பறந்து செல்ல நினைத்த இடம் எத்தனை தூரம் இருக்கிறது! சென்னைக்கு வந்து, பெரிய ரயிலில் அரக்கோணத்தை அடைந்து, அங்கிருந்து சின்ன ரயில் ஏறித் திருவள்ளூரில் இறங்கி நாலு மைல் மாட்டு வண்டியில் செல்லவேண்டும். கடல்போல் அசையும் நெற்கதிர்களும் துவரஞ்செடிகளும் உள்ள கொல்லை மேடுகளைத் தாண்டி, மாந்தோப்பும் தென்னஞ் சோலையும் சூழ்ந்திலங்க வாய் வழியும் வயற்கேணிகளும், தாமரை பூத்த தடாகமும், தெருவின் இருபுறமும் மெழுகிக் கோலமிட்ட அழகிய இல்லங்களும் கொண்ட, வெளியுலகின் கண்ணில் படாமல் நாணித் தன்னை மறைத்துக் கொள்ளும் அருமையான பாக்கமே அது. அதன் எழிலுக்கு ஓர் நிகர் உண்டோ?

அந்த இடத்தை மீண்டும் காண வேண்டுமென்ற ஏக்கத்தை மங்களத்தால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. நெடுமூச்சு வந்தது.

வெறுப்புடன் சமையலறைப் பக்கம் செல்லும் தாழ்வாரத்துக்கு வரும்போது 'மங்களம்' என்று நாகராஜன் குரல் கொடுப்பது கேட்டது. 'மணி பத்து கூட ஆகவில்லையே? இதற்குள் ஏன் திரும்பி விட்டார்?' என்று எண்ணிக் கொண்டே அவள் தாழ்ப்பாளைத் திறந்தாள். நாகராஜனின் முகம் வாடிக் கறுத்திருப்பதைக் கவனித்த மங்களம், ''என்ன உடம்பு...?'' என்று கேட்டாள் திகிலுடன்.

நாகராஜன் மனைவியின் மீது தண்ணிய நோக்கைச் செலுத்தி, மெல்ல முறுவல்செய்து, ''என்னமோ கொஞ்சம் ஜுரம் போலிருக்கு. அவ்வளவுதான். டாக்டரிடம் காட்டினேன். 'ஸிக்' லீவ் கொடுத்து விட்டார்'' என்றான்.

மங்களம் சட்டெனக் கணவனின் கழுத்தையும் கன்னத்தையும் தொட்டுப் பார்த்து, ''கொதியாகக் கொதிக்கிறதே......சட்டையைக் கழற்றி எறியுங்கள்...உள்ளே வந்து படுத்துக் கொள்ளுங்கள்......'' என்றாள். ஆசைக் கணவனுக்கு ஒரு பத்தினிப் பெண் செய்யும் தொண்டு மட்டுமல்ல; வாழ்விலே எதையும் தூயதாக வைத்துக் கொள்ளும் பண்புடைய பெண்ணின் செயலாற்றும் திறன் அது. மடமடவென்று பஞ்சணையைத் தட்டிக் கட்டில் மீது போட்டு, சலவை செய்த புதுத் துப்பட்டியை அதன் மீது விரித்தாள். ''வந்து கம்மென்று படுங்கள்'' என்றாள் மங்களம். ''எதற்கு இந்தப் புது விரிப்பு...?'' என்று நாகராஜன் தன் மனைவியின் கொழுவிய தாடையை மெல்லத் தட்டி அர்த்தம் தொனிக்கக் கேட்டான்.

''எப்பவும் உங்களுக்கு இந்தக் கேலி செய்யத்தான் தெரியும். இப்படி நீங்கள் ஒரு நாளும் தலைவலியென்றோ, ஜுரம் என்றோ 'லீவ்' போட்டதில்லை. எனக்கு என்னவோ பயமா யிருக்கிறது. உங்களைத் தவிர எனக்கு இங்கே யார் துணை?'' என்று கண் கலங்கச் சொன்னாள்.

''அசடே! இந்தத் தூசி ஜுரத்துக்கா இப்படி மருண்டு போகிறாய்? வேலைக்குப் போனதுமே, எனக்குத் தலை பளபளவென்று வெடித்து விடும் போல் இருந்தது. உடம்பு சரியாக இல்லை என்று வீட்டுக்குப் போக உத்தரவு கேட்டேன். அந்தக் கரடிப்பயல்-அவன் தாடியும் மீசையும் வைத்துக் கொண்டிருக்கும் பஞ்சாபி ஆனதால், நாங்கள் அவனை அப்படிக் கூப்பிடுவது வழக்கம். 'சன்'னென்று விழுந்து, 'பாசாங்கு பண்ணுகிறாய். கொடுக்க முடியாது' என்றான். நான் அதற்கு ஒன்றும் பேசவில்லை. நான் ஒரு மதராஸி என்று அவனுக்குச் சற்று இளக்காரம். உத்தியோகத்தில் அவனுக்கு அடுத்தபடி நான். ஏதாவது விஷமம் செய்து தன் பதவிக்கு நான் வந்து விடுவேனோ என்ற திகில் அவனுக்கு.



எங்கள் ஷாபரின்டு நல்ல மனிதர். யார் எந்த வேலையில் கெட்டிக்காரன் என்பதை அறிந்தவர். என்னிடத்தில் அவருக்குத் தனிப் பிரியம். இந்தக் காரியப் பயனாக்கா நான் மசியும் ஆள்? போய் ஒரு மேஜையின் மீது படுத்துக் கொண்டேன்; ஷாபரின்டு எதிர்பாராமல் எங்கள் இலாகாவுக்கு வந்தார். நான் படுத்திருக்கும் காரணத்தைக் கேட்டு விட்டு என்னை டாக்டரிடம் அனுப்பினார். டாக்டரும் எனக்கு ஜுரம்தான் என்று சொல்லி, மருந்துச் சீட்டும் எழுதிக் கொடுத்து வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டார். ஒரு வாரம் 'ஹாய்யாக' இருப்பேன் உன்னுடன். நீ கவலைப்படாதே'' என்றான்.

மங்களம் சமையலறைக்குச் சென்று சூடாகப் பார்லிக் கஞ்சி போட்டு எடுத்துக் கொண்டு நாகராஜனிடம் வந்தாள். அப்போது அவன் நிம்மதியாக ஒரு சிகரெட்டைப் பிடித்துக் கொண்டிருந்தான். மங்களம் திடுக்கிட்டாள். ''இதென்ன மறுபடியும்? இந்த இழவை விட்டுத் தொலைக்கவில்லையா? இனிமேல் கையால் கூடத் தொடுவதில்லை என்று எனக்கு ஆணையிட்டுச் சொன்னதை யெல்லாம் இப்பொழுது காற்றில் பறக்க விட்டு விட்டாய் போலிருக்கு'' என்றாள்.

நாகராஜன் வேண்டிக் கொள்ளும் பாவனையில், ''இல்லை, மங்களம்! நான் 'பாக்' குறைவில்லாமல் பிடித்தேன். இப்போது ஒரு நாளுக்கு நான்குக்குக் கொண்டு வந்து விட்டேன். இதோ பாரேன். இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இதைக் கட்டுப்படுத்தி விடு கிறேன்'' என்றான்.

''இந்தப் பித்தலாட்டம் எதற்கு? வாக்குறுதி தந்து மீறி விட்டீர்கள். நேற்று ராத்திரியே இதைக் கண்டுபிடித்து விட்டேன். உங்கள் வாயிலிருந்து லேசாக இந்த வாசனை வீசியது. எதற்காக என்னிடம் இந்த ஒளிப்பாட்டம்...! உங்கள் நன்மைக்குத்தான் சொன்னேன். புகை பிடிப்பவர்களுக்குப் புற்று நோய் வந்து விடுகிறதாம். அப்புறம் உங்கள் இஷ்டம்'' என்றாள் மங்களம்.

மங்களத்திடம் மாட்டிக் கொண்ட நாகராஜன் அசட்டுச் சிரிப்புடன், ''நேற்று என் பேரில் தப்பு இல்லை. அந்தக் கவியன் பிடித்த ராங்கள் போகும் வழியில் ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருக்கிறான். உபத்திரவம் பண்ணி ஒன்றைக் கொடுத்து விட்டான். பாழாக்க மனமிரா மல்தான் இதைப் பிடித்துத் தொலைத்தேன். இன்றோடு இதை ஒழித்து விட்டேன். உன் பேரில் ஆணை'' என்று பிராயச்சித்தம் செய்து கொண்டான்.

''சரி போகட்டும். இது எத்தனையாவது புளுகோ! மருந்து கொடுக்கவில்லையா டாக்டர்?'' என்றாள் மங்களம்.

''மருந்துச் சீட்டென்னவோ அவர் கொடுத்தார். அப்படி என்ன பிரமாத ஜுரமென்று வழியிலேயே கிழித்துப் போட்டு விட்டேன், சீட்டை!'' என்றான் நாகராஜன்.

''அப்படியானால்...''

''அதனால் என்ன? எனக்கு ஒன்றுமே இல்லை. அப்போது எதனாலோ கொஞ்சம் கதகதவென்றிருந்தது. இந்தத் துளியூண்டு ஜுரத்துக்கே நீ இப்படி விழுந்து போய்

விட்டாயே. வா, இப்படி. என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொள்."

நாகராஜனுக்குத் தன் மனைவியுடன் என்ன பேசுவதென்று தெரியவில்லை.

"இன்றைக்கு அந்தப் பசுமாட்டை அந்த மராட்டிச்சி உன் பூந்தோட்டத்திலே மேய விடவில்லையே?" என்றான் நாகராஜன்.

மங்களம் அவனையே தன் அகன்ற விழிகளால் நோக்கி முகத்தில் சிரிப்பின் சாற்று குமிழ்க்க எதுவுமே பேசாமல் இருந்தாள்.

"ஏதாவது என்னுடன் பேசேன்" என்று நாகராஜன் மங்களத்தை இன்னும் தன் அருகில் இழுத்துக் கொண்டான்.

ஜன்னல் நன்றாகத் திறந்திருந்தது. "யாராவது பார்க்கப் போகிறார்கள்? உடம்பு சரியில்லாத மனிதரா நீங்கள்?" என்றதும், படுக்கையில் சற்று நகர்ந்து உட்கார்ந்தாள்.

மருந்துபோல் மங்களம் பக்கத்திலேயே இருக்கும்போது நாகராஜனுக்கு நோய் திருவதற்கு என்ன தடை! மறுநாளே உடம்பு குணமாகி, அவன் முக க்ஷவரம் செய்து கொண்டு குளிக்கக்கூடக் குளித்தான். அவன் வீட்டிலிருந்த அந்த நாலைந்து நாட்களும் மங்களத்தின் மனத்தை உறுத்தி எடுத்த ஓர் ஏக்கம் எவ்வளவோ தணிந்திருந்தது. கணவன் உள்ளத்தை இன்னும் தன் இதயத்தின் அண்மையில் பெற்றாள்.

வேலையில் சேர வேண்டிய நாள் வந்தது. இன்பத்திலும் நீண்ட சோம்பலுடன் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் நாகராஜன். தொழிற்சாலைச் சங்கு உச்சஸ்தாயியில் ஒலித்துப் படிப்படியாக அதன் ஸ்வரமும் அடங்கி விட்டது. நாகராஜன் எழுந்திருக்கவில்லை. மங்களம் படுக்கை அறைக்கு வந்து, "என்ன! சங்கு ஊதியாயிற்று. வேலைக்குப் போக வேண்டாமோ? இப்படிப் படுத்துக் கொண்டிருக்கிறீர்களே!" என்று தன் தாடையை அவன் கன்னத்தில் பதித்தாள்.

"எனக்கு எதனாலோ எழுந்திருக்கவே பிடிக்கவில்லை" என்றான் நாகராஜன் சோம்பல் முறித்துக் கொண்டே.

"மறுபடியும் உடம்புக்கு ஏதாவதா?" என்றாள் மங்களம், அவன் கழுத்தில் கையை வைத்துப் பார்த்து.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இந்தக் கட்டைக்கு ஒரு கேடும் வராது."

மங்களம் ஜன்னல் பக்கமாகப் போய் நின்றாள். வழக்கம்போல் எட்டு மணிக்குச் செல்லும் சென்னை எக்ஸ்பிரஸ் தண்டவாளத்தின் மீது உருண்டு ஓடவே அந்த அதிர்ச்சி அறையெங்கும் பரவியது.

"மங்களம்!" என்று கனிவுடன் கூப்பிட்டான் நாகராஜன். ஜன்னலை விட்டு முகத்தைத் திருப்பாமலே அவள், "என்ன, சொல்லுங்கள்!" என்றாள்.

படுக்கையை விட்டு நாகராஜன் தன் இனியாளோடு ஜன்னலருகில் வந்து நின்றான். மெள்ள அவள் தோள்புறம் கையை வளைத்து அவள் தலையுடன் தன் தலையைச் சாய்த்து, "என்ன பண்ணுகிறாய், மங்களம்? இந்த இடம் உனக்குப் பிடிக்கவில்லையா? ஊருக்குப் போகலாமா நாம்?" என்றான் புது கொஞ்சுவது போல்.



தாயார் : நெருப்புப் பெட்டி வாங்கி வரச் சொன்னேனே, எங்கேடா ?

மணி : அதில் ஒரு குச்சி வீதியில் விழுந்து விட்டது....!

தாயார் : போகிறது. பாக்கிக் குச்சிகள் எங்கே ?

மணி : விழுந்த குச்சியைத் தேடுவதற்கு அந்தக் குச்சிகளை யெல்லாம் கொளுத்திப் பார்த்து விட்டேன்!

அப்போது மங்களத்துக்கு உண்டான ஓர் உணர்ச்சி, அது இன்பமா, வேதனையா என்பது அவளுக்கே தெரியாது. நாகராஜனுடைய மொழிகள் அவள் உடம்பில் உள்ள அத்தனை நரம்புகளையும் வீணையின் ஜங்காரமென ஒலிக்கச் செய்து விட்டன.

சற்று நேரம் வரை இருவருமே தம்மைச் சுற்றியுள்ள உலகத்தையே மறந்தனர். ஜன்னல் நன்றாகத் திறந்திருந்தது. காற்று கட்டுக்கு அடங்காத சிறு பிள்ளைபோல் அறையினுள் நுழைந்து ஓடி விளையாடியது. சுவரில் இருக்கும் காலண்டரின் ஏடுகள்கூடப் 'பர்பர்' எனத் திறந்து மூடியது.

ஓர் இன்பக் கனவில் தோய்ந்து வருவது போலவே இருந்தது நாகராஜனின் குரல். "இந்தக் காடு மலையெல்லாம் தாண்டி ஒரு சின்ன ஸ்டேஷனில் இறங்கிப் பச்சை வயல்களையும் இருண்ட தோப்புக்களையும் ஊடுருவிச் செல்லும் செம்மண் பாதை முடிவடையும் அந்த அழகிய கிராமத்துக்குத்தானே !"

"அரும்பாக்கத்துக்கா ?" — மங்களத்தின் உள்ளம் குதித்தது.

"அந்த அழகிய ஊரை என்னால் மறக்கவே முடியாது, மங்களம் ! இந்த இரண்டு வருஷங்களாக நான் கவனித்து வருகிறேன். உன் மனமெல்லாம் அங்கேதான். நீ பிறந்து வளர்ந்து விளையாடின இடமல்லவா ? உன் அம்மாவையும் அப்பாவையும் நீ பார்த்து நாளாயிற்று. இந்த ஏக்கத்தை நீ வாய்விட்டுச் சொல்லாமற் போனாலும் உன் கண்களில் அதைக் காண்கிறேன்" என்றான் நாகராஜன்.

மங்களத்துக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. கண்ணீர் பீறிட்டு வரவே முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள். அந்தப் பழைய சித்திரங்கள் அந்தக் கண்ணீரிடையே அவள் உள்ளத்தில் மின்னி மறைந்தன.

மஞ்சள் வெயிலில் மாந்தோப்பில் இலைகள் எங்கும் தங்க மூலாம் பூசுகிறது. செங்கண் குயில் வாய்விடாமல் கூவுகிறது. மாம்பூவின் மணம் எங்கும் வீசுகிறது. இடுப்பில் நீர் ததும்பும் குடத்துடன் வீட்டை நோக்கி அந்தத் தோப்பு வழியாகப் பதினைந்து வயதுப் பாவை ஒருத்தி தனியாக வருகிறாள். அவளுடைய தோழிமார்கள் சற்று முன்னால் செல்கின்றனர். பறவைகளின் இன்குரல்களும் அந்திப் பொழுதின் அழகும் அப் பாவையின் உள்ளத்தைப் பறி கொண்டு விடுகின்றன. அவள் பராக்காகச் செல்கிறாள். புதர் சூழ்ந்த பாதையின் ஒரு திருப்பத்தில்... 'டொக்' என்று ஒரு நெல்லிக்காய் அவள் குடத்தின் மேல் விழுகிறது. புதர் மறைவில் இளைஞனின் சிரிப்புக் குரல் கேட்கிறது. பாவை புருவம் வளைத்து, 'எந்தக் குரங்கு அது?' என்கிறாள். மறைந்திருந்த அந்த இளைஞன் வெளிப்பட்டு, "நான் வேணுமென்று அடிக்கவில்லை. உன் மேல் இலக்குத் தவறி விட்டது" என்கிறான் குறும்புச் சிரிப்புடன். 'உம்' என்று அந்தப் பெண் அவனையே சற்று நேரம் உற்று நோக்கிப் பக்கெனத் தன் முல்லை முறுவலைக் காட்டிச் சிக்கென ஓடிப் போய் விடுகிறாள்.

"ஏன் பேசாமல் இருக்கிறாய், மங்களம் ? என்ன நினைவில் ஆழ்ந்து விட்டாய் ?"

நாகராஜன் பக்கமாகத் திரும்பி, "ஒன்றுமில்லை" என்றாள். உடனே வெட்கம் அவள் கன்னங்களில் கனிய, "பழைய கதை ஒன்று நினைவுக்கு வந்தது !" என்றாள்.

"ஓ, குளத்திலிருந்து நீ திரும்பி வரும் போது நெல்லிக்காயை நான் உன் மீது விட்டெறிந்தேனே, அந்தக் கதைதானே ? என்னை அப்போது நீ பார்த்த பார்வை, அப்போது நீயும் சரி, நானும் சரி, நினைத்தோமா ஒரு நாள் இப்படி நாம் உள்ளம் இணைய உடல் சேரப் புருஷனும் மனைவியுமாக இருப்போம் என்று? நெல்லிக்காய் தின்ற வாய்க்கு நீரைப் போல் வாழ்வில் இன்பம் காண்போமென்று நினைத்தோமா ?" என்றான் நாகராஜன்.

"போங்கள், உங்களுக்கு வேறு என்ன பேசத் தெரியும்?" என்றதும் மங்களம் நாகராஜனின் தாடையை நெருடினாள்.

"மாமா வீட்டுக்கு லீவுக்காக வந்திருந்தேன். உன்னை அந்தக் குளக்கரையில் பார்த்ததுமே என் மனத்துள் நீயே நிரம்பி விட்டாய். உங்கள் அப்பாவுக்கும் என்மேல் அபிப்பிராயம் விழுந்தது. மாமாவைக் கேட்டார். அவரும் சம்மதித்தார். அந்த மாதக் கடைசியிலேயே அந்த அழகிய ஊரிலே நமக்குக் கல்யாணம் நடந்தது. அதற்கு அடுத்தது இந்தப் பேப்பர் மில்லில் எனக்கு வேலையாயிற்று. உன்னையும் நான் அழைத்துக் கொண்டேன். இந்த நாலு வருஷங்களாக நானும் தான்பார்க்கிறேன், எனக்கு ஏதாவது 'இரேட்' உயரும் என்று. அந்தப் பாவி பஞ்சாபி முட்டுக்கட்டை போடுகிறான். இப்படி இங்கே உழைப்பதைவிட ஊருக்குத் திரும்பி நிம்மதியாக வாழலாம். மாமா தம் ஆஸ்தியை எனக்குத்தான் எழுதி வைத்து விட்டார். எட்டு ஏக்கரா நன்செய். இறைக்க இறைக்க வற்றாத கிணறுகள் இரண்டு. நமக்கு என்ன குறைவு, மங்களம்! ஒருபோகம் விளைந்தாலும் இரண்டு வருஷங்கள் உட்கார்ந்து சோளம்

சாப்பிடலாமே! நான் வேலையை விட்டு விடலா மென்று உறுதி கொண்டு விட்டேன். அந்தக் கரடிப் பயல் இருக்கும் வரையில் நமக்கு என்னமோ பிரமோஷன் கிடைக்காது'' என்றான் நாகராஜன்.

அனலை வீசும் சூரியன் மேற்குத் திசையில் மலைக்குப் பின் மெல்லத் தாழும் சமயம். வெள்ளை 'ஷர்ட்' அணிந்துகொண்டு நாகராஜன் பிரம்புத் தடியைக் கையில் சுழற்றிய வண்ணம் கிளம்பிச் சென்றான். வீட்டுக் காரியத்தை யெல்லாம் முடித்துக் கொண்டு மங்களம், மெல்லப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் உள்ளங் கையிலும், கால்களிலும் ஒரு ஊறல், யந்திரம் போல் இரைச்சல் மிகுந்த இந்த வியர்த்த வாழ்விலிருந்து தண்ணிய நிழலும், பசுமை ஒளியும் நிரம்பிய ஓர் உலகுக்குச் செல்ல அவள் இதயம் துடித்தது. அதன் எதிரொலியே பாட்டாக வெளிவந்தது அவளுக்கு.

இருட்டுவதற்கு முன்பே வெளியே சென்ற நாகராஜன் திரும்பி விட்டான். உடம்பிலிருக்கும் வெளுப்புச் சட்டையைக் கழற்றி விட்டு, ஒரு மன நிறைவுடன் மங்களத்தையே நோக்கினான். மங்களம் இத்தனை நாட்கள் பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்த அந்த ஆகாய வர்ணச் சேலையை அணிந்து கொண்டிருந்தாள். இந்த எழில் உருவில் அவளை முதன் முதலில் கண்டது, அவளை அழைத்துக் கொண்டுவர ஊருக்குச் சென்றிருந்த போது. ஆனால் அப்போது அந்த முகத்தில் உலவிய களை எங்கே? இப்போது அது வதங்கியே விட்டது. இன்று திடீரென்று மறுமலர்ச்சியைக் கண்டு அவள் உவகை பூத்தாள்.

''மங்களம்! ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். நான் வேலையை ராஜிநாமாசெய்துவிட்டேன்'' என்றான். தரை மீது சுருட்டிக் கிடந்த படுக்கை மீது மங்களம் தொப்பென்று உட்கார்ந்து, ''அப்புறம்?'' என்றாள்.

''அப்புறம் என்ன? அவன் கீழ் வேலை செய்ய முடியாது. நாளை மாலை வண்டிக்கே நாம் எப்படியாவது ரயில் ஏறி விடலாம். இந்த இருநூறு ரூபாய் உத்தியோகம் போய் விட்டால் உலகமே அஸ்தமித்து விடுமா? நிலம் இருக்கு; பாடுபட்டுப் பயிர் வைத்தால் நாலு பேருக்குப் போட்டு நாமும் சாப்பிடலாமே. வேலையை விட்டு விடுகிறேனே என்று நீ கவலைப்படாதே! எனக்கு இளம் வயது. இந்தப் பிழைப்பிராது போனாலும் வேறு எங்கேயாவது கிடைக்காமல் போய் விடுமா?'' என்று கூறினான்.

''ஐயோ! நல்ல வேலையை விட்டுவிட்டா போவது?'' என்றாள் மங்களம் மிகுந்த மனவேதனையுடன்.

''பின் என்ன மங்களம்! நானும் இந்த நாலு வருஷங்களாக நல்ல 'கிரேட்' வரும் என்று எதிர்பார்க்கிறேன். ஒன்றும் நடக்கவில்லை. முன்னைவிட எங்கள் முதலாளிக்குக் கொள்ளை லாபம் வருகிறது; 'போனஸோ' எதுவும் கிடையாது... எதற்காக நான் உழைக்க வேண்டும்? இன்று இந்த வேலைக்குத் தலைமுழுக்குப் போட்டு விட்டேன்'' என்றான்.

மங்களம் இதையெல்லாம் மௌனமாகவே கேட்டு வந்தாள். கணவனின் சுக துக்கத்தைத்

தழுவியே மனைவியின் வாழ்வும் பிணைபட்டு இருக்க வேண்டும். இந்தச் சோதனைக் காலத்தில் அவள் எப்படித் தனித்து நிற்க முடியும்? மங்களத்தின் உள்ளத்தில் ஒவ்வொரு புரையிலும் இந்த உணர்ச்சிகளே நிரம்பி இருந்தன. அவள் மெதுவான குரலில், "ஆனால் ராஜிநாமா செய்து விட்டீர்களா?" என்றாள்.

"செய்து விட்டேன். ஆனால் அதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்காக இரண்டு நாட்கள் இங்கே காத்திருக்க முடியுமா, என்ன? அதற்கு அவசியமில்லை" என்றான் நாகராஜன். சற்று நேரம் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து, "நாளை மத்தியானமே எல்லாவற்றையும் தயாராகக் கட்டி வைத்து விடலாம். இந்தக் கட்டில் மேஜை எல்லாம் எதற்கு? வந்த விலைக்கு விற்று விடும்படி கோட்னிஸிடம் சொல்லியிருக்கிறேன். ராத்திரி எட்டு மணிக்கு வண்டி" என்றான் நாகராஜன்.

பெரிய சாலைக்குச் சென்றால்தான் டாக்ஸி கிடைக்கும். அரை மணி நேரம் காத்த பிறகு ஒரு டாக்ஸி வந்தது. சமிக்ஞை செய்து அதை நிறுத்தி, அதில் ஏறிக் கொண்டு தன் வீட்டிக்கு வந்தான் நாகராஜன். பெட்டி, படுக்கைகளைப் பின்புறம்வைத்ததும், மங்களத்துடன் நாகராஜன் காரில் ஏறிக்கொண்டான்.

திடுமென்று இவர்கள் வீட்டை ஒழித்துக் கொண்டு போவதைப் பார்த்து அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் விஷயம் என்னவென்று புரியாமல் அதிசயத்துடன் நோக்கினார்கள். போகிற பரபரப்பில் அண்டையாளிடம்கூட விடைபெற்றுக் கொள்ள முடியவில்லை, மங்களத்தால். நாலு வருஷங்களாகப் பழகிப்போன சூழ்நிலையை விட்டுப் பிரிந்து போவது அவளுக்குச் சற்றுக் கஷ்டமாகவே இருந்தது.

ஸ்டேஷன் பிளாட்பாரம். சாமான்களுக்கு இடையே மங்களம் வீற்றிருந்தாள். வண்டி ஒன்றரை மணி நேரம் தாமதமாக வருமென்று அறிவிக்கப்பட்டது. நாகராஜன் மங்களத்தைப் பார்த்து, "பூரி ஏதாவது வாங்கிக் கொண்டு வரட்டுமா? பசித்தது என்றால் சொல்லு. ஸ்டேஷனில் இத்தனை பேர்கள் எதிரில் எப்படிச் சாப்பிடுவது என்று கூச்சப்படாதே. பிரயாணத்தில் இதெல்லாம் பார்த்தால் முடியாது" என்றான்.

"எனக்குப் பசியே இல்லை. வழியில் எப்படி இருக்குமோ என்று தயிர்சாதம் பண்ணி டிபன்காரியரில் வைத்திருக்கிறேன்!"

பிளாட்பாரத்தின் கோடியில் கரேலெனத் தென்படும் இருட்டு. தொலைவில் ஸிக்னல் மரத்தில் ஜொலிக்கும் சிவப்பு விளக்கு. தொடுவானில் வைரம் போல் மின்னும் தாரகைகள்.

"சரி! வண்டி வர இன்னும் ஒரு மணி நேரமிருக்கு. எடு, பார்ப்போம். நானாவது சாப்பிடுகிறேன். நல்ல பசி எனக்கு."

மங்களம் டிபன் காரியரின் மூடியைத் திறக்க எழுந்திருந்தாள். 'நாகராஜ்' என்று ஒரு குரல் கேட்டது. நாகராஜன் திரும்பிப் பார்த்தான். அவனுடன் வேலை செய்யும் மராட்டி நண்பன் கோட்னிஸ்தான். "உன்னை எங்கேயெல்லாம் தேடுவது? குவார்டர்க்குப் போனேன். கதவு பூட்டிக் கிடந்தது. விசாரித்தேன். திடுமென்று நீங்கள் ஊருக்குக் கிளம்பிப் போய்விட்டதாகச் சொன்னார்கள். இதோ ஸ்டேஷனுக்கு ஓடி வந்தேன். நல்ல காலம் 'ட்ரெயின்' ஒரு மணி நேரம் 'லேட்'. இல்லா விட்டால் உன்னைப் பார்த்திருக்க முடியாது. ஒரு முக்கிய சமாசாரம். இப்படி வா" என்று காலியாக இருக்கும் ஒரு பெஞ்சுக்கு அழைத்துச் சென்றான் அவன்.

"என்ன இது, என்னிடம் ஒன்றுமே சொல்லாமல் கிளம்பி விட்டாயே. அந்தக் 'கரடி'ப் பயலுக்குப்பயந்தா ஓடுகிறாய்? நீ மத்தியானமே போய் விட்டாயா? அப்புறம் என்ன நடந்தது, தெரியுமா? நம்முடைய டிபார்ட்மெண்ட் 'ஸ்டிரைக்' செய்து விட்டது. டைரக்டரே வந்து அந்தக் 'கரடி'ப் பயலைக் காரணம் கேட்டார். அவன் என்னவோ உளறினான். உன் பேரிலும் புகார் எதுவோ சொன்னான். என்ன நடக்குமோ என்று பயந்தோம். டைரக்டருக்கும் அவனுக்கும் வலுத்த வாய்ச் சண்டை மூண்டது. பயல் சட்டென்று ஒரு கடிதத்தில் ராஜிநாமா எழுதிக் கொடுத்து விட்டுப் போய் விட்டான். டைரக்டரும் அதை ஒப்புக் கொண்டு விட்டார். சனியன் பிடித்தவன் தொலைந்தான்."

"அப்புறம்? அவன் இடத்துக்கு யாரைப் போடப் போகிறார்கள்?"

"வேறு யார் இருக்கிறார்கள்? நீதானே ஸீனியர்? இந்தச் சான்ஸை விட்டு விடாதே! சட்டென்று மானேஜரைப் போய்ப் பார்!"

"நிஜமாகவா?"

"ஆம், உன் பெயரைத்தான் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று மானேஜருடைய கிளார்க் சொன்னான். உன் ராஜிநாமாவை ஏற்றுக் கொள்ள வில்லையாம்."

இப்படி நிகழ்ந்ததால் மங்களத்தின் மனத்துள் பொங்கி யெழுந்த ஓர் இன்பத்தின் இசை தாளம் தவறியோ, சுருதி தப்பியோ செல்லவில்லை. என்றும் போலத்தான் அந்தக் குன்றுகளும் காடும், ரயில் பாதையும், சாலை ஓரத்து மரங்களும் அவள் வீட்டு ஜன்னல் வழியாகக் கண்ணுக்குப் புலனாயின. உத்தியோக உயர்வினால் இப்போது சற்றுச் சுமாரான 'குவார்டர்ஸ்' அவர்களுக்குக் கிடைத்தது. சென்னைக்குச் செல்லும் அதே எக்ஸ்பிரஸ் வண்டி தண்டவாளத்தின் மீது விசையாக ஓடுகிறது. அதே பருவ காலங்கள்தான் மாறி மாறி வருகின்றன. தன்னையே மறந்து மங்களம் நிற்கும் அதே ஜன்னல் ஓரந்தான். எத்தனையோ ஆறுகள், காடுகள், மலைகள், ஊர்கள் இவற்றை யெல்லாம் தாண்டி இருண்ட தோப்பினுள் நாணத்துடன் தன்னை மறைத்துக் கொள்ளும் அவள் சிறு வயதில் இன்பம் கண்ட அந்த ஊரின் சித்திரம் மட்டும் அவள் மனத்தை விட்டு அகலவே இல்லை. அவள் வேற்று நாட்டிலிருந்தாலும், அவ்வூரின் பச்சை நிழலே அவள் கண்களில் ஆடியது. அதைப் பற்றி இனிய கனவுகளையே அவள் ஒவ்வொரு நாளும் காண்கிறாள். இன்னும் எத்தனை நாட்கள் இப்படி அவள் தன் அழகிய பிறந்தகத்துக்குச் செல்ல ஏங்கி எதிர்நோக்கி இருப்பாளோ?


Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

லட்சிய பூர்த்தியின் வாயிலிலே

கடந்த அக்டோபரில் ஜாம்ஷெட்பூரிலே ரூ 70 மில்லியன் செலவில் புதிய ப்ளாஸ்ட் ப்வர்னேஸை இயங்கச் செய்தது. உற்பத்திச் சக்தியை ஆண்டொன்றுக்கு இரு மில்லியன் டன்னுக்கவென்று 1955 டிஸம்பரில் டாடா ஸ்டீல் தொடங்கிய விரிவான திட்ட பூர்த்தியின் ஆரம்பமாகும்.

உலகிலுள்ள மிகப் பெரியவைகளில் ஒன்றான இப்புதிய ப்ளாஸ்ட் ப்வர்னேஸ், நாளொன்றுக்கு 1,650 டன் இரும்பு உற்பத்தி செய்யும். இதற்கு முன்னர், ஏழு ஓபன் ஹெர்த் ப்வர்னேஸ்களுள்ள மூன்றாவது ஸ்டீல் மெல்டிங் ஷாப் பூர்த்தியாக்கப் பட்டது. ஆண்டொன்றுக்கு இது மட்டுமே 1.3 மில்லியன் டன் ஸ்டீல் இங்காட்ஸ் உற்பத்தி செய்யும். தவிர, ரூ 100 மில்லியன் செலவில் இரு மில்லியன் டன் பிரைமரி ரோலிங் சக்தி கொண்ட புதிய ப்ளூமிங் மில் இப்பொழுது இயங்கி வருகிறது.

தாதுப் பொருள் சேகரிப்பதிலிருந்து உருக்கு ரோலிங் தயாரிப்பது வரையிலுமுள்ள ஒவ்வொரு நிலையின் இயக்கமும் பூரணமாகி, விரிவான திட்டம் 1958 இறுதியில் பூர்த்தி பெறும். 1955-60 இவ் ஐந்தாண்டுகளில் விரிவான திட்டத்திற்கும், வருடா வருடம் இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் புதிய இயந்திரங்கள் அமைப்பதற்குமாக டாடா ஸ்டீலின் முதலீடு ரூ 1,330 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது, தனியார் தொழில் ஸ்தாபனங்களின் மொத்த முதலீட்டின் ஐந்தில் ஒரு பங்கிற்கு அதிகமானது.



டாடா ஸ்டீல்

இரு மில்லியன் டன் உற்பத்திக்கு

TN 3186

The Tata Iron and Steel Company Limited

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

